பக்கங்கள்: 20

விலை: 30.00

தீம்புனல்

THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:17 21.08.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052

தலிபான்களின் மீள் எழுச்சிக்கு பின்னால் அமெரிக்காவின் கொள்கைவகுப்பு காரணமாக அமையுமா?

பக்கம் 02

யோசுவாவின் "புதிய சுவை"

பக்கம் 10

செல்வழகன்

கண் கெட்ட பின்னே சூரிய நமஸ்காரம்

> வைத்திய நிபுணர்களின் உத்தியோக பூர்வ அறிவிப்பு எமக்குக் கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைத்தால் நாட்டை முடக்கத் தயாராக உள்ளோம் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமண தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலாக மருத்துவ சங்கங்கள் போர்க் கொடி தூக்கி, எதிர்க் கருத்து வெளியிட்டன. தாம் பல முறை ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிவிட்டதாகவும், இதோ இப்போது மறுபடியும் கடிதம் அனுப்புவதாகவும் அவை அறிவித்தன.

நாட்டை முடக்குங்கள் என்ற கூக்குரலே கொரோனா ஒப்பாரிகளுக்கு மேலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. நாடு பிணக்காடாகி, சுகாதாரத் தரப்புகள் கையறு நிலையை அடையும் முன்னர் நாட்டை முடக்குமாறு சுகாதாரத் தரப்பினரும், நாட்டின் புத்திஜீவிகளும், அரசியல்வாதிகளும் கேட்டுக் கொண்டே இருக்கின்றனர். இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியோ என எண்ணும் வண்ணமாக கேளாச் செவியராக ஆட்சியாளர்கள் வாளாவிருக்கின்றனர்.

இலங்கையிலுள்ள சுமார் இரண்டு கோடி 19 இலட்சம் மக்களில் 5.5 வீதமானோர் தொழிலின்றி இருக்கின்றனர் என்று மத்திய வங்கியின் 2020 இறுதிக் காலாண்டு அறிக்கை கூறுகிறது. இது அண்ணளவாக 11 இலட்சம் பேராகும். 20 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அன்றாடங் காய்ச்சிகளான கூலித் தொழிலாளர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. கடைகளில் பணி புரிவோர், பேருந்து சாரதிகள்,

▶19

மு.தமிழ்ச்செல்வன்

அதி அபாய மாவட்டமும் லட்சியமாகக் காணப்படும் பொது மக்களும்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 46 ஆயிரம் பொது மக்கள் உள்ளனர். இந்தச் சனத்தொகையில் நாளாந்தம் 100 க்கு மேல் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அதிலும் பரிசோதனைக்கு செல்கின்றவர்களிலேயே இந்த எண்ணிக்கையான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இதுவொரு ஆபத்தான நிலைமை. ஆனால் பொது மக்கள் இந்த ஆபத்தான நிலைமையினை உணர்ந்துகொண்டு செயற்படுகின்றவர்களாக இல்லை. எல்லாவற்றுக்கும் அரசையும், சுகாதார துறையையும் நோக்கி விரல்களை நீட்டிவிட்டு நாம் கடந்துசெல்ல முடியாது.

வருமுன் காப்பதில் பொது மக்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. நாம் எம்மையும் எமது உறவுகளையும் எம் சார் சமூகத்தையும் பெரும் தொற்றபாயத்திலிருந்து பாதுகாக்க வேண்டுமாயின் பொறுப்புடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடந்துகொள்ள வேண்டியது அனைவரதும் கட்டாய கடமையாகும். அதுவும் கிளிநொச்சி போன்ற தொற்று வேகமாகப் பரவும் மாவட்டத்தில் இது மிக மிக அவசியமானது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது கொரோனா நோயாளி 07.11.2020 அடையாளம் காணப்பட்ட நாள் தொடக்கம் கடந்த மாதம் 31 திகதி வரை 1400 தொற்றாளர்கள். ஆனால் இந்த மாதம் (ஓகஸ்ட்) முதல் 16 நாட்களில் மாத்திரம் 1246 தொற்றாளர்கள்.

நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனா தற்போது கிளிநொச்சி மாவட்டத்திலும் அதிதீவிரமாக பரவத் தொடங்கியுள்ளது. என்பதனையே இது காட்டுகின்றது.

கடந்த 04.08.2021 அன்று இலங்கை தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவினரால் வெளியிடப்பட்ட தரவுகளில் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகர் பிரிவுகளும் கொரோனா அதி அபாய (சிவப்பு) வலயங்களாக இனங்காட்டப்பட்டுள்ள நிலையில் கடந்த சில தினங்களாக தினமும் பாரிய அளவில் கொரோனா நோயாளர்கள் கிளிநொச்சியில் கண்டறியப்பட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத்துறையினரின் அறிக்கைகளின்படி மாவட்டத்தில் இயங்கும் இடைத்தங்கல் வைத்தியசாலைகள் இரண்டும் தொற்றாளர்களால் நிரம்பிவிட்டன. மாகாண சுகாதாரப் பணிப்பாளரது தகவல்களின் படி மாகாணத்தில் உள்ள சகல இடைத் தங்கல் வைத்தியசாலைகள் மற்றும் விசேட கொரோனா விடுதிகள் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன.

இவ்வாறான ஒரு நிலையில் புதிதாக



> வருமுன் காப்பதில் பொது மக்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. நாம் எம்மையும் எமது உறவுகளையும் எம் சார் சமூகத்தையும் பெரும் தொற்றபாயத்திலிருந்து பாதுகாக்க வேண்டுமாயின் பொறுப்புடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடந்துகொள்ள வேண்டியது அனைவரதும் கட்டாய கடமையாகும். அதுவும் கிளிநொச்சி போன்ற தொற்று வேகமாகப் பரவும் மாவட்டத்தில் இது மிக மிக அவசியமானது.

இனங்காணப்படுபவர்களில் ஒட்சிசன் தேவை உடையவர்கள் மற்றும் பிற நோய்த் தாக்கம் உள்ளவர்கள் உட்பட வைத்திய சாலை அனுமதி உடனடியாக தேவைப்படுபவர்களை அனுமதிப்பதில் ஏற்படக்கூடிய தாமதங்கள் அவர்களது உயிருக்கே உலை வைக்கலாம்.

மாவட்ட சுகாதார ஆளணியினர் இரவு பகல் பாராது கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பணியாற்றுவதால் உள மற்றும் உடற்சோர்வுகளுக்கு ஆளாகியுள்ள இத்தருணத்தில் அவர்களது வேவைப்பளுக்களை அதிகரிப்பதால் பல்வேறு மனித வழுக்கள் நேரிடத் தொடங்கியுள்ளன.

அன்ரிஜன் சோதனையில் எதிர்மறையான முடிவு வந்துள்ளதாக வீட்டுக்கு அனுப்பப்பட்ட முதியவர் ஒருவர் தமது நோய் அறிகுறி முற்றியதும் வைத்தியசாலைக்கு செல்ல நோயாளர் காவு வண்டியை கோரியுள்ளார். அப்போதுதான்

▶19

தலிபான்களின் மீள் எழுச்சிக்குப் பின்னால் அமெரிக்காவின் கொள்கைவகுப்பு காரணமாக அமையுமா?

லக்சனா பாலகுமாரன்

ஆப்கானிஸ்தானிலிருந்து வெளிநாட்டுப் படைகள் மீளப்பெற்றுக் கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியதிலிருந்து ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்களைக் கைப்பற்றத் தொடங்கிய தலிபான்கள், கடந்த சில நாட்களில் யாரும் எதிர்பாராத வேகத்தில் தலைநகர் காபூலைக் கைப்பற்றியமை வெளிநாடுகளைச் சேர்ந்த அரசியல் நிபுணர்களுக்கே அதிர்ச்சியாக இருந்தது. பல முக்கிய நகரங்களைக் கைப்பற்றிய பிறகு தான் தலைநகரான காபூலை தலிபான்கள் அதிரடியாகக் கைப்பற்றினர்.

இருபது வருட அமெரிக்கத் தலையீடு, ஆயிரக் கணக்கான உயிரிழப்புக்கள், குறைந்த பட்சம், ஒரு டிரில்லியன் அமெரிக்க டொலர் சொத்துச் சேதங்களுக்குப் பின்னர் ஆப்கானிஸ்தானை மீண்டும் தலிபான்கள் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளனர். தலிபான்கள் தலைநகர் காபூலுக்குள் நுழைந்த பிறகு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானியும் தஜிகிஸ்தானுக்கு நாட்டை விட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து, தலிபான் அதிகாரிகள் விரைவில் அந்நாட்டை ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகம் (Islamic Emirate of Afghanistan) என அறிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். விரைவாக ஒரே நாளில் சூழல் மாறி விட்டதால், காபூல் முழுக்க குழப்பம் நிலவி வருகிறது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய நிலையில் பலர் அங்கிருந்து வெளியேறுவதற்காக விமான நிலையங்களில் குவிந்தனர். நகரப் பேரூந்துகளில் ஏறுவதற்கு முண்டியடிப்பது போல் பலர் விமானங்களில் ஏற முயற்சித்து வரும் வீடியோக்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. ஆப்கானிஸ்தான் படையுடன் எந்தவித சண்டையும் இன்றி காபூலை தலிபான்கள் எளிதாக கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் காபூலிலுள்ள தங்கள் நாட்டினரை உலக நாடுகள் பாதுகாப்பாக வெளியேற்றி வருவதுடன் உலக நாடுகளின் தூதரகங்களும் மூடப்பட்டன. பல பெரிய விமான நிறுவனங்கள் ஆப்கானிஸ்தான் வான் வெளியைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இக்கட்டுரை ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் உடனடியான வெற்றிக்கு அமெரிக்கா தான் காரணமா? என்பதை தேடுவதாக அமைந்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் தற்போதைய குழப்பத்திற்குக் காரணம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் படை விலக்கல் முடிவு எனப் பலர் குற்றம் சாட்டி வருகின்றனர். ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் தோல்வி அமெரிக்கா அடைந்த தோல்வியாக சித்தரிக்கப்பட்டு வருகின்றது. வியட்நாம் மற்றும் கியூபாவில் அமெரிக்கா அடைந்த தோல்விகளுடன் ஆப்கானிஸ்தானின் தோல்வியினையும் ஒப்பிட்டு நிறையக் கருத்துகளும் கட்டுரைகளும் வெளிவந்தவண்ணமுள்ளன.

அமெரிக்காவின் குழப்பமான பின்வாங்கல் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இழைத்த துரோகம் என இடது மற்றும் வலதுசாரி ஊடகங்கள் ஒன்றிணைந்து குற்றம் சாட்டியுள்ளன. ஆப்கானிஸ்தான் நெருக்கடியை ஜோ பைடன் கையாண்டதற்கு அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவிலுள்ள அரசியல் பிளவு உள்ள ஊடகங்கள் தங்கள் கண்டனத்தில் ஒன்றிணைந்துள்ளன. ஆப்கானிஸ்தானை "கைகழுவுதல்" என்ற ஜோ பைடனின் செயல் என வால் ஸ்ரீட் பத்திரிகை கண்டனம் தெரிவித்துள்ளது.

சி.என்.என் கட்டுரையாளர் கூறுகையில் ஆப்கானிஸ்தானின் தோல்வி மற்றும் குழப்பமான பின்வாங்கல் அமெரிக்க ஜனாதிபதிக்கான அரசியல் பேரிழிவு என குறிப்பிட்டுள்ளார். தி அட்லாண்டிக் பத்திரிகையில் கருத்து எழுதுபவர், "அமெரிக்காவின் இந்த செயல் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இழைத்த துரோகம்" என்று ஜோ பைடன் மீது சுமையை வைக்கிறார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து வெளிநாட்டுப் படைகள் மீளப்பெற்றுக் கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியதிலிருந்து ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்களைக் கைப்பற்றத் தொடங்கிய தலிபான்கள், கடந்த சில நாட்களில் யாரும் எதிர்பாராத வேகத்தில் தலைநகர் காபூலைக் கைப்பற்றியமை வெளிநாடுகளைச் சேர்ந்த அரசியல் நிபுணர்களுக்கே அதிர்ச்சியாக இருந்தது. பல முக்கிய நகரங்களைக் கைப்பற்றிய பிறகு தான் தலைநகரான காபூலை தலிபான்கள் அதிரடியாகக் கைப்பற்றினர்.

அமெரிக்கப் படைகள் வெளியேறினாலும், ஆப்கானிஸ்தான் அரசுப் படைகள் சில காலத்துக்கே தாக்குப் பிடிப்பார்கள் என்று அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகள் கருதியிருந்தன. ஆனால் சில நாட்களிலேயே எந்தத் தடையும் இல்லாமல் முக்கிய நகரங்கள் அனைத்தையும் தலிபான்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். அதிலும் ஞாயிற்றுக்கிழமை (15.08.2021) ஒரே நாளில் தலை நகர் காபூலையும், ஜனாதிபதி மாளிகையையும் கைப்பற்றியது பலராலும் நம்ப முடியாத பேரதிர்ச்சியாக இருக்கிறது. எவ்வாறாகவிருந்த போதும் தலிபான்களின் இந்த வெற்றிக்கு பின்னால் அமெரிக்காவின் வெளியேற்றம் உடனடிக் காரணமாக அமைந்த போதும் பின்வரும் நீண்டகாலக் காரணங்களும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

வலுவான அரசாங்கத் தலைமை மற்றும் தெளிவான மூலோபாயம் இல்லாமை என்பன காரணமாக ஆப்கானிஸ்தான் அரசாங்கம், இராணுவம் பலவீனமடைந்தது. அதாவது அமெரிக்காவின் திரும்பப் பெறுதல் அறிவிப்பிற்கு பிறகு தலிபான்கள் வேகத்தை அதிகரிக்கத் தொடங்கிய போது ஆப்கானிஸ்தான் அரசாங்கம் தலிபான்களுக்கு எதிரான மூலோபாய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டமையினால் ஆப்கானிஸ்தான் படைவீரர்கள் பாதுகாப்புப் படைகளில் சண்டையிடுதல் மற்றும் ஜனாதிபதி அஷ்ரப் கானியின் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுதல் தொடர்பான நம்பிக்கையீனத்தினை ஏற்படுத்தியது. ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படைகள் அமைப்பு ரீதியாகப் பலவீனமடையத் தொடங்கியது. அதாவது அதிகாரபூர்வ தகவலின் அடிப்படையில் ஏறத்தாழ 300,000 பேரில் ஆறில் ஒரு பங்கு படைவீரர்களினையே களத்தில் காணக்கூடியதாக இருந்ததது.

நேட்டோ போர் 2014 இல் முடிவடைந்ததிலிருந்து ஆப்கானிஸ்தான் படைகளுக்கு அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் பல இராணுவ பயிற்சிகள், ஆலோசனைகள், ஆயுதங்கள் மற்றும் நிதியுதவிகளை வழங்கியிருந்த போதும் அமெரிக்கப் படைகள் வெளியேறும் வரையான காலப்பகுதிக்கு முன்னர் இடம்பெற்ற தலிபான்களுடான யுத்தங்களின் போது அமெரிக்கப் படைகளினை முன்னிற்க அவர்களின் வழிநடத்தலில் ஆப்கான் அரச படைகள் போரிட்டன.

நீண்ட கால வலிமை மற்றும் ஆப்கானிஸ்தான் அரசின் அடிப்படைப் பலவீனங்கள் என்பனவும் தற்போதைய ஆப்கானிஸ்தான் நிலைமைக்கு காரணம் ஆகும். பல ஆண்டுகளாக இறுதிப் போருக்கான சகலவித தயார்ப்படுத்தல்களையும் மேற்கொண்டு வந்துள்ளார்கள். அதாவது நாடு முழுவதும் நகரங்களின் எல்லையோரங்களில் தங்களின் படைகளினை தலிபான்கள் ஆழமாக வேரூன்றச் செய்ததன் மூலம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இத்தகைய இராஜதந்திர நகர்வே குறுகிய நாட்களுக்குள் ஆப்கானிஸ்தானை தம்வசம் கொண்டு வரக் காரணமாக அமைந்தது.

மேலும் தலிபான்கள் ஆப்கானிஸ்தான் படைகளிடமிருந்து கைப்பற்றிய கனரக ஆயுதங்களை அதிக அளவில் குவித்தனர். தலிபான்கள் ஆப்கானிஸ்தான் படை வீரர்கள் தரப்பிலிருந்து அமெரிக்காவின் பெருமளவு இராணுவ ஆயுதங்களைக் கைப்பற்றிவிட்டார்கள் என்பதை வெள்ளை மாளிகை ஒப்புக் கொண்டுள்ளது. இதனை ஆப்கானிஸ்தான் தேசிய பாதுகாப்புப் படைகளுக்கு பென்டகன் படைவீரர்களினால் வழங்கப்பட்ட துப்பாக்கிகள், வாகனங்களுடனும் UH - 60 பிளாக்ஹாக் தாக்குதல் ஹெலிகொப்டர்கள் மற்றும் ஏனைய இராணுவ ஆயுதங்களுடன் கந்தஹார் விமான நிலையத்தில் தலிபான்கள் நிற்பது, படங்கள் மற்றும் வீடியோக்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் போதைப் பொருள் வர்த்தகத்திற்குள் அப்பால் தங்களின் நிதி ஆதாரங்களை பல்வகைப்படுத்தி தலிபான் அமைப்பினை செல்வம் கொழிக்கும் ஒன்றாக மாற்றினார்கள்.

ஆப்கானிஸ்தானில் நிலவும் பழமைவாத ஆதிக்க சூழலும் வித்தியாசமான புவியியல் அமைப்பும் வல்லரசுப் படைகளின் தோல்விக்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது. மேலும் ஏப்ரல் மாதம் முதல், அல்கொய்தா உட்பட இருபது ஆயுதக் குழுக்கள் தலிபான்களுடன் இணைந்து போராடின.

எவ்வாறாயினும் பைடன் டிரம்பின் ஒப்பந்தத்திற்கு அமைய அமெரிக்கப் படை வீரர்களினை திரும்பப் பெற விரும்பவில்லை என்றாலும் ஆப்கானிஸ்தான் ஆழ்ந்த உறுதியற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது 2020 ஆம் ஆண்டு டிரம்ப் நிர்வாகத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினை பைடன் நிர்வாகம் நிராகரித்திருந்தாலும் தலிபான்கள் தமது எதிர்ப்பினை தெரிவித்திருக்க மாட்டார்கள். மாறாக ஆப்கானிஸ்தான் படைகளுக்கு எதிராக புதிய தாக்கு தல்களைத் தொடங்கியிருப்பார்கள்.

இன்று உலக நாடுகளின் கவனம் முழுவதும் ஆப்கானிஸ்தான் மீது இருப்பதற்கு, இந்தியாவின் வடமேற்கு பகுதியிலுள்ள ஆப்கானிஸ்தான் பொருளாதார ரீதியிலோ, இராணுவ ரீதியிலோ முக்கியத்துவம் பெற்றதாக அமையவில்லை. எனினும் புவியியல் ரீதியான இருப்பிடம் இந்நாட்டை அரசியல் முக்கியத்துவம் மிகுந்ததாக மாற்றி விட்டது. அதாவது ஐரோப்பா, ரஷ்யா, சீனா, இந்தியா, எண்ணெய் வளம் மிகுந்த வளைகுடா நாடுகள் ஆகியவற்றிற்கு மத்தியில் ஆப்கானிஸ்தான் அமைந்துள்ளதால் இந்நாடு முக்கியத்துவம் மிகுந்ததாக திகழ்கிறது. எனவே இதனை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர உலக வல்லரசுகள் முயன்றன. இதனால் ஆப்கானிஸ்தான், சாம்ராஜ்ஜியங்களின் சமாதி எனவும் அழைக்கப்படுகின்றது. அதாவது எந்தவொரு வல்லரசும் ஆப்கானிஸ்தானில் இருபது வருடங்களுக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாமல் பின்வாங்கும் பல வரலாற்றுச் சம்பங்களை கொண்ட நாடாக திகழ்கின்றது. தலிபானின் வெற்றியையும் அவர் களின் அரசாங்கத்தினையும் உலக வல்லரசுகள் பல நிராகரித்துள்ள போதும் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

சீனா - ரஷ்யா நாடுகள் மத்திய கிழக்கு தீவிர மத வாதம் கொண்ட ஈரான் போன்ற நாடுகளுடன் சிறப்பான உறவைக் கொண்டுள்ளன. அதேபோன்று தலிபான்களுடனும் முரண்படாத வகையிலான அரசியல் - பொருளாதார உறவை சீன, ரஷ்ய ஆகிய நாடுகள் வளர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அவ்வாறு தலிபான்கள் மற்றும் சீனாவிற்கு இடையில் நல்லதொரு உறவு ஏற்படுமாக இருந்தால் சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தின் வளர்ச்சி வேகமடைவதோடு ஆசியாவில் சீனாவின் ஸ்திரத்தன்மை பலப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும். ஆனால் தலிபான்களின் கடுமையான மிதவாதப் போக்குகள் காரணமாக எதனையும் உறுதிப்படுத்திக் கூற முடியாத நிலைமையே தற்போது காணப்படுகின்றது. ஆசியாவிற்கே உரிய தீவிர மதவாத, இனவாத பண்புகளினை வைத்து இராஜதந்திர அரசியல் செய்யும் அமெரிக்காவிடமிருந்து எளிதில் ஆப்கானிஸ்தான் விலகிவிடுமா? என்ற கேள்வி ஒருபுறம் அமைய மறுபக்கத்தில் தலிபான்களுடனான சீனாவின் ஒத்துழைப்பு அமெரிக்காவுக்கு சவாலானதாக அமைய வாய்ப்புள்ளது.

எனவே தலிபான்களது எழுச்சிக்கு பின்னால் அமெரிக்காவின் உலகளாவிய கொள்கை மாற்றமும் ஆப்கானிஸ்தானியர்களது இஸ்லாமியவாத சிந்தனையும் சீனா ரஷ்சிய அணுகுமுறையும் தலிபான்களின் மீள் எழுச்சிக்கு பின்னாலுள்ள வலுவான காரணிகளாகவுள்ளன. ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

இடர்காலத்துக் கல்வி செயற்பாட்டின் அடைவினை அளவிடுமா வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிலையறி பரீட்சை?

பாடசாலைகளுக்கு ஆசிரியர்களையோ மாணவர்களையோ அழைப்பதில் கொரோனாத் தொற்றின் ஆபத்து அதிகம் என்று உணரப்படும் சூழலிலேதான் வடக்கு மாகாணக் கல்வியமைச்சு மாணவர்களுக்கான நிலையறி பரீட்சையை வைப்பதில் தீவிரம் கொண்டு செயற்படுகின்றது. இன்றைய சூழலை நோக்கும் போது இத்தகைய பரீட்சைகள் அவசியம் தானா? என்று யோசிக்க வேண்டியிருக்கின்றது. பரீட்சைத் தாளைப் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களோ அல்லது பெற்றோர்களோ பாடசாலை செல்லவேண்டியிருக்கும் நிலையில் கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதனையும் மாணவர்களால் எழுதிவழங்கப்படும் விடைத்தாள்களைத் திருத்தி திரும்ப மாணவர்களுக்கு வழங்கும் போது ஆபத்து நிலை அதிகம் என்பதனையும் உணர்ந்து கொள்ள முடியாத நிலையில்தானா கல்வி அதிகாரிகள் இருக்கின்றார்கள்? என்று சிந்திக்கத் தோன்றுகிறது. இது ஒருபுறம் இருக்க மாகாணக்கல்வி அதிகாரிகளால் வழங்கப்படும் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்களை வலயக்கல்விப் பணிப்பாளர்களும் பாடசாலை அதிபர்களும் நடைமுறைப்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகின்ற நிலையும் வருத்தமளிக்கின்றது. இவர்கள் அனைவரும் நாட்டின் நடைமுறைக்காலச் சிக்கல்களை விளங்கிக் கொள்ளாமல் செயற்படுகின்ற போக்கு பலரையும் ஆபத்து நிலைக்குக் கொண்டு செல்லும் தன்மையுடையது என்பதனை விளங்கிச் செயற்பட வேண்டும்.

அரசு, மக்கள் சார்ந்து சிந்திக்கின்ற தன்மையினை எப்போதோ இழந்துவிட்டது. அவ்வாறு மக்கள் சார்ந்து சிந்திப்பதாக இருந்தால் கொரோனாவைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் இறுக்கமான நடைமுறைகளைப் முன்வைத்து கொரோனாவின் சமூகத் தொற்றினை குறைந்த மட்டத்துக்குக் கொண்டுவருவதற்குரிய செயற்பாட்டினை முன்னெடுத்திருக்கும். கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் இறுதியாகக் கையாண்ட உத்தியாக அமைச்சுப் பதவிகளை மாற்றம் செய்திருப்பதனைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இத்தனைகாலம் சுகாதார அமைச்சராக இருந்த பவித்திரா வன்னியாரச்சியினை போக்குவரத்து அமைச்சுக்கு மாற்றம் செய்து சுகாதார அமைச்சராக ஹெகலிய ரம்புகொலவை நியமித்திருக்கும் நிலையானது மிகவும் நகைச்சுவைத்தனமானது என்பதனை பொதுவாக எல்லோராலும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அல்லது அரசு கொரோனாவைக் கட்டுப் படுத்துவதற்குரிய முயற்சியைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது என்ற பாசாங்குத்தனத்தினைக் காட்டுவதற்குரிய செயற்பாடாக இவ்வாறான நியமனத்தினை வழங்கியிருக்கின்றது என்பதனைச் சிந்திக்கத் தெரிந்த எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். கொரோனா விடுதலைப்புலிகள் போல அழித்தொழிக்கக் கூடிய தன்மை கொண்டது அல்ல என்பதனை விளங்கிக் கொள்ள முடியாத அரசுதான் தற்போது நாட்டினை ஆண்டு கொண்டிருக்கின்றது என்பது வெளிப்படையானது. இவ் அரசால் மக்களைக் காப்பதற்குரிய பூரணத்துவமான செயற்பாட்டினை முன்னெடுக்க முடியாது என்பது வெளிப்படைத் தன்மைக்குரியது. இந்நிலையில்தான் எதிர்க்கட்சியினரும் இதர அரசியல் கட்சிகளும் மக்கள் தமது பாதுகாப்பினை தாமே உறுதிப்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு உரியவர்கள் என்று குறிப்பிட்டுக் கொண்டே இருக்கின்றனர். இங்கு மக்கள் என்பது நாட்டில் வாழும் சகல தரப்பினரையும் குறித்து நிற்கின்றது. இதில் மாணவர்கள், ஆசிரியர்கள் விதிவிலக்கானவர்கள் அல்ல. அவர்களும் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்தவேண்டிய சூழ்நிலையிலேயே உள்ளனர். ஆனால் கல்வி அதிகாரிகள் அதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவது போல் தெரியவில்லை. அவர்கள் தமது அதிகாரத்துக்குட்பட்டவர்கள் தங்களுடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டு கொரோனா அச்சுறுத்தல் காலத்திலும் செயற்பட வேண்டும் என்று தீவிரம் காட்டி வருகின்றனர். ஆசிரியர்களும் அவர்களின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு பாடசாலைகளுக்கு வருகை தந்து தற்போதைய நிலையறி பரீட்சைக்குரிய ஒழுங்கமைப்புக்களைச் செய்து வருவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. உண்மையில் மாணவர்களுக்கு பூரணமான கற்பித்தல் நடைபெறாத சூழலிலும் வீட்டில் இருந்தவாறு பரீட்சை எழுதுவதன் மூலம் அவர்களது உண்மையான அடைவு மட்டத்தினை அளவிடப் பொருத்தமான அளவீட்டு முறையாக இவ் நிலையறி பரீட்சை அமையப்போவதில்லை என்று அறிந்திருக்கும் சூழலும் இப் பரீட்சையை வடக்கு மாகாணம் மட்டும் ஒழுங்கமைத்து நடத்துவதன் நோக்கம் என்ன? என்ற கேள்வி எழுகின்றது. தற்போதைய ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பான போராட்டத்தினை வலுவிழக்கச் செய்ய அரசு எடுக்கும் முயற்சிக்கு வடக்கு மாகாணம் துணை போகின்றதா? என்று பலதரப்பினையும் சிந்திக்க வைக்கின்றது.

ஒரு பரீட்சையினை நடத்துவதாக இருந்தால் அதற்கு ஏதுவான சூழல், ஏதுவான முறைகள் இருத்தல் வேண்டும். ஆனால் இப் பரீட்சையானது பொருத்தமான முறையிலும் பொருத்தமான சூழலிலும் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படவில்லை. மேம்போக்காக மேற்கொள்ளப்படும் சடங்குத் தனமாகவே இப் பரீட்சை அமைப்பினைக் கொள்ள வேண்டியிருக்கின்றது. பிரயோசனமற்ற, மாணவர்களுக்குப் பொருத்தமில்லாத ஒன்றை ஏன் கல்வியதிகாரிகள் செய்வதில் முன் நிற்கின்றார்கள்? என்பதுதான் பொதுவான சந்தேகம். ஏனெனில் இப்பரீட்சையினை ஒழுங்கமைப்புச் செய்தவர்களுக்கும் தெளிவாகத் தெரிந்திருக்கும் பரீட்சையினை முன்னெடுக்கும் சூழல் பல வழிகளிலும் ஆபத்தானது என்பதோடு இப் பரீட்சை மூலம் அளக்கப்படுகின்ற அடைவு மாணவர்களின் உண்மையான அடைவுக்குரியதல்ல என்பதும். எனவே தான் மாணவர்கள் நன்மை சார்ந்து சிந்திக்கின்றவர்கள் எவரும் முதலில் அவர்களின் பாதுகாப்பினைச் சிந்திக்க வேண்டும். அதன் பின்னர் அவர்களுக்கு முழுமையான கல்வியினை வழங்கக் கூடிய பொருத்தமான வழி முறைகள், அணுகுமுறைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். கடந்த யுத்த காலங்களில் கல்வியில் பல்வேறு இடர்களைக் கண்டும் மீண்டு முன்னிலையில் இருந்த கல்விச் சமூகமே வடக்கு மக்கள் சமூகம். அது எந்த இடரிலும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் வல்லமை கொண்டது. பொருத்தமான வழிப்படுத்தலைச் செய்தால் போதும். வேறொன்றும் தேவையில்லை. ■

முடக்கமின்றி மீளாது இலங்கை

✒ தந்திரன்

இலங்கையில் நாள்தோறும் மூவாயிரத்துக்கு அதிகமான கோவிட் தொற்றாளர்கள் இனம் காணப்படுகின்றனர். தினமும் நூற்றைம்பதுக்கு அதிகமான கோவிட் தொற்றாளர்கள் மரணமடைகின்றனர். டெல்ராவினைத் தொடர்ந்து எபிசிலோன் என்ற திரிபடைந்த கொரோனா வைரசினால் நிமிடத்துக்கு ஒரு மரணம் நிகழும் என சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். நாட்டை முற்று முழுதாக முடக்காது விடின் நாடு மரணக்காடு ஆவதனை தடுக்க முடியாது. நாட்டில் திருவிழாக்கள், நிகழ்வுகளைத் தடைசெய்யுங்கள்.

" நாடு எவ்வகையிலும் முடக்கப்படாது "

-இலங்கை அரசாங்கம்

நியூஸ்லாண்டில் நீண்ட நாட்களுக்கு பின்னர் முதலாவது கொரோனா நோயாளி இனம் காணப்பட்டார்.

" நாடு முற்று முழுதாக முடக்கப்பட்டுள்ளது "

- நியூஸ்லாண்ட் அரசாங்கம்

இந்தியாவின் சனத்தொகையுடன் ஒப்பீடு செய்கின்ற பொழுது கொரோனா பாதிப்பின் காரணமாக இலங்கையில் பதினைந்து மடங்கான மரணம் நிகழ்ந்துள்ளது. கொரோனா பேரிடரின் நிமிர்த்தம் உலகளாவிய ரீதியில் கிட்டத்தட்ட நாற்பத்தைந்து இலட்சம் வரையான மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் கொரோனா இறப்பு வீதத்தில் இலங்கை முன்னிலையில் உள்ளது.

இந்த நிலையில் நாடு முற்றாக முடக்கப்பட வேண்டும் என பலதரப்பட்டோராலும் வலியுறுத்தப்படுகின்றது. நியூஸ்லாண்டில் ஒரு நோயாளி இனம் காணப்பட்ட உடனேயே நாடு முற்று முழுதாக முடக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு தனது நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்கு முன்னுதாரணமாகச் செயற்படுகிறது.

ஆனால் இலங்கையில் இத்தனை உயிரிழப்புக்கள் ஏற்பட்ட பொழுதும் கொரோனா தொற்றுக்கள் நான்காயிரத்தினை அண்மித்த பொழுதும் இன்னும் பூரண முடக்கம் அறிவிக்கப்படவில்லை. இதனடிப்படையில் அரசாங்கத்தின் உள்நோக்கம் என்ன? மக்களின் உயிரோடு விளையாடி அரசாங்கம் எதனைச் சாதிக்க முனைகிறது.

பகுதியளவில் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தினைத் தடை செய்து பெயரளவில் ஒரு முடக்கத்தினை அறிவித்துள்ளது. இப் பகுதியளவிலான முடக்கத்தினால் யாதொரு பயனும் இல்லை என்பதே சுகாதாரத் தரப்பினரதும் மருத்துவர்களினதும் கருத்தாக உள்ளது.

அத்தோடு வேடிக்கையான விடயம் என்ன வெனில் நாடு பூராகவும் இரவு பத்து மணி தொடக்கம் அதிகாலை நான்கு மணிவரைக்கும் பூரண முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடக்கம் தேவைதானா? என்ற கேள்வி எழுகிறது.



வெளவால்களுக்கும் ஆந்தைகளுக்கும் பொதுமுடக்கம் போட்ட ஒரே நாடு இலங்கை என்று. ஏனெனில் அவைதான் குறித்த நேரப்பகுதியில் நடமாடுகின்ற உயிரினங்கள். அவற்றைத் தடுப்பதற்காகவே நாடு பூராகவும் இரவு பத்து மணி தொடக்கம் அதிகாலை நான்கு மணிவரைக்கும் பூரண முடக்கம் அறிவிக்கப்பட்டதென வேடிக்கை பேசுகின்றனர்.

அத்தோடு அரச திணைக்களப் பணியாளர்கள் பகுதியளவில் பணிகளுக்குச் சமூகமளிக்க வேண்டும் எனப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதனை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திமல் வீரக்கொடி அவர்கள் பகுதியளவில் மூளை செத்தவர்களாலேயே கொரோனா அதிகம் பரவலடைகின்றது என வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இவற்றுக்கு மத்தியிலேதான் அண்மையில் அமைச்சரவை மாற்றம் நிகழந்திருக்கிறது. இப்பொழுது சுகாதாரத்துறை அமைச்சராக அரசின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் கெகலிய ரம்புக்கெல நியமிக்கப்பட்டுள்ளார். மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பிரிவினர்கள் துறை சார்ந்த ஒருவரை சுகாதாரத்துறை அமைச்சராக நியமிக்கக்கோரி அரசிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட பொழுதும் அவை சாதகமாகப் பரிசீலிக்கப்படாமல் புறந்தள்ளப்பட்டிருக்கிறது.

இனி சுகாதாரத்துறை அமைச்சர் அனைத்தையும் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதற்கிடையில் நாடு அதல பாதாளத்திற்குள் தள்ளப்பட்டு எவராலும் மீட்க முடியாத சூழ்நிலைக்கு போய்விடும். தற்போதைய சூழலில் இந்த அமைச்சரவை மாற்றம் தேவையற்ற ஒன்றாகவே அரசியல் அவதானிகளாலும் மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையினராலும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இது ஏதோ உள்நோக்க நியமனமாகவே கருத வேண்டியுள்ளது.

மேலும் தொற்றுக்கள் குறித்தும் இழப்புக்கள் குறித்தும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளிவருவதற்கு அதிக சாத்தியங்கள் காணப்படுகின்றது. கடந்த யுத்த காலத்தில் ஊடகப் பேச்சாளராக இருந்த கெகலிய ரம்புக்வெல வெளியிட்ட உண்மைக்குப் புறம்பான தகவல்கள் யாவரும் அறிந்ததே. இதே நிலைதான் இனி சுகாதாரத் துறையிலும் இடம் பெறும் என்பதில் அவரது தனிப்பட்ட குணவியல்புகள் சார்ந்து எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட சுகாதாரத் தகவல்களில் தொற்றுக்கள் தொடர்பாகவும் இறப்புக்கள் தொடர்பாகவும் ஐயப்பாடே காணப்படுகின்றது. இந்த தகவல்கள் பல மடங்கு குறைத்துச் சொல்லப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமதிகம் காணப்படுகின்றது. எனவே தற்போதைய கொரோனா பேரிடரைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் செயற்படும் என்ற நம்பிக்கைகள் குறைவடைந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. ஒவ்வொரு வரும் தங்கள் தங்கள் உயிர்களுக்குத் தாங்களே பொறுப்புடையவர்கள் ஆவர். தாங்களாகவே சுய முடக்கத்திற்கு உட்பட்டு தங்கள் உயிர்களை காக்க வேண்டியது காலத்தின் தேவையும் கட்டாயமும் ஆகும்.

■



மரணம்

சித்தாந்தன்

மனைவியின் உறவினர்கள் வீட்டுக்கு வந்திருந்தனர். நயினை நாகபூசணி அம்மன் கோயிலில் நேர்த்திக்கடனை செலுத்திவிட்டு நேற்று மாலைதான் வந்திருந்தனர். இன்று மாலை ஊருக்குப் புறப்பட இருக்கிறார்கள். அவர்களுக்கு மதியம் விருந்து கொடுக்க வேண்டும் என மனைவி விரும்பினாள். அதற்காகக் கோழி இறைச்சி வாங்க என்னை அனுப்பியிருந்தாள்.

கோடையின் வெய்யில் உச்சந் தலையினால் இறங்கி தேகத்தை அனலாக்கிக் கொண்டிருந்தது. வேலியோரமாக துளிர் விடத்தொடங்கியிருந்த காட்டுப்பூவரசுக் குள் என்னைச் சுருக்கிக்கொண்டேன். எதிரே உழுதுவிடப்பட்டிருந்த வயலின் புழுதியை காற்று எத்தியபடியிருந்தது. உரிமையாளர் வீட்டின் முன்புறத்தை இறைச்சிக்கடையாக மாற்றியிருக்கின்றார். புதிதாக கட்டப்பட்ட வீடு என்பதால் நிழல் மரங்கள் ஏதும் இல்லை. வீதியை ஒட்டிக் கடையிருந்த போதும் சூழவும் வயல் நிலங்களே விரந்துகிடந்தன. அவையும் உழப்பட்டிருந்தன. குளிர்மை என்பது மருந்துக்குக் கூட இல்லை. கடையில் சனங்களும் இல்லை.

கடைக்காரர் கிட்டத்தட்ட வியாபாரத்தை முடித்துவிட்டு சமையலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். “ எனக்கு ரண்டு கிலோ இறைச்சி போடுங்கோ” என்ற என் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டவர் போல என்னைத் திரும்பிப் பார்த்தார். பிறகு குரலைச் செருமிக் கொண்டே, “கடை பூட்டியாச்சு” என்றார். இந்த வெய்யிலுக்குள் இன்னொரு கடையை தேடிச் செல்வதென்பது எரிச்சையூட்டுவதாகவே இருக்கும் “அண்ணை, வீட்டில் ஒரு விசேசம் கொஞ்சம் றை பண்ணிப் பாருங்கோ” எனது குரலில் படர்ந்த பரிதாபத்தை உணர்ந்தவர் போல “தம்பி வெட்டி வைச்சதெல்லாம் முடிஞ்சிடுச்சு. இனி அறுத்துத்தான் தரவேணும். கையில வேலையா இருக்கிறன் கொஞ்சம் பொறுக்க முடியுமோ” என்றார். நான் தலையை ஆட்டிச் சம்மதத்தை வெளிப்படுத்தினேன். அவர் கதிரை ஒன்றைத் தந்து வீட்டின் முன்புறத்தில அமரும்படி சொன்னார். நான் சுவரோடு ஒட்டிக் கொஞ்சம் நிழல்படக்கூடிய இடத்தில் அமர்ந்து கொண்டேன்.

வீட்டின் விறாந்தையில் புகைப்படங்கள் பல தொங்கவிடப்பட்டிருந்தன. எல்லாம் வெளிநாட்டில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள். பெருந்தெருக்களும் நவீன மாடங்களுமாக இருந்த அந்தப் புகைப்படங்களில் கடைக்காரர் பெரிதும் சிரித்துக்கொண்டிருந்தார். ஒரு படத்தில் சமையல் உடையில் தலையில் தொப்பியும் அணிந்து கொண்டு எதையோ வறுத்துக் கொண்டிருந்தார். என்னத்தை வறுக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. அது கோழி வறுவலாக் கூட இருக்கலாம். கடைக்காரர் அண்மையில்தான் வெளிநாட்டில் இருந்து வந்திருக்க வேண்டும் அவரது நடையுடை பாவனையும் அதை மெய்ப்பிப்பது போலவே இருந்தன. இள நீல அரை பென்னியன் அணிந்திருந்தார். அடர் நீல நிறத்தில் பொட்டம் அணிந்திருந்தார். மார்பில் தடித்த சங்கிலி ஒன்று மின்னிக் கொண்டிருந்தது. கை விரலில் முக்கால்வாசியை மறைத்திருக்கும் மீன் வடிவிலான பெரிய மோதிரமும் அணிந்திருந்தார். தலையின் முன் பக்கம் வழுக்கை விழுந்திருந்தது. எஞ்சிய தலைமுடியை கறுப்புச் சாயத்தில் தோய்த்திருந்தார். தாடி வழிக்கப்பட்டு மீசையை அழகாகக் கத்தரித்திருந்தார். வீட்டில் அவரைத் தவிர வேறு எவரும் இல்லை. அவர்களெல்லாம் வெளிநாட்டில் இருக்கக்கூடும். இவர் மட்டும் தன் முதுமைக் காலத்தை தாய் நிலத்தில கழிக்கும் பிரையாசத்தோடு இங்கு வந்து தனியே வசிக்கலாம் என எண்ணிக் கொண்டேன். அவர் தன் வேலையைத் துரிதமாக்கிக் கொண்டிருந்தார்.

ஒரு வேளை வெளிநாட்டில் அவர் இறைச்சிக்கடை ஒன்றில் வேலை செய்திருக்கலாம். அல்லது இறைச்சிக் கடை ஒன்றை நடத்தியிருக்கவும் கூடும். கவுண்டர் மேசையில் குபேரனின் சிலை ஒன்று வைக்கப்பட்டு கண்ணாடிச் சட்டமிடப்பட்டு சில்லறைக் காசுகள் குவித்துவைக்கப்பட்டிருந்தன. அதன் மேலே அன்றைய நாளிதழ் நான்காக மடித்துவைக்கப்பட்டிருந்தது. எடுத்து விரித்தேன் முதல் பக்கத்தில் வழமையான செய்திகள்தான். ஆர்பாட்டங்கள் பற்றிய செய்திகள் குவிந்துகிடந்தன. வலப்பக்கத்தின் கீழ் மூலையில் கட்டமிடப்பட்ட ஒரு செய்திக்கு “வாள் வெட்டுக்குழு அட்டகாசம்” எனத் தலைப்பிடப்பட்டிருந்தது. அண்மைக் காலங்களில் இத்தகைய செய்திகள் இல்லாத நாள் விடிவதென்பது அரிதானதுதான். செய்தியை வாசித்தேன் வீடு புகுந்த வாள்வெட்டுக் குழு கணவன் மனைவியை வெட்டிவிட்டு பெறுமதியான பொருட்களைக் களவாடிச் சென்றது. இரத்த வெள்ளத்தில் மிதந்தவர்களை அயலவர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். என்ற இறுதி வரி மனதுக்கு ஆறுதலாக இருந்தது. சக மனிதனை வெட்டி இரத்தத்தைப் பார்க்கும் அளவுக்கு மனிதர்களிடம் கொலைவெறி ஏன் இவ்வளவுக்குத் தாண்டவமாடுகிறது. மனித உயிரை விட மதிப்புக் கூடியவையா? காசும் பொன்னும். நினைக்கும் போதே மனித ஜீவிதத்தின் மீது வெறுப்புப்படர்ந்தது. நாளி தழை மடித்து மீண்டு அதே இடத்தில் வைத்துக் கொண்டேன்.

விறாந்தையின் மூலையிலிருந்த மீன்தொட்டிக்குள் வண்ண வண்ண மீன்கள் அசைந்து கொண்டிருந்தன. தங்கமும் வெள்ளியுமாக உடல் முழுதும் பரவிக்கிடந்த மீன், என்னை மிகவும் வசீகரித்தது. அநேகமும் எல்லா மீன்களுக்கும் சோடி இருந்தது. இது மட்டுமே தனித்து அலைந்தபடியிருந்தது. அதன் சோடி இறந்திருக்கக் கூடும். கடைக்காரர் தனியாக இந்த மீனை வைத்து வதைக்க மாட்டார் என்றே நான் நினைக்கின்றேன். கடைக்காரர் தன் வேலைகளை முடிக்கும் வரை நான் மீன்களோடு சேர்ந்து நீந்திக்கொண்டிருந்தேன்.

சமையலறை வேலையை முடித்துக்கொண்டு அவர் வீட்டின் பின் புறத்தில் இருந்த கோழிக்கூட்டை நோக்கிச் சென்றார். கிட்டத்தட்ட பத்து மீற்றர் நீளமான இரண்டு கோழிக்கூடுகளை அமைத்திருந்தார். வெண்ணிறப் புறோயிலர்கள் ஒரு கூட்டிலும் இன்னொரு கூட்டில் கல்பேட், பேரன்ஸ் கோழிகளும் இருந்தன. இவரின் வருகையைக் கண்டபோதே கோழிகள் எல்லாம் கீச்சிடத் தொடங்கின. அவர் சாவதானமாக புறோயிலர் கூட்டுக்குள் நுழைந்தார். இரண்டுகிலோ நிறையளவான கோழியைத் தேடிப் பிடித்தார். அவரது பிடி கோழியின் கழுத்திலிருந்தது. அதன் கழுத்து நீண்டு கொண்டதுபோலிருந்தது. அது தன் இறக்கைகளை அடித்துக் கொண்டிருந்தது. அதை அவர் கோழிகளைப் பலியிடும் பலி பீடத்துக்குக் கொண்டு வந்தார். பலி பீடம் என்பது இரும்புக் கால்களையும் மேற்புறம் பலகையினாலுமான மேசை தான். அதற்கு மேல் படர்ந்திருந்த மாங்கொப்பு ஒன்றில் பிணைக்கப்பட்டிருந்த கயிறு தொங்கிக் கொண்டிருந்தது. அவர் கோழியின் பிடியை கழுத்திலிருந்து காலுக்கு மாற்றினார். அதை கயிற்றில் தொங்கவிட்டார். அது தன் இறக்கைகளை மேலும் பலமாக அடித்துக் கொண்டிருந்தது. கூட்டினுள் இருந்த கோழிகள் எல்லாம் வெருண்டு மூலைகளுக்குள் பதுங்குவது போலிருந்தது. அவர் சர்வசாதாரணமாக அதன் கழுத்தை தன் கைகள் இரண்டையும் சேர்த்துப் பிடித்து ஒரு திருகு திருகினார். கோழியின் சிறகடிப்பு அடங்கி அதன் இறக்கைகள் விரிந்து தொங்கின. கத்தியை எடுத்து கோழியின் தொடைத் தசைகளை வெட்டத் தொடங்கினார்.

இந்தக் கோழி தொங்கிக் கொண்டிருப்பது போலவே ஒரு நாள் நான் தொங்கிக் கொண்டிருந்தேன். அது இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலம். அப்போது நான் உயர்தரம் படித்துக் கொண்டிருந்தேன். எங்களுக்கு சனி, ஞாயிறு மட்டுந்தான் ரியூசன்கள் நடக்கும். ஒரு சனிக்கிழமை விடிய ஆறு மணிக்கு ரியூசனுக்கு வெளிக்கிட படலையைத் திறந்த போதுதான் தெருவில் இராணுவத்தினர் நிறைந்திருப்பதைக் கண்டேன். நான் படலையை மெதுவாக சாத்தி விட்டு வீட்டுக்குள் திரும்பினேன். நான் திரும்பிய சற்றைக் கெல்லாம் இராணுவத்தினர் சிலர் வீட்டுக்குள் நுழைந்தனர். வீட்டிலிருந்த எல்லோரையும் வைரவர் கோவில் திடலுக்குச் செல்லுமாறு கூறினார்கள். நாங்கள் எல்லோரும் திடலுக்குச் சென்ற போது திடலே திருவிழாக் கூட்டம் போல இருந்தது. ஆனால் ஒன்று, திருவிழா என்றால் ஆரவாரமாக இருக்கும். இங்கே வெறும் நிசப்பதம் மட்டுமே நிறைந்து கிடந்தது. சுற்றிலும் இராணுவத்தினர் துப்பாக்கிகள் சகிதம் நின்றனர். வழமையாக இப்படியான சுற்றி வளைப்புக்கள் நடப்பது பழக்கமானதுதான். இராணுவத்தினர் தங்கள் வீரத்தைக் காட்டுவதற்காக ஒன்றிரண்டு இளைஞர்களைப் பிடித்து அதில் வைத்தே சப்பாத்துக் கால்களாலும் துப்பாக்கிப் பிடிகளாலும் மாறிமாறி அடிப்பார்கள். அது தங்கள் மீதான பயம், சனங்களுக்குக் குறையக்கூடாது என்பதற்காகத் தான். இடைக்கிட “நீ எல்.ரீ.ரீ.ஈ தானே நீ எல்.ரீ.ரீ.ஈ தானே” என்று கேட்டுக்கொள்வார்கள். அம்பிட்டவர்களும் “இல்லை சேர், இல்லை சேர்” என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். சொல்லச்சொல்ல அடியும் கூடிக் கொண்டே போகும் அடிக்கின்ற இராணுவத்தினரும் தங்களது முகத்தை மேலும் கொடூரமாக்கிக் கொள்வார்கள். அவர்களுக்கு அது ஒரு விளையாட்டுப் போல இருக்கும். நான் நினைக்கிறேன், முகாமில் இருக்க பொழுது போகவில்லை என்றால் ஒரு சுற்றி வளைப்பின் மூலம் தங்கள் பொழுதை மகிழ்ச்சியாகக் கழித்து விடுவார்கள். பிறகு அவர்களை விட்டு விட்டு சுற்றிவளைப்பை முடித்து அணிவகுத்துத் திரும்புவார்கள்.

வழமையான சுற்றிவளைப்புச் சடங்காகத்தான் இதுவும் இருக்கும் என்றே நினைத்திருந்தேன். அண்டைக்கு அவர்களது முத்தேர்வில் நானும் ஒருவனாகி இருந்தேன். நான் அம்மாவுக்குப் பக்கத்தில்தான் அமர்ந்திருந்தேன். என்னை ஒரு இராணுவ வீரன் கையைச் சுட்டிக் காட்டிய போது, அவனது விரல் துப்பாக்கி போலாகி என்னைக் குறிவைப்பது போலிருந்தது. என் உடல் நடுங்கத் தொடங்கியது. நான் ‘அம்மா’ என உதடுகளைப் பிரித்த வாறே எழுந்து கொள்ள எத்தணித்தேன். அம்மா என் கையை இறுகப் பிடித்து இருத்தினார். அவரின் கையிலும் நடுக்கத்தை உணர்ந்து கொண்டேன். அம்மாவின் செயல் இராணுவ வீரனுக்குக் கோபத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவன் பல்லை நெறுமிக் கொண்டு பாய்ந்து வந்து என் தலையைப் பிடித்து இழுத்தான். அம்மாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கூட்டத்தின் முன்னே கொண்டுவந்து என் முதுகை வளைத்து தன் முழங்கையால் இரண்டு குத்துக் குத்தினான். நான் அம்மா என்று அலறினேன் என் அலறலை விட அம்மாவின் அலறல் அதிகமாக இருந்தது. எங்கள் மூன்று பேரையும் அந்த மதிய வேளையில் முழங்காலில் இருத்தினார்கள்.

(18 ஆம் பக்கம் பார்க்க.....)

மொழியைச் சிதைக்கும் அரச அறிவிப்புகள்

இலங்கையில் பிரதானமாக பேசப்படும் மொழிகள் இரண்டுதான். பெரும்பான்மை சிங்கள இன மக்கள் சிங்களத்தைப் பேசினாலும், அவர்களையடுத்து சிறுபான்மையினராக வாழும் தமிழ் - முஸ்லிம் மக்கள் பேசும் மொழி தமிழ்.

சீனாவின் பிரவேசம் இலங்கையில் அதிகரித்ததையடுத்து சீன மொழியிலும் அறிவிப்புப் பலகைகள் காட்சிக்கு வந்துவிட்டன. சமகால கொரோனா பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டால், விமான நிலையங்களிலும் சீன மொழி ஒலிபரப்பாகலாம்.

சீனாவின் கொழும்பு போர்ட் சிட்டி எதிர்காலத்தில் பல அதிசயங்களை இலங்கையில் நிகழ்த்தவிருக்கிறது.

அப்போது சீனமொழியில் வெளிவரும் அறிவிப்புப் பலகைகள், சுவரொட்டிகளில் எழுத்துப் பிழைகள் நேர்ந்தால், அங்கு வாழும், வாழப்போகும் சீனப் பிரஜைகள் கைகட்டி வேடிக்கை பார்க்கமாட்டார்கள் என்பது மாத்திரம் நிச்சயம்.

ஒரு காலத்தில் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் மொழி குறித்த பிரச்சினைகள், குறிப்பாக அரச வர்த்தமானி அறிவித்தல்களில் எழுத்துப்பிழைகள் நேரும் சமயங்களில் அவற்றைச்சுட்டிக் காட்டி பேசிவந்தவர் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பண்டிதர் க.பொ.இரத்தினம்.

தமிழ் இதழ்கள், பத்திரிகைகள் மற்றும் வெளியாகும் தமிழ் நூல்கள், மலர்களிலும் எழுத்துப்பிழைகள் நேர்ந்துவிடாதிருக்கவேண்டும் என்பதற்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்தவர் கி. இலக்ஷ்மண அய்யர்.

இந்த இரண்டு பெரியார்களும் இலங்கையில் வாழ்ந்த காலத்திலும் அதன் பின்னரும் அரச அறிவித்தல்களில் தொடர்ந்தும் எழுத்துப்பிழைகள் நேர்ந்துகொண்டுதானிருக்கிறது.

தமிழ் மொழி அமுலாக்கலுக்கென ஒரு அமைச்சும் ஜே.ஆர். ஜெயவர்தனா அதிபராக பதவி ஏற்ற காலத்திலிருந்து இயங்கி வருகிறது.

மட்டக்களப்பு எம். பி. ஆகவிருந்த திரு. செல்லையா இராஜதுரை ஐக்கிய தேசியக்கட்சிக்குத் தாவியபோது, அவருக்காக உருவாக்கப்பட்ட பிரதேச அபிவிருத்தி, தமிழ் மொழி அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சு பின்னாளில் சிறுபான்மை தமிழ் இனத்திலிருந்து தெரிவாகும் யாரோ ஒரு தமிழருக்கு வழங்கப்பட்டும் வந்தது.

அந்தப்பதவிகளை பி.தேவராஜா, திருமதி இராஜமனோகரி புலேந்திரன், டக்ளஸ் தேவானந்தா,

> **சீனமொழியில் வெளிவரும் அறிவிப்புப் பலகைகள், சுவரொட்டிகளில் எழுத்துப்பிழைகள் நேர்ந்தால், அங்கு வாழும், வாழப்போகும் சீனப்பிரஜைகள் கைகட்டி வேடிக்கை பார்க்க மாட்டார்கள் என்பது மாத்திரம் நிச்சயம்.**

திருமதி. விஜயகலா மகேஸ்வரன், டீ. எம். சுவாமிநாதன், மனோ கணேசன் முதலானோர் அலங்கரித்தனர்.

இது இவ்விதமிருக்க, இந்த ஆண்டு தொடக்கத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின் சில பகுதிகளை இங்கு பதிவிடுகின்றோம்.

அவர் சொன்னார்:

“ இரண்டாம் மொழிப் பரிச்சயத்திற்கான சான்றிதழ்களையும் கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்ளுகின்ற அரச அதிகாரிகள் பலரும் இரண்டாம் மொழியில் ஒரு வார்த்தைகூட புரிந்து கொள்ள முடியாத நிலைமைகளையே நடைமுறையில் பார்க்கின்றோம். அரச கருமம் மொழிகள் அமுலாக்கலில் அரச அதிகாரிகள் தங்களது முழுமையான பங்களிப்பினை அர்ப்பணிப்புடன் வழங்க வேண்டும்.

இந்த நாட்டிலே அரச கருமம் மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் இருத்தல் வேண்டுமென இலங்கையின் அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும், இன்றுவரையில் இந்த நாட்டில் அது நடைமுறையில் இல்லாதது, கவலைக்குரிய அதே நேரம் கண்டிப்புக்குரிய ஒரு விடயமாகும்.

அரச சுற்றறிக்கைகள் முதற்கொண்டு அரச அதிகாரிகளின் கடிதங்கள் வரையிலாக அனைத்தையும் அரச நிறுவனங்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே வாழ்ந்து வருகின்ற சிங்கள மொழி பரிச்சயமற்றவர்களுக்கு சிங்கள மொழி மூலமாகவே அனுப்பி வைப்பதும், அதனைப் பெறுகின்றவர்கள் மொழி புரியாத காரணத்தினால் பல்வேறு இடையூறுகளுக்கு உட்படுவதும் பல காலமாகவே தொடர்ந்து வருகின்றது.

இந்தப் பின்னணிகளுடன்தான் வீதிகளில் காணப்படும் அறிவிப்புப் பலகைகள், சுவரொட்டிகள், பஸ் வண்டிகளில் தமிழுக்கு நேர்ந்திருக்கும் சிதைவுகளையும் அவதானிக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் தமிழ் சிதைக்கப்படுவதை நடிகர் வடிவேலுவின் நகைச்சுவையோடு சுட்டிக்காண்பிக்கும்

அளவுக்கு வலைத்தளங்களும் பெருகிவிட்டன.

தமிழ் அச்சு ஊடகங்களிலும் எழுத்துப் பிழைகள் மலிந்துகிடக்கின்றன.

எழுத்துப்பிழைகள் கருத்துப்பிழைகளாகிவிடும் ஆபத்து இருப்பதை கவனித்தல் வேண்டும். சில சமயங்களில் அந்தத் தவறுகள் கெட்ட வார்த்தைகளாகவும் மாறிவிடலாம்.

அமைச்சர் டக்ளஸ் குறிப்பிட்டிருப்பதுபோன்று தமிழ் மொழி அமுலாக்கலில் நேர்ந்திருக்கும் நெருக்கடிகளைக் களைவதற்கு ஆவன செய்யவேண்டும்.

இரண்டு மொழிகள் நடைமுறையிலிருக்கும் இலங்கையில் சீனமொழியும் பிரவேசித்துக் கொண்டிருக்கிறது. தொழில் நிமிர்த்தம் இலங்கை வரும் சீனர்கள், தமது தாய் மொழியில் அத்தகைய தவறுகள் நேர்ந்து விடாதிருக்கத்தக்கதாக அதற்குரிய பொறுப்புகளில் தேர்ச்சி மிக்கவர்களையே நியமிக்க விரும்புவார்கள்.

இலங்கையில் தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு, இதுவிடயமாக காலத்திற்குக் காலம் பயிலரங்குகளை நடத்துவதன் மூலமும், உடனுக்குடன் தவறுகளை கண்டுபிடித்துத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலமும் சீரான மொழிப்பரிவர்த்தனைக்கு வழிசமைக்க முடியும். ■

உங்கள் வியாபாரத்தை வீட்டில் இருந்தவாறே மேம்படுத்திக்கொள்ள வேண்டுமா?

நீங்கள் வியாபாரிகளா?
உங்கள் பொருட்களை விற்க முடியவில்லையா?
நீங்கள் வியாபாரம் செய்ய விரும்புகிறீர்களா?
அதற்கு ஒரு இணையத்தளம் அவசியம்.
இணையத்தளத்தை உருவாக்க 10000 ரூபாய் தேவை.
உருவாக்கினாலும் விளம்பரப்படுத்த சிரமம் உண்டு.
அதனால் ஏற்கனவே பிரபல்யமாக உள்ள businessboard.lk
என்ற இணையத்தளத்தில் உங்கள் பொருட்களை விளம்பரப்படுத்துவதே சிறந்த ஒரு வழி.
businessboard.lk மக்கள் தேடத் தொடங்கியிருக்கிறார்கள்.
தமக்குத் தேவையானவற்றை அதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

நாடுங்கள் businessboard.lk

businessboard.lk இன் நடவடிக்கைகள்

1. தேவையான தொழில் தருனர்களை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம்.
2. வடக்குக் கிழக்கு வாடிக்கையாளர்களைப் பெற்றுத் தருகிறோம்.
3. இலவசமாக உங்கள் வியாபாரத்தை விளம்பரப்படுத்துகிறோம்.
4. முதற்கட்டமாக கிளிநொச்சிப் பகுதியில் 1000இற்கு மேற்பட்ட வியாபாரத்தைப் பதிவு செய்து ஏனைய பகுதி வணிகர்களையும் பதிவு செய்ய ஆரம்பித்துள்ளோம்.

businessboard.lk நீங்களாகவே பதிவுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் தருகிறது.

07665637 அழைத்து உங்கள் வியாபாரத்தை பதிவு செய்ய முடியும் சந்தர்ப்பத்தைத் தருகிறது.
நம்பிக்கையான தொழில் தருனர்களை இணையதளத்தின் மூலம் தேடிப் பெறுவதற்கு businessboard.lk.

அரசு தமிழ் மக்களுக்கு நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும்

சி.அ.யோதிலிங்கம்

கடந்த 4ஆம் திகதி தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடைய பேச்சாளர் சுமந்திரன் அமைச்சர் G.L பீரிஸை அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் இராப் போசன விருந்துடன் சேர்த்து சந்தித்திருக்கின்றார். இது தமிழ் அரசியலில் பலத்த வாதப் பிரதி வாதங்களையும், பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது. பசில்ராஜபக்ஷ அரசியலுக்கு வந்த பின்னர் இவ்வாறான ஒரு செயற்பாடு இடம் பெறும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். பஸில்ராஜபக்ஷ இந்த அரசாங்கத்திற்கு ஒரு லிபரல் முகத்தைக் கொடுப்பதற்காகத்தான் களமிறக்கப் பட்டார். அவர் தன்னுடைய செயற்பாட்டில் முதலாவது கட்டமாக அரசாங்கத்திற்கு எதிராக இருக்கும் மேற்குலகத்தையும் இந்தியாவையும் சமாளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அதன் அடிப்படையில் தான் ஒரே நாளிலேயே அமெரிக்காவினுடைய தூதுவர், பிரித்தானியாவினுடைய தூதுவர், ஜேர்மனியினுடைய தூதுவர், இந்தியாவினுடைய தூதுவர், சீனாவினுடைய தூதுவர், ரஷ்யாவினுடைய தூதுவர் என அனைவரையும் அழைத்து உரையாடலை மேற் கொண்டார். அந்த உரையாடலின் ஊடாக மேற்குலகத் தினுடைய அதிருப்தியிலும் அவர்களுடைய எதிர்ப்பு செயற்பாட்டிலும் ஒரு நெகிழ்வைக் கொண்டு வந்தார். இது அவருடைய முதலாவது கட்டம்.

இரண்டாவது கட்டத்தில் அவர் உள்நாட்டில் அரசிற்கு நெருக்கடியாக இருக்கின்ற விடயங்களைச் சரி செய்வ தற்கு முயற்சிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இக் கட்டுரையாளரும் கூட அதற்கான எதிர்வு கூறலைக் கூறியி ருந்தார். அந்தச் செயற்பாடு என்பது ஏனைய இனங்க ளோடு ஒரு இணக்கத்திற்கு வருவதான செயற்பாடாகும். குறிப்பாக இந்த அரசாங்கம் ஒரு பேரின வாத அரசாங்கம். பெரும்பான்மை மக்களுக்கு மட்டும் சார்பாக இருக்கின்ற அரசாங்கம் என்கின்ற ஒரு பெயர்தான் வெளியுலகில் இருக்கின்றது. அதை மாற்றி இங்கே வாழ்கின்ற ஏனைய இனங்களோடும் உறவுகளைக் கையாளுகின்ற அனை வரின் நலன்களையும் பேணுகின்ற ஒரு அரசாங்கம் என்ற தோற்றத்தை கொடுக்க வேண்டிய தேவையும், அதற்குரிய ஒரு சூழலை உருவாக்கக் வேண்டிய ஒரு தேவையும் இருக்கின்றது. இதன் அடிப்படையில் தான் இச் சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது. அமைச்சரவை மாற்றத்தின் போது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பி னர்கள் சிலருக்கு இராஜாங்க அமைச்சர் பதவிகள் வழங்கப் போவதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இங்கு தமிழ்த் தரப்பிற்கு அப்படியான பதவி எல்லாம் கொடுக்க முடியாது. இனப்பிரச்சினை தீர்வு தொடர் பாக ஒரு பேச்சு வார்த்தையை நடத்துவதன் மூலம் தான் அவர்களுடன் ஒரு நெகிழ்ச்சியான உறவை ஏற்படுத்த முடியும்.

> **அரசாங்கம் இப்போது ஒரு ஆட்டத்தை ஆடத்தொடங்கியுள்ளது. அதனுடைய பிரதான நோக்கம் ஏற்கனவே கூறியதைப் போன்று மேற்குலகத்தினுடைய அதிருப்தியினைத் தணிக்கச் செய்வதும் ஜெனிவாவில் கடுமையான தீர்மானங்கள் வருவதைத் தடுப்பதுமாக உள்ளது. இந்தப் புது ஆட்டத்தில் தமிழ்த்தரப்பும் பங்கு பற்றித்தான் ஆக வேண்டும். தமிழ்த் தரப்பும் இதனை நிராகரிக்கவும் கூடாது அதே வேளை ஒதுங்கியிருக்கவும் கூடாது.**

அரசாங்கத்தை பொறுத்த வரையில் இரண்டு முக்கி யமான நெருக்கடிகள் உள்ளன. ஒன்று ஜெனிவா கூட் டத்தொடர் இடம்பெற உள்ளது. அதில் பிரித்தா னியாவினால் இன்னொரு தீர்மானம் கொண்டுவர இருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன. அத் தீர்மானம் சில சமயம் கடுமையான தீர்மானமாக இருக்கக்கூட வாய்ப்புள்ளது. ஆகவே இந்த நிலைமையை குறிப்பாக அதன் வீரியத்தைத் தணிக்கச் செய்கின்ற தேவை அர சாங்கத்திற்கு உள்ளது. இரண்டாவது மேற்குலகம் அடுத்த கட்டத்திற்குப் போகாமல் தடுப்பதற்குரிய தேவையும் அதற்கு இருக்கின்றது. அடுத்த கட்டம் என்பது குற்றவியல் நீதிமன்றத்திற்கு விசாரணை செல் லாவிட்டாலும் மேற்குலக நாடுகள் தங்கள் தங்கள் நாடு களிலேயே விசாரணையை நடத்தக் கூடிய சூழல் ஒன்று உள்ளது. ஆகவே அந்தக் கட்டத்திற்கு ஒருவேளை இந்த மேற்குலகம் சென்றுவிடுமோ என்ற அச்சம் அரசாங்கத் திற்கு இருக்கின்றது. இதைவிட இங்கு தமிழ் மக்களை திருப்திப்படுத்துவதன் ஊடாகவும் இந்த அமெரிக்க தலை மையிலான மேற்குலகத்தினதும் இந்தியாவினதும் அழுத் தங்களை கட்டுப்படுத்தலாம் என்ற கருத்தும் உள்ளது.

இதே வேளை பசில்ராஜபக்ஷ மாத்திரம் இல்லை அவரோடு வலுவாக நின்று பிடிக்கக்கூடிய இன்னொரு லிபரல் முகமும் உள்ளது. அவர்தான் மிலிந்த மொர கொடா ஆவார். அவரை இந்தியாவினுடைய தூதுவராக நியமித்திருக்கிறார்கள். அமைச்சரவை அந்தஸ்துள்ள ஒரு தூதுவராக அவர் நியமிக்கப்பட் டிருக்கின்றார். இது இந்தியாவைச் சமாளிப்பதற்கான ஒரு முயற்சியாகும். பத்து அம்சங்கள் அடங்கிய ஒரு வரைபடத்தை அவர் வரைந்திருக்கிறார் என்றும் செய் திகள் வந்துள்ளன. ஒரு பக்கத்தில் மேற்குலகப் பிரச்சி னையை அமெரிக்க உறவுகளுக்குள்ளால் தணிக்கவும், இந்திய பிரச்சினையை வரைபடச் செயற்பாட்டின் மூலம் தணிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன. இந்தச் சந்திப்பும் அதன் ஒரு பகுதியே ஆகும். இது மேற்குலகத்திற்கு நம்பிக்கையைத் தரக் கூடியதா கவும் அவர்களை இணைத்த ஒரு செயற்பாடாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக அமெரிக்கத் தூதுவரின் அனுசரணையில் அவரது இல்லத்தில் இடம்பெற்றி ருக்கின்றது. அதுவும் அச் சந்திப்பிற்கு வெளிநாட்ட மைச்சர் தினேஸ் குணவர்த்தனவை அனுப்பாமல் ஒரு லிபரல் முகம் உள்ள பீரிஸை அனுப்பியுள்ளார்கள். இது நிகழப் போகின்ற பேச்சுவார்த்தைக்கு ஆயத்தப்படுகின்ற ஒரு முதற் கட்டச் சந்திப்பு எனக் கூறப்படுகிறது.

ஆனால் இந்தச் சந்திப்புக்கு சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினு டைய பங்காளிக் கட்சிக ளோடு மட்டுமல்ல தமிழரசுக் கட்சி மட்டத்தில் கூட எந்த வித கலந்துரையாடலையும் நடாத்தாமல் சென்றிருக்கின் றார். தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜாவுக்குக் கூட சந்திப்புப் பற்றி எதுவும் தெரிந்திருக்க வில்லை. இவ்வளவு காலமும் சுமந்திரன் ஒரு தனி நபராகத் தான் நகர்வுகளை முன்னெடுத் திருந்தார். அந்த நகர்வுகள் பற்றி பலத்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையில் தான் அவர் செயற் பட்டார். தமிழ் மக்கள் நலன் களில் அக்கறை செலுத்த வில்லை என்ற விமர்சனம் காரசாரமாக வந்திருந்தது. இந்த நகர்விலும் அவர் அவ்வாறுதான் செயற்படப் போகின்றார் என்ற சந் தேகம் பலரிடம் உள்ளது.

அரசாங்கம் இப்போது ஒரு ஆட்டத்தை ஆடத் தொடங்கியுள்ளது. அதனுடைய பிரதான நோக்கம் ஏற்கனவே கூறியதைப் போன்று மேற்குலகத்தினுடைய அதிருப்தியினைத் தணிக்கச் செய்வதும் ஜெனிவாவில் கடுமையான தீர்மானங்கள் வருவதைத் தடுப்பதுமாக உள்ளது. இந்தப் புது ஆட்டத்தில் தமிழ்த்தரப்பும் பங்கு பற்றித்தான் ஆக வேண்டும். தமிழ்த்தரப்பும் இதனை நிராகரிக்கவும் கூடாது அதேவேளை ஒதுங்கியிருக்கவும் கூடாது. பங்குபற்றுகின்ற போது தமிழ்த்தரப்பு வலு வான ஆயத்தங்களோடு ஒருங்கிணைந்து இந்த ஆட்டத் தில் பங்குபற்ற வேண்டிய தேவை உள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கு தேவை இருக்கின்றது. தமிழ் மக்க ளுக்கும் தேவை இருக்கிறது. இந்த இரண்டு தேவைக ளுக்கும் இடையே பொதுப் புள்ளியைக் கண்டுபிடித்து செயற்படுத்த வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. ஆனால் இங்கே அரச தரப்பில் சிறந்த ஆட்டக்காரரகள் களம் இறக்கப்பட்டுள்ளனர். G.L.பீரிஸ் என்றாலும் சரி, மிலிந்த மொரகொட என்றாலும் சரி லிபரல் முகமுள்ள சிறந்த ஆட்டக்காரர்கள் ஆவர். தமிழ்த் தரப்பிலும் வலுவான ஆட்டக்காரர்களை மைதானத்தில் இறக்கி னால்தான் தமிழ்த் தரப்பிற்கு ஏற்ற அவர்களின் நலன்க ளைப் பேணக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும்.

தமிழ்த்தரப்பைப் பொறுத்த வரையில் இந்தப் பேச்சு வார்த்தை தொடர்பாக பெரும் நம்பிக்கையோடு செல்ல வேண்டும் எனக் கூற வரவில்லை. தங்களினுடைய இலக் கிற்கு வலுவான தளமாக இதனைப் பயன்படுத்த முனைய வேண்டும். எப்போதும் சமாதானத்திற்கான பேச்சு வார்த்தை நடக்கின்ற போது ஒடுக்குகின்றவர்கள் அதா வது யாரால் இந்தப் பிரச்சினை எல்லாம் வந்ததோ அதற்குரியவர்கள் நல்லெண்ணத்தைக் காட்ட வேண் டும். எனவே இந்தப் பேச்சு வார்த்தையில் அரசாங்கத் திடம் முதலில் நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும் என்ற நிபந்தனையை தமிழ்த் தரப்பு விதிக்க வேண்டும். ஏனெனில் தமிழ் மக்கள் அரசு தொடர்பாக மோசக ரமான அதிருப்தியில் இருக்கிறார்கள். இந்தப் 10 வருட

ஆட்சிக் காலத்தில் குறிப்பாக நல்லாட்சிக் காலத்திலும் கூட தமிழ் மக்களினுடைய அபிலாசைகள் குறைந்த அளவுகூட பேணப்படவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஐந்து வகை யான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இதில் முதலாவது, இனப்பிரச்சி னைக்கு அரசியல் தீர்வுகாணும் பிரச்சினை. இரண் டாவது, இன அழிப்பிற்கான சர்வதேச நீதி கோருகின்ற பிரச்சினை. மூன்றாவது, நாள்தோறும் நடைபெறுகின்ற ஆக்கிரமிப்புப் பிரச்சினை. நான்காவது, இயல்பு நிலை யை கொண்டுவருகின்ற பிரச்சினை. அதாவது அரசி யல் கைதிகளுடைய விடுதலை காணாமல் போனவர்களுடைய பிரச்சினை என்பன உள்ளடங்கிய பிரச்சினை. ஐந்தாவது போரினால் பாதிக்கப்பட்ட வர்களுடைய நலன்களைப் பேணுகின்ற அன்றாடப் பிரச்சினை.

இதில் முதலாவது இரண்டாவது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காலம் எடுத்தாலும் அதற்கான அத்திவாரங் களைப் போட வேண்டிய தேவை இருக்கின்றது. அதற்கான கால அட்டவணையை உருவாக்க வேண்டிய அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். ஏனைய பிரச்சி னைகளான ஆக்கிரமிப்புப் பிரச்சினை, இயல்பு நிலை யைக் கொண்டு வருகின்ற பிரச்சினை, அன்றாடப் பிரச்சினை என்பவற்றை உடனடியாகத் தீர்த்து நல்லெண் ணத்தைக் காட்டுங்கள் என்ற அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.

இவ்வளவு காலமும் வல்லரசுகளுக்கும் அரசாங்கத் திற்கும் பயன்பட்ட மாதிரியான செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் இந்தத் தடவை கவனமாக இந்த விவகாரத்தை கையாள வேண்டும் என்பதுதான் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களின் கருத்தாகும். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து செயற்படுவதற்குப் பதிலாக ஏனைய இரண்டு தேசியக் கட்சிகளான விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியையும் கஜேந்திரகுமார் தலைமையி லான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை இணைத்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். இதன் போதுதான் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஒருங்கி ணைந்த குரலைக் கொடுக்க முடியும். அப்பொழுது தான் தமிழ் மக்கள் பயனுடைய விளைவுகளைப் பெறக் கூடியதாக இருக்கும். இந்த விடயங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் இந்த அரசியல் தலைமைகளுக்கு வலு வான அழுத்தங்களை கொடுக்க தவறக்கூடாது. ■

‘நிகழ்நிலை’ தடுமாறும் பேரிடர் காலக் கல்வி

சி.யாதவன்

இடர்நிலைக் காலங்களில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதென்பது மிகவும் சிக்கலுக்குரியதொன்று. அதுவும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் இந்த நிலைமைகள் மிகவும் சிக்கலுக்குரியவை. முப்பது வருடங்களுக்கு மேலாக போரை எதிர்கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையில் கல்வி நிலை சார்ந்த வீழ்ச்சி என்பது இன்றைய நிலையோடு ஒப்பிடும் போது மிகவும் குறைவாகவே இருந்தது. அதிலும் கல்வியில் இடரை பெரும்பாலும் எதிர்கொண்ட சமூகங்களாக வடக்குக் கிழக்குத் தமிழ் பேசும் சமூகங்களே இருந்தன அதிலும் குறிப்பாகத் தமிழர்களே அதிகமும் இருந்தனர். பெருபாண்மை இனத்தவர்கள் நெருக்கீடுகளைச் சந்தித்த போதும் வடக்குக் கிழக்குத் தமிழ்பேசும் சமூகங்களைப் போன்று நெருக்கடிகளைச் சந்திக்கவில்லை. தொடர்ச் சியான இடப்பெயர்வுகள், கைதுகள், காணாமல் போதல்கள், விமானக்குண்டு வீச்சுகள் என தமிழச் சமூகம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்த காலத்திலும் கல்விச் செயற்பாடுகள் எல்லாவற்றையும் தாண்டி ஆக்கபூர்வமாக முன்னெடுக்கபட்டன. எல்லாவற் றுக்கும் மேலாக இன்றைய நவீன தொடர்பாடற் சாதனங்கள் விருத்தியடையாத அந்தக் காலகட்டத்தில் கற்றல் என்பது வினைத்திறனுடன் முன்னெடுக் கப்பட்டது.

யுத்தகாலத்தின் இடர் நிலை களைக் கையாளக்கூடிய அறிவுப் பரப்பு தமிழ்ச்சமூகத்திடம் இருந்தது. அதனால்த்தான் இழப்புக்களிலிருந்தும் அழிவுக ளிலிருந்தும் மீண்டெழுந்து கல்வி யைத் தொடரக்கூடிய நிலை காணப்பட்டது. ஆனால் இன்றைய கொரோனா இடர் காலத்தில் மாணவர்களின் கல்விச் செயற் பாடு என்பது ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. தொழில்நுட்ட அறிவியல் ரீதியாக மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்ற இன்றைய காலத்தில் கல்வி நிலை என்பது உலகளாவிய ரீதியில் தாக்கத்திற்குள்ளாகி உள்ள போதும், மேற்குலக நாடுகள் அவற்றை கையாளக்கூடிய மாற்று உபாயங்களை நோக்கி நகர்ந்திருக்கின்றன. அவை இடர்காலத்துக்கு ஏற்ற வகையில் கல்விச் செயற்பாடுகளையும் மதிப்பீ டுகளையும் மாற்றியமைத்திருக்கின்றன. அபிவிருத் தியடைந்த நாடுகள் பெறக்கூடிய வகையிலான வளங்களை அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளும் பெறக்கூடிய நிலை இன்று காணப்படுகின்றது. ஆனால் அவற்றைக் கையாண்டு கல்வியை இடர்நிலைக்கேற்ப மாற்றியமைக்கக் கூடிய திறன் இன்னும் வளர்ச்சிடை யவில்லை என்பதைத்தான் அண்மைய வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் நிலையறி பரீட்சை எடுத்துக் காட்டுகின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கல்வி யில் அது வீழ்ச்சியடைந்துள்ள மாகாணமாகவே யுத்தத் திற்குப் பின்னரான பட்டியற்படுத்தல்களும் ஆய்வறிக் கைகளும் முன்வைக்கின்றன. இந்த வீழ்ச்சி என்பது யுத்தத்தை முதன்மையாகக் கொண்ட வீழ்ச்சி என்ற பொது மதிப்பீடு இருக்கின்ற போதிலும் அதையும் தாண்டிய காரணங்களும் இருக்கின்றன. யுத்தத்திற்குப் பின்னராக ஏற்பட்டிருக்கின்ற கவர்ச்சிகரமான வாழ்க் கையை எதிர்கொள்வதில் தமிழ்ச் சமூகம் திணறுகின்றது என்பது வெளிப்படையானது. தொடர்சியாக யுத்தத்தை எதிர்கொண்ட சமூகத்தில் திடீர் நிலைமாறு வாழ்க்கை என்பது கவர்ச்சிகரமான தோற்றத்தையே ஏற்படுத்தியி ருக்கின்றது எனலாம். இதனை விடவும் அரசியல் சார்ந்தும் சாராமலும் பல காரணங்கள் இருக்கின்றன. இந்த நிலையில், கல்வி நிர்வாகப் பரப்பில் இருக்கின்ற வர்கள் முதலில் சிந்திக்க வேண்டிய விடயம் கற்றல் செயற்பாடு என்பது சமூகத்திலிருக்கும் அனைத்து மாணவர்களையும் சென்றடைகிறதா? என்பதுதான். இதைக் குறித்து பாடசாலை அதிபர்கள், ஆசிரியர் களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களைத் தாண்டி வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் எந்த அள வுக்கு கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது கேள்விக்குரியதே. பொருத்தமான விதத்தில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கு ஏற்ற வகையில் கற்றலை ஒழுங்கு செய்வதற்கான மாற்று முறைகளைக் கண்டடைவதுதான் இன்றைய தேவையாக இருக்கின் றது. குறிப்பாக சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் இருக்கின்ற மாணவர்களுக்கும் கல்வியின் பலாபலன் கிட்டுகின்றதா? என்பதை உறுதிசெய்வதற்கான

முயற்சிகளாவது மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு அதிபர், ஆசிரியர்களின் வாய்மொழி மூலமான தகவல் களோ எழுத்துபூர்வமான ஆதாரங்களோ போதுமானவையல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். குறைந்த பட்சம் கோட்ட, வலய எல்லைகளுக்கு அப்பால் பொதுவான கள ஆய்வுச் செயற்பாடுகள் துறை சார்ந்த நிபுணத்துவத்தினரின் உதவியுடன் முன்னெடுக்கப்படவாவது வேண்டும். இதற்கு பரந்த மனப்பாண்மை அவசியமாகின்றது. இது பலரிடமும் இன்று இல்லை என்பதுதான் வேத னைக்குரியது.

நிலையறி பரீட்சையின் பகுதி ஒன்றுக்கான வினாத் தாள்கள் நிகழ்நிலையில் செய்யக்கூடியதாகவும். பகுதி இரண்டு வினாத்தாள்களை தாளில் எழுதிச் செய்யும் விதமாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தன. நிலையறி பரீட்சை வைக்கப்படுவதன் நோக்கமே இந்த இடர் காலத்தில் மாணவர்களின் கல்வி நிலை எவ்வாறு இருக் கின்றது என்பதை அறிந்து கொள்ளவும் அதனை அடிப் படையாகக் கொண்டு அடுத்த கட்ட கல்விச் செயற் பாடுகளை முன்னெடுப்பதற்காகவுந்தான். அதாவது மாணவர்களின் கல்வி நிலைமையை அறிந்து கொண்டு அதற்கு ஏற்ற விதமாக கற்றல் நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதற்காகவும் அதன் மூலம் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதுமாகும். இவை சாத்தியமில்லை எனில் நிலையறி பரீட்சை என்பது அர்த்தமற்ற சடங்கு போன்றதுதான். வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற நிலையறி பரீட்சை எந்த அளவுக்கு நம்பகத் தன்மையுடையது என்பதை முதலில் இங்கு கருத்திற் கொள்ள வேண்டும். இது வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்க ளிலுமுள்ள பாடசாலைகளையும் உள்ளடக்கிய பரீட்சை என்ற அடிப்படையில் அனைத்துப் பாடசாலைகளினது கற்றல் நிலைகள் தொடர்பாக கருத்தில் எடுக்கப்பட்டி ருக்க வேண்டும். வெறுமனே நகர்ப்புறம் சார்ந்த ஓரள வுக்கு நிகழ்நிலையில் கற்பதற்கான வசதிகளையுடைய மாணவர்கள் கல்வி கற்கின்ற பாடசாலைகளை மட்டும் முன்னீடாகக்கொண்டு பரீட்சைக்கான பாட அலகுளை தீர்மானித்தல் கூடாது. நிகழ்நிலையில் கற்பதற்கான வசதிகள் அற்ற கிராமப்புற பாடசாலைகளில் கற்பிக்கப் பட்ட அலகுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்ளும் போதுதான் அந்த மாணவர்களின் கற்றல் அடைவு தொடர்பாக மதிப்பீட்டை மேற்கொள்ள முடியும். முடிக்கப்படாத பாட அலகுகளை உள்ளடக்கி பரீட்சை ஒன்றை நடத்துவதன் மூலம் பரீட்சையின் நோக்கத்தை ஒருபோதும் எட்ட முடியாது என்பது வெளிப்படை. வடக்கு மாகாண கல்வித்திணைக்களத் தால் நடத்தப்படுகின்ற இந்த நிலையறி பரீட்சை பொதுவான பரீட்சையாக அன்றி அந்தந்த பாடசாலை களுக்கு ஏற்ற விதத்தில் நடத்தப்பட்டிருக்குமாக இருந் தால் மட்டுமே மாணவர்களின் நிலைதொடர்பான மதிப்பீடு ஓரளவுக்கு நம்பகத்தன்மையுடையதாக இருந்திருக்கும்.

ஒரு நியம முறைப்படுத்தப்பட்ட பரீட்சை என்பது உரிய கால அவகாசத்துக்கமைய நடைபெறுகின்ற போதே பரீட்சையின் நோக்கம் முழுமையான விதத்தில் அடையப்படும். இந்த நிலையறி பரீட்சை என்பது ஒழுங்கமைக்கப்பட்ட கால நியமத்துக்குட்பட்டதல்ல என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் தாம் விரும்பிய நேரத்துக்கு செய்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இதனைவிடவும் மாணவர்கள் தாங்கள் கற்றதை வைத்துக் கொண்டுதான் விடையளிக்கின்றார்களா? அல்லது திறந்த நூற் பரீட்சை போன்றே இத னைச் செய்கின்றார்களா? என்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். திறந்த நூற் பரீட்சை போன்று இதனைச் செய்வார்கள் எனில் இந்த பரீட்சை உருவாக்கும் மதிப்பீடு எந்தளவுக்கு நம்பகத் தன்மையுடையதாக இருக்கும் என்ற கேள்வியும் இருக்கின்றது. பெற்றோர்கள் பரீட்சை மேற்பார்வையாளராகக் கடமை புரிய வேண்டும் என எதிர்பார்க்கவும் முடியாது. அப்படி எனில் பெற்றோர் வேலைகளுக்குச் செல்லாது வீட்டில்த்தான் இருக்க வேண்டும். இது சாத்தியமானதில்லை. ஒரு வீட்டில் இரண்டு மூன்று பிள்ளைகள் பரீட்சை செய்வார்கள் எனில் அதற்கான தொலைபேசி, கணனி வசதி என்பவை எந்த ளவுக்கு சாத்தியமானதாக இருக்கும் என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். சில பாடசாலை அதிபர் களும் ஆசிரியர்களும் மாணவர்கள் பரீட்சையை குறித்த நேரத்துக்குச் செய்து தமது வைபருக்கு அனுப்ப வேண்டும் என மாணவர்களைப் பணித்திருக்கின்றனர். உரிய நேரத்திற்கு அனுப்புவதால் மாணவர்கள் பார்த்து விடையளிக்கமாட்டார்கள் என அப்பாவித்தனமான நம்பிக்கை இருப்பது என்பது நகைப்புக்குரியதே. இதனைவிடவும் சில பாடசாலைகள் மாணவர்களை பாடசாலைக்கு வந்து வினாத்தாள்களை பெற்றுச் சென்று விடையளிக்குமாறு கூறியிருக்கின்றன. கொரோனா சமூகத்தொற்றாக உருவெடுத்திருக்கின்ற இன்றைய நிலையில் இது எந்தளவுக்கு பொருத்தப் பாடானது என்பதையும் யோசிக்க வேண்டும். பாட சாலை அதிபர்கள் வினாத்தாள்களைத் திருத்தி விரைந்து ஒப்படைக்குமாறு ஆசிரியர்களை பணிக்கவும் கூடும். அவ்வாறு எனினும் அது பரீட்சை முடிந்து பதினான்கு நாட்களைத் தாண்டியதாகவே இருக்க வேண்டும். கொரோனா சமூகத் தொற்றாக இருப்பதால் மாண வர்கள் ஒப்படைக்கும் விடைத்தாள்களின் வழி பரவவும் சாத்தியமிருக்கின்றது. இத்தகைய செயற்பாடுகள் மாண வரிடத்திலும் ஆசிரியர்களிடத்திலும் உள அழுத் தத்தையே ஏற்படுத்தும் என்பதையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். மாணவர்களை, ஆசிரியர்களை மட்டுமல்ல பெற்றோர்களையும் உள நெருக்கடிக்குள் ளாக்கும். குறிப்பாக தொழில் புரியும் பெற்றோர்கள் தமது தொலைபேசிகளை மாணவரிடம் கொடுத்து விட்டே செல்ல வேண்டிய நிலையும் இருக்கின்றது. கைத்தொலைபேசிப் பாவனை மாணவர்களிடம் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது என்ற பொது அபிப்பிராயம் இருக்கின்ற சூழலில் பெற்றோர் கள் கைத்தொலைபேசிகளை பிள்ளைகளிடம் கொடுத்து விட்டு போவார்கள் எனின் அவர்கள் வேலைத் தளத்தில் செயற்பட முடியாத உள நிலைக்குத் தள்ளப்படு கின்றார்கள்.

நடைமுறை சார்ந்து யோசிக்கின்ற போது இத்தகைய எண்ணற்ற பிரச்சினைகள் இருக்கின்ற. இவையெல்லா வற்றையும் கருத்தில் கொள்ளாது நடத்தப்படுகின்ற நிலை யறி பரீட்சை வெறும் சம்பிரதாயபூர்வமான சடங்கா கவே இருக்கின்றது. இதை வினைத்திறன் ஆக்க வேண் டும் எனில் பொருத்தமான வழிமுறைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும். முதலில் இடர் காலத்தில் கல்வியை அனைத்து மாணவர்களும் பெறத்தக்க வகையில் அதனை உறுதி செய்ய வேண்டும். இடர் காலத்தில் பாடசாலைகளில் நிகழ்த்தப்பட்ட நிகழ்நிலை வகுப்புக்கள் பலவும் அதிபர், ஆசிரியர்களின் சொந்த முயற்சிகளால் நடத்தப்பட்டவையே ஆகும். மாணவர் நலன் சார்ந்து அவர்களால் தனிப்பட எடுக்கப்பட்ட முயற்சிகளாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

பயணங்களும் பட்டறிவுகளும்

வேதநாயகம் தபேந்திரன்

1998 ஆம் ஆண்டு. "ஒரு மனிதனின் பட்டறிவு எப்போது உயர்வடையும்? "

ரயில்வே திணைக்களத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற அந்தப் பெரியவர் என்னைக் கேட்டார். நான் பல பதில்களைச் சொன்னேன். அவர் திருப்திப்படவில்லை.

"ஒரு மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு பிரயாணங்களைச் செய்கிறானோ ,அவ்வளவுக்கு அவ்வளவு பட்டறிவைப் பெறுகிறான். கூடவே உடல் ஆரோக்கியத்தையும் பெறுகிறான்" எனப் பதில் சொன்னார்.

அவரது கூற்றைச் சீர்தூக்கிப் பார்க்கிறேன். முழுதும் உண்மை.

"அவர் ஊர் அடிப்பட்டவர். அந்தாளை ஏமாற்ற முடியாது"

"உந்தக் காடுகரம்பையெல்லாம் திரிஞ்ச மனுசன். அவரை நோய் அண்டாது"

"ஒல்சிலோன் முழுக்க உத்தியோகம் பார்த்த மனுசன். மூண்டு மொழியும் அவருக்கு விரல் நுனியில். ஆள் விசயகாரன் " இப்படியான பேச்சுவழக்குச் சொற்களை நாம் அன்றாடம் காண் கின்றோம்.

வீட்டுக்குள் பொத்திப் பொத்தி வளர்த்த பிள்ளை பெரியவனானதும் வெளியில் விட்ட போது கூடாத கூட்ட மெல்லாம் கூடிக் கெட்டுப் போனான்.

பயணம் செய்து நல்லது, கெட்டது எதுவென அறியும் ஒருவர் சுயமாக முடிவெடுக் கும் திறனைப் பெறுவார். வருகின்ற நிலைமை களைச் சமாளிக்கும் திற னைப் பெறுவார். அத னால் தான் வீட்டுப் பிரா ணியாக வளர்த்த பிள்ளை வெளியுலகில் ஏமாந்து போவது அதிகமாக உள்ளது.

அரச, தனியார் சேவைத் துறை நிறுவனங் களைப் பாருங்கள் முதல் நியமனத்தில் கஷ்டப் பிரதேசங்களில் பல வருடங்களில் கடமை யாற்ற வாய்ப்புக் கிடைத் தவர்கள் நிறைந்த அனு பலசாலிகளாகவும், சிங்கள, ஆங்கில மொழி களில் புலமை பெற்றவர் களாகவும் இருப்பார்கள். போக்குவரத்துச் செய்யும் போது ஒரு பாதை அடைபட்டால் மாற் றுப் பாதையால் சென்று தமது தேவைகளை நிறைவு செய்து கொள் வார்கள்.

பல மாகாணங்களில் அல்லது பல மாவட்டங் களில் பணி புரிந்த அல்லது வர்த்தகக் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒருவர் பல நன்மை களை அனுபவிப்பார்.

ஒரு தேவை கருதிப் பயணம் செய்யும் போது தங்குமிட வசதிகள் தொடர்பாகப் பெரிய பிரச்சி னைகளை எதிர்நோக்க மாட்டார்கள். நல்ல எண் ணத்துடன் சிந்தனையுடன் சேவைகளுடன் பழகும் ஒருவர் மிக இலகுவாகத் தனது தேவைகளை நிறைவு செய்து கொள்வார், ஏன் வேலை வாய்ப்புகளைக் கூடப் பெறுவார்கள்.

வெளிப் பிரதேச வாழ்க்கையின் போது சமையல் செய்தல், தனது தேவைகளைத் தானே நிறைவு செய்தல், வாழ்க்கை வட்டத்தில் அடித்தட்டு நிலையிலுள்ள மக்களின் கஷ்டங்களைப் புரிந்து கொள்ளல் போன்ற பல நிலைகளைக் கற்றுக் கொள்வார்கள்.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பிரதேசத் திலுள்ளவர்களை அவதானித்துள்ளேன். பெரும் பான்மையோர் கல்வியைத் தமது உயிர் மூச்சாகக் கொள்வார்கள். வேலை வாய்ப்பு என்று வந்தால் எந்தக் கஷ்டப் பிரதேசம் என்றாலும் பெரும் பாலானோர் மறுப்புச் சொல்லாமல் செல்வார்கள். அது நெடுந்தீவாக இருந்தாலென்ன, வெலிஓயா, வாகரை, ஈச்சிலம்பற்று, செட்டிகுளம், நெடுங்கேணி, அம்பாந்தோட்டை , மொனறாகல, பதுளை வரை யில் சென்று கடமையாற்றுவார்கள்.

போர் தந்த இன ரணங்களும் புலம்பெயர்வுகளும் மாகாண சபை முறைகளும் ஏனைய மாவட்டங்களில் உள்ளோர் படித்து முன்னேறிய நிலைகளும்

உத்தியோகம் பார்த்த, வியாபாரம் செய்த எமது எல்லைகளைக் குறுகச் செய்து விட்டது.

விரிவடைந்த எல்லைகளில், நிலப்பரப்புகளில் ஊடாடிய மனிதர்கள் அறிவாற்றல் மிகுந்தவர்களா கவும், பலரையும் ஏற்றுக் கொள்ளும் பண்பட்ட மனம் உடையவர்களாகவும் இருந்தார்கள். பழை மைகளின் பெயரால் மனிதர்களைப் புறமொதுக்கும் பண்பு குறைந்தவர்களாக இருப்போரும் அதிகம்.

ஆனையிறவுக்கு வடக்காக வந்தவுடன் மண்ணின்

"விரிவடைந்த எல்லைகளில், நிலப் பரப்புகளில் ஊடாடிய மனிதர்கள் அறிவாற்றல் மிகுந்தவர்களாகவும், பலரையும் ஏற்றுக் கொள்ளும் பண்பட்ட மனம் உடையவர்களாகவும் இருந்தார்கள். பழைமைகளின் பெயரால் மனிதர்களைப் புறமொதுக் கும் பண்பு குறைந்தவர்களாக இருப் போரும் அதிகம்."

காற்றுப்பட்டுத் திருந்தாதவர்களும் சிலர் உண்டு.

பயணங்களை அடிக்கடி செய்யும் போது உடல்நிலை பல காலநிலைகளுக்கும் ஒத்துவரும் நிலையைப் பெறும். உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி உண்டாகும். மாறுபட்ட பண்பாடுகளை அறிய முடியும். வேறுபட்ட சமையல் முறைமைகளை, உணவுகளை ருசிக்க முடியும்.

போர் தந்த இடம் பெயர்வுகளின் போது தாம் முன்பு பணியாற்றிய பிரதேசங்களில் பாதுகாப்புக் கருதிச் சென்ற போது தங்குவதற்கான வசதிகளை சுலபமாக ஏற்படுத்திக் கொண்டார்கள்.

மூவின மக்களுடன் மும்மொழிகளிலும் கடமையாற்ற வாய்ப்புக் கிடைத்த ஒருவர் பலவித முகாமைத்துவ அறிவுகளைப் பெறுவார். தீர்மானம் எடுக்கும் திறன்களைப் பெறுவார். அதன் மூலமாக நிர்வாக ஆற்றல் கூடிச் செயற்திறனுள்ள மனிதராகச் சமூகத்தில் மதிக்கப்படுவார்.

உயர் பதவி வகிப்போர், அரசியல் பிரமுகரின் சிபாரிசுடன் தமது காரியங்களை இலகுவாக நிறைவேற்றிக் கொள்வார்கள்.

சனத்தொகை எவ்வளவுக்கு எவ்வளவு நகரு கின்றதோ அந்தளவுக்குப் பொருளாதாரம் வளரும் எனப் பொருளியல் கோட்பாடு கூறுகின்றது. எம்மவர்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடப்பதில்தான் பெருமளவுக்கு விருப்பம் காட்டுகின்றனர்.

அயல் நாடான இந்தியாவை எடுத்துக் கொண் டால் அங்குள்ள மக்கள் வீட்டை விட்டு வெளியே நடமாடுவதிலும் பல்வேறு சேவைத்துறைகளிலும் ஈடுபட்டு வருமானம் உழைப்பதிலும் நாட்டம் செலுத்துகின்றனர்.

அங்கு பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் எந்த நேரமும் சனங்கள் முட்டி மோதிக் கொள்ளு மளவுக்கு நெரிசல் நிலை காணப்படுகின்றது. போக்குவரத்துச் சேவைகள் 24 மணி நேரமும் திறம்பட நடைபெறுகின்றது. ரயில்வே துறைக்கென தனியாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு இயங்குமளவுக்கு ரெயில்வே போக்குவரத்துகள் பிரமாண்டமானதாக உள்ளன. அதனால் அவர் களது பொருளாதார வளர்ச்சி வேகமானதாக முன்னகர்த்தப்படுகின்றது.

எம்மவருக்குப் புலம்பெயர்வு வாழ்க்கை நாடுக ளின் எல்லைகளைக் கடந்து மொழிகளை, கால நிலைகளை, பண்பாடுகளை கற்றுத்தந்துள்ளது. புலம்பெயர்வால் குடும்பக் கட்டமைப்புகள் சிதறி யது ஒரு தீமையான விளைவு தான். ஆனால் உலகப் பரப்பில் அனுபவஞானம் மிக்க புலமைசார் சமூகமாக இலங்கை மக்களை உருவாக்கி உள்ளது.

கடல் சூழ்ந்த நாட்டில் பிறந்து விட்ட நாம் அங் காலே இங்காலே அசைய முடியாது. போதாக் குறைக்குச் சிறிலங்காப் பாஸ்போட் என்றால் மதிப்புக் குறைந்த நிலை.

மேற்கு ஐரோப்பாவில் உள்ள நாடொன்றில் காலூன்றி வதிவிட உரிமையோ பிரஜாவுரிமையோ பெற்ற ஒருவர் இங்கிலாந்து முதல் நோர்வே வரை, முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகள் வரை ஏன் இந்தியா வரையில் பயணிக்கலாம். எவ்வளவோ அனுபவங்களைப் பெறலாம்.

சிலர் பலநாடுகளுக்குச் சென்று சுவையான காத்தி ரமான பயணக் கட்டுரைகளை எழுதுகின்றனர்.

பயணங்களால் பெறும் பட்டறிவுகள், சுற்றுலா மூலமாகப் பெறும் உளநல மேம்பாடுகள் முக்கியமானவை. எல்லைகள் கடந்த வாழ்க்கை புத்துணர்ச்சியைத் தரும். இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்திக் கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி எவ்வளவுக்கு எவ்வளவு பயணங்கள் செய்ய முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு பயணங்களைச் செய்யுங்கள். அறிவில் செயற்திறனில் மேம்பட்ட ஒருவராக வருவீர்கள். ■

அறிந்தேன்...பகிர்ந்தேன்...

வியாக்ரன்

Google™

ஒன்று என்ற எண்ணின் அருகே சுழியம் (பூஜ்யம்) போட்டால் பத்து என்றும், ஒன்றின் அருகே இரு சுழியம் போட்டால் நூறு என்றும் குறிப்பிடுகின்றோம். அதேபோல ஒன்றின் அருகே நூறு சுழியம் போட்டால் வருகின்ற பெறுமதியே Google எனப்படுகின்றது. "அற்புதம்" என்ற வார்த்தை கூட ஒன்றின் அருகே எட்டுச் சுழியம் போடப்படுகின்ற பெறுமதியினையே (100 மில்லியன்) குறிக்கின்றது.

சுத்த தன்யாசி ராகமானது மருத நிலத்திற்குரிய சிறுபண்ணாகும். "ஆம்பல் அம் தீங்குழல் தெள்விளியாற்ற" எனக் குறிஞ்சிப்பாட்டும், "ஆம்பலம் தீங்குழல் கேளாமோ தோழி" எனச் சிலப்பதிகாரமும் "ஆம்பல்குழல்" எனச் சுத்த தன்யாசிராகத்தையே குறிப்பிடுகின்றன. எம்.எஸ் விஸ்வநாதனின் இசையில் கண்கள் எங்கே நெஞ்சமும் அங்கே (கர்ணன்) தொட்டால் பூ மலரும் (பட கோட்டி) போன்ற பாடல்கள் சுத்த தன்யாசிராகத்தில் அமைந்தனவே. இசைஞானி இத்தகைய ராகத்தை விட்டு வைப்பாரா? சிறு பொன்மணி (கல்லுக்குள் ஈரம்) மாஞ்சோலைக் கிளிதானோ (கிழக்கே போகும் ரயில்) விழியில் விழுந்து இதயம் (அலைகள் ஓய்வதில்லை) மாலையில் யாரோ (சத்ரியன்) என்று அற்புதமான பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

வினைத் தொகையானது மூன்று காலங்களுக்கும் விரிவு கொள்கின்றது. நிறைகுடம் என்பது நிறைந்த குடம், நிறைகின்ற குடம், நிறையும் குடம் என அமையும். வினைத் தொகையின் அடிப்படையில் நிறைகின்ற, நிறையும் எனும் பண்பால் நிறைகுடம் குறைகுடமாகி விடுகின்றது. தமிழ் மொழியின் நுண்ணிய பண்பு வியப்பினைத் தருகின்றது. வினைத் தொகை சந்தி விகாரங்களை ஏற்பதில்லை. அடிகயிறு என்பதை அடிக்கயிறு என எழுதினால் வேற்றுமைத் தொகையாகி விடும். எனவே நலன்புரி சங்கம், திரு நிறைச் செல்வன், வெட்டுக்கத்தி என்றெல்லாம் எழுதுவது தவறானதாகும்.

கூத்துக் கலையின் நீட்சியாகவே சினிமா தோன்றியது. எனினும் கூத்துக் கலைஞர்களின் வாழ்வு மிக வறுமையில் தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. பேரிடர்களிலும் அவர்கள் கலையார்வத்தோடு செயலாற்றி வருகின்றனர். தமிழ் நாடு வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கூத்துக் கலைஞரான ஜி.கமலநாதன் கூத்தினை நிகழ்த்தியவாறே இயற்கை எய்தியுள்ளார். நாடக மன்ற ஆசிரியரான இவர் (வயது - 52) காளியம்மன் கோவிலொன்றில் அர்ஜுனன் தபசு கூத்திலே அர்ஜுனன் வேடமேற்று நடித்தவாறே காலமானார். கடந்த ஓகஸ்ட் 9 ஆம் திகதி காலை 5.30 மணியளவில் அக் கலைஞர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

ஈழத்தின் மிக முக்கியமான இலக்கிய ஆளுமையான கவிஞர் சோ பத்மநாதனின் 34 கவிதைகள் "அதிர்கல்லுக்கபுறம்" என்ற தலைப்பிலே K.S வெங்கிடாசலம் என்பவரால் மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஈழத்து இலக்கிய உலகிற்கு கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் பெருமை சேர்த்துள்ளார். அவர் எழுதிய முன்னைய கவிதையொன்றின் சில அடிகள் இத்தருணத்திலே ஞாபக இடுக்கில் மின்னுகின்றன.

" யார் செய்த வேளாண்மை? யார் வெட்டுவோர்கள்?
யார் நட்ட பனை வடலி? யார் தறிக்கிறார்கள்?
யார் கையில் கொடுவாள்கள்? யார் கை கும்பிடுங்கை?
யார் கொல்லப்படுவோர்கள்? யார் கொன்று மகிழ்வோர்?
யார் வயலை உழுகிறான்? யார் விளைச்சல் பெறுவோன்?
யார் தறியில் நெய்கிறவன்? யார் உடுத்து மகிழ்வோன்?
யார் சேனை நடத்துபவன்? யார் போரில் மடிவோன்?
யார் விற்ற ஆயுதங்கள்? யார் சுட்டு மகிழ்வோர்?"



நிலைக்கண்ணாடி

தரிசனன்

பிள்ளைகளிடத்திலான கண்டிப்பும் அவர்களை வழி நடத்தலும்

பொதுவாக எல்லாப் பெற்றோருமே தமது பிள்ளைகள் வல்லவர்களாக உயர்ந்து விளங்க வேண்டும் என்பதையே விரும்புவார்கள். அது ஒன்றும் அடைய முடியாத, சிரமமான சாத்தியமான விடயமல்ல. ஆனாலும் பல சந்தர்ப்பங்களில் பல பெற்றோரது இத்தகைய எதிர்பார்ப்புகள் நிறைவேறத் தவறிப் போய்விடுவதை நாம் காலங்காலமாகக் கண்டு வருகிறோம். சொல்வழி கேட்பதில்லை. குழப்படிகாரர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லி பெற்றோர்கள் ஆதங்கப்படுவதையோ சங்கடப்படுவதையோ நாம் பார்க்கிறோம்.

அத்தகைய பிள்ளைகள் விடயத்தில் இவர்கள் கவலையடைகிற போதும் அதற்குரிய தீர்வு வழிமுறைகளைக் கண்டடைவதில் பெரும்பாலும் பெற்றோர்கள் பெரிதும் தவறிழைத்து விடுகிறார்கள்.

எமது சமூகத்தில் அயலவர்களோ, உறவினர்களோ தமது குழந்தையை ஒரு விடயத்தில் நல்ல விதமாக உருவாக்கிக் கொள்ள ஒரு முயற்சியெடுப்பதைக் காணவோ அறியவோ நேரிடும் போதுதான் நாங்களும் எங்கள் குழந்தைகளை அவ்வாறு உருவாக்கிக் கொள்வதற்கான செயற்பாடுகள் பற்றி யோசிக்கவே தொடங்குவோம். அல்லது அதற்கான நடவடிக்கையில் இறங்குவோம். மற்றவர்கள் எதிலாவது முன்னேறுவதைக் கண்ணுறும் போது தான் எமக்கும் அது பற்றிய விழிப்புணர்வு உண்டாகிறது.

அவ்வாறில்லாமல் நாமாக நமது முக்கிய கடமைகளிலொன்றாக நினைத்து பிள்ளைகளின் நல்வாழ்க்கைக் காகவும் பிரகாசமான எதிர்காலத்திற்காகவும் உரிய முறையில் யோசித்துத் திட்டமிட்டுச் செயலாற்ற ஆரம்பிப்போமெனில் சரியான முறையிலும் பொருத்தமான வழியிலும் பிள்ளைகளை வழிநடத்துவது இலகுவாய் அமையும்.

பிள்ளைகளை அழைத்து அருகில் அமர வைத்து அவர்களது கல்வி முதலான நடவடிக்கைகள் பற்றிப் பொறுப்புடன் தெளிவுபடுத்தி உயர்ந்து வருதலின் அவசியத்தை விளக்கி நாம் காட்டும் வழியில் அவர்களை நடக்க வைக்க முனையும் போது எமது பிள்ளைகளும் அதைப் புரிந்து கொண்டு பின்பற்ற முன்வருவார்கள். பிள்ளைகளின் ஆக்கத்துக்கும் பெற்றோரும் மூத்தோரும் காட்டுகின்ற வழியை அவர்கள் பின்பற்றும் வகையில் வழிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

சில பெற்றோர் பிள்ளைகளுக்கு வழிகாட்டும் போதோ புத்திமதி சொல்லும் போதோ எடுத்த எடுப்பிலே அவர்களின் எதிர்மறைப் பண்புகளை எடுத்துக் காட்டி அவர்களை கண்டித்தும் ஏனைய பிள்ளைகளோடு ஒப்பிட்டும் இவர்களைத் தரமிறக்கிப் பேசுவதை நாம் காண்பதுண்டு அது தவறான அணுகு முறையாகும்.

நமது கருத்தைப் பிள்ளை விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் ஏன் அத்தகைய கருத்துக்களை வலியுறுத்துகிறோம் என்பதை முதலில் எமது பிள்ளைகள் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு மூத்தோராகிய எமது அணுகுமுறைகள் சரியானதாக அமைதல் வேண்டும். சாதாரணமாக நாம் பிள்ளைகளின் குறைகளைக் கண்டித்து அவர்களை அவமதிக்கும் வகையில் வார்த்தை பேசி எமது கோபத்தை அவர்களிடம் தெரியப்படுத்தி கடினமாகப் பேசுவோமெனில் பிள்ளைகளிடம் எமது மனக் கருத்துக்குச் சார்பான சிந்தனை முளை விடாது. எமது நோக்கத்துக்குமாறாகவே அவர்கள் சிந்திப்பார்கள்.

ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோர் அல்லது மூத்தோர் சொல்வது எல்லாம் தமது நல்வாழ்க்கைக்காகவும், எதிர் காலத்தில் உயர்ந்த நிலையினை அடைய வேண்டும் என்பதற்காகவுமே என்பதனை உணரக் கூடிய வகையில் அவர்களுக்கான வழிப்படுத்தல்கள் அல்லது ஆற்றுப்படுத்தல்கள் அமைதல் வேண்டும். பிள்ளைகளுக்கு முதலில் பெற்றோராகிய எங்கள் மீது நம்பிக்கையிலும் அவர்கள் எனது பெற்றோர் என்ற உரிமையும் பாசமும் கொண்ட புரிதலும் இருக்க வேண்டும். அவ்வாறான புரிதலை நாம் எதிர்பார்ப்பின் அதற்குரிய வழியில் அதற்குரிய சொற்களில் நிதானமாக பரிவோடு நாம் அவர்களிற்கு எமது கருத்தைப் புரிய வைத்தல் வேண்டும். மாறாக அவர்களின் அகம் புண்படும் வகையில் எமது பேச்சும் அணுகுமுறையும் இருக்குமெனில் எமது எதிர்பார்ப்பு நிறைவேறாமலே போய்விடக் கூடும்.

பொதுவாகவே பல பெற்றோர் தமது பிள்ளைகளின் புறத் தேவைகளை சரிவர ஒரு குறையுமில்லாமல் நிறைவேற்றி விட்டால் போதும் என்று நினைக்கிறார்கள்.

பிள்ளைகளின் நியாயமான தேவைகளைத் தவறாமல் நிறைவேற்ற வேண்டியது பெற்றோரின் கடமைதான். ஆனால் பிள்ளை அதனைச் சரிவரப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியதன் அவசியத்தினையும் உணர்த்த வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளையெல்லாம் பெற்றோர் குறைவின்றி நிறைவேற்றுதலில் பெற்றோரது விருப்பத்துக்குத் தகுந்தாற் போல் பிள்ளை கட்டாயம் நடந்து கொள்ளத்தான் வேண்டும்.

எங்களது பிள்ளைகள் எம்மையே நம்பி வாழ்பவர்கள். முடிந்த வரை அவர்களது தேவைகளை நிறைவேற்ற முயற்சிப்பது பெற்றோராகிய எமது தவிர்க்க இயலாத கடமை அதே வேளை எமது நல்வாழ்க்கை என்ற ஒரு நோக்கத்தை அடைய வேண்டியே எமது பெற்றோர் எம்மிடம் இதையிதையெல்லாம் எதிர்பார்க்கிறார்கள். தமது மகிழ்ச்சிக்காக உழைக்கும் எமது பெற்றோரின் நியாயமான எதிர்பார்ப்பை எவ்வாறேனும் நாம் நிறைவேற்ற வேண்டும் எனப் பிள்ளைகள் உணரும் வகையில் நாம் அவர்களைச் சிறுவயதிலிருந்து வழி நடத்த வேண்டும். ■

யோசுவாவின் “புதிய சுவை”

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

சில நாட்களுக்கு முன்பு, குத்தரிசிப் பிட்டும் குளத்து மீன் கருவாட்டுக் கறியும் பீற்றூட் பாயாசமுமாக ஒரு விருந்தைத் தந்திருந்தார் யோசுவா. குத்தரிசிப் பிட்டில் பப்பாசிக்காயையும் துருவிச் சேர்த்திருந்தார். இந்தக் கலவை ஒரு புது ருசியைத் திறந்தது. அன்றிரவு அருமையான சாப்பாடு. அதற்கு முன்பு, மரவள்ளியும் முருங்கை இலைத் தண்டும் கலந்து ஆக்கப் பட்ட சூப்பைத் தயாரித்துத் தந்தார். இலையை உருவி எடுத்து விட்டு, அதன் தண்டை மட்டும் தனியாக நறுக்கி, அத னோடு கீரைகளின் தூளையும் சேர்த்து மரவள்ளியுடன் ஆக்கிய சூப் தூக்கலாக இருந்தது. ஆச்சரியமூட்டும் ஒரு வித்தை யைப் போல எல்லாவற்றையும் நம்முடைய கண்ணுக்கு முன்பாகவே செய்தளித்தார் யோசுவா. இந்தச் சமையலில் தனக்கு உத வியாக நம்மையும் இணைத்துக் கொண் டது இன்னொரு சிறப்பு. நாமே சேர்ந்து ஆக்கி உண்டதைப்போன்றதொரு திருப்தி.

இதற்கு முன்பு, இன்னொரு நாள் அவல் கொத்தைச் செய்திருந்தார். என்ன அவலில் கொத்தா? என்று நீங்கள் வாயைப் பிளக்க லாம். எனக்கும் ஆச்சரியமாகவே இருந்தது. அவரிடமே இதைப்பற்றிக் கேட்டேன். அவர் சொன்னார், “வழமைக்கு மாறாகச் சிந்திக்கிறேன். புதிய வழி பிறக்குது” என்று. எப்படியென்றால், “வழமையாக அவலுடன் சீனி அல்லது சர்க்கரையை இணைத்து இனிப்பாகவே நாம் சிந்திப்போம். தவிர, அதனுடன் மாமிசத்தைச் சேர்ப்பதைப் பற்றி எண்ணவே மாட்டோம் அல்லவா. இங்கே இனிப்புக்குப் பதிலாக உறைப்பு. சைவத்தை மாமிசத்துடன் இணைக்கிறேன். ஒரு புதிய உணவு பிறக்கிறது. எளிமை, விரைவு, பொலிவு, சுவை என்ற நான்கும் நமக்கு நன்மையாகின்றன” என்றார் யோசுவா.

ஆகவே இதுவும் பிரமாதமே. அவலை கழுவிப் பிழிந்து எடுத்து அதில் கொஞ்சம் மிளகாய்த் தூளையும் அளவான உப்பு நீரையும் கொஞ்சம் வெங்காயம், பச்சை மிளகாய் நறுக்குகளையும் கொட்டிக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். இன்னொரு சட்டியில் இறைச்சியையும் சர்க்கரைப் பூசணிக்காயின் நறுக்குத் துண்டுகளையும் சேர்த்துக் கறியைச் சமைத்துக் கொள்ள வேண்டும். பிறகு இரண்டையும் ஒன்றாகக் கொட்டி, அள வாக எண்ணையை ஊற்றிப் பிரட்டி எடுத்து விட வேண்டியதுதான். வாசமும் ருசியும் அந்த மாதிரியிருக்கும்.

இன்னொரு ஸ்பெஷலைப் பற்றியும் இங்கே சொல்ல வேண்டும். அது பப்பாசிப் பிட்டு, பப்பாசிக் கறி, பப்பாசிச் சூப் என அனைத்துமே பப்பாசியில் செய்யப்பட்ட அயிற்றங்கள்.

இந்தச் சமையல் முறையையும் நாங்கள் பார்த்திருக்கவே செய்தார் யோசுவா. முத லில் பப்பாசிக் காயைக் கழுவி எடுத்து தோலைச் சீவி விட்டு, அதை க்றேப் பண் ணினார். அப்படிச் சீவி எடுக்கப்பட்ட பப்பாசித் தூவலுடன் கொஞ்சம் அரிசி மாவைக் கலந்து பிட்டை ஆக்கினார். இது பப்பாசிப் பிட்டாகியது. கவனிக்கவும், தேங்காயைச் சேர்த்துக் கொள்ளவேயில்லை என்பதை.

> “கிளிநொச்சியில் உள்ள மலையா ளபுரம் என்ற சிறிய கிராமத்திலேயே யோசுவாவின் இந்தச் சுவையகம் உள்ளது. யோசுவா சுவையகத்தில் வார இறுதி நாட்களில் அவர் தன்னு டைய புதிய புதிய சமையல்களை அறிமுகப்படுத்துகிறார். எதற்காக இதைச் செய்கிறார் என்றால், இயற்கையான - சத்தான உணவை எல்லோரும் இலகுவாகச் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக.”

பிறகு கறி, தோல் சீவப்பட்ட பப்பாசிக் காயை துண்டுகளாக நறுக்கி எடுத்து அதனுடன் கொஞ்சம் கீரைப் பவுடரையும் சேர்த்து காடை முட்டைக ளைக் கலந்து கறியை ஆக்கினார். அள வான மிளகாய்த் தூள் கலக்கப்பட்டது. மணமும் குணமும் அப்படியொரு தனி ரகமாகியது.

அடுத்தது, பப்பாசிச் சூப். பப்பாசித் தூவல்களோடு கீரைப் பவுடரைக் கலந்து காடை முட்டைகளையும் சேர்த்து இந்தச் சூப்பினைச் செய்திருந்தார் யோசுவா. நட்சத்திர விடுதிகளில் செய்து தரப்படும் உணவைப் போலச் சுவையும் புதுமையு மாக இருந்தது. எல்லாவற்றையும் விட இவை இயற்கையாகக் கிடைக்கும் உண வுப் பொருட்களில் இருந்து செய்யப்பட்ட சாப்பாடாகும். அதுவும் மிகச் சாதாரண மாக நம்முடைய சூழலில் கிடைக்கும் பொருட்களைக்கொண்டு செய்யப்பட்டவை.

இங்கே கீரைப் பவுடரைப் பற்றிச் சொன்னேன் அல்லவா. இந்தக் கீரைப் பவுடரில் ஏறக்குறைய பதினெட்டு வகையான கீரையினங்கள் உள்ளன. முசுட்டை, மொசுமொசுக்கை, வல்லாரை, குறிஞ்சா, பனங்கீரை, கொவ்வை, முருங்கை, அகத்தி, பொன்னாங்காணி, பசளி, முடக் கொத்தான், குப்பைக் கீரை, புளிச்சல் கீரை, தேங்காய்ப்பூக் கீரை, கீழ்காய் நெல்லி, தூதுவளை, துளசி போன்றவற்றை அவற் றின் பச்சை நிறம் கெட்டு விடாமல் உலர்த் திப் பொடி செய்யப்பட்ட தூளாகும். இவற்றைத் தனித்தனியாகவும் வைத்திருக் கிறார்கள். சேர்த்துக் கலவையாகவும் வைத்திருக்கிறார்கள்.

எல்லாமே இயற்கை வழி உணவுக்கா னவை மட்டுமல்ல, அத்தனையும் உயர்ந்த உயிர்ச்சத்துகளைக் கொண்டவையும் கூட.

கிளிநொச்சியில் உள்ள மலையாளபுரம் என்ற சிறிய கிராமத்திலேயே யோசுவாவின் இந்தச் சுவையகம் உள்ளது. யோசுவா சுவையகத்தில் வார இறுதிநாட்களில் அவர் தன்னுடைய புதிய புதிய சமை யல்களை அறிமுகப்படுத்துகிறார். எதற்காக இதைச் செய்கிறார் என்றால், இயற்கையான, சத்தான உணவை எல்லோரும் இலகு வாகச் செய்து கொள்ள வேண்டும் என்ப தற்காக. இதைச் சமூக மயப்படுத்துவதற் காக நண்பர்களை, சமூக மட்டத்தில் பணி யாற்றுகின்றவர்களையும் அழைத்து இந்த உணவாக்கங்களை அறிமுகப்படுத்துகிறார்.

தன்னுடைய உணவுக்காக அவர் இரண்டு இடங்களில் இயற்கைப் பண் ணைகளை - தோட்டங்களையும் வைத்தி ருக்கிறார். ஒன்று மலையாளபுரத்திலே, மற்றது இயக்கச்சியில். இவை கூடப் பெரிய அளவிலானவை என்று சொல்ல முடியாது. நம்முடைய வீட்டுச் சூழலில் நாம் உண் டாக்கி வளர்த்துப் பராமரிக்கக் கூடிய மாதிரியானவையாகவே இரண்டும் உள் ளன. எதையும் சாதாரணமாக நம்முடைய வாழ்க்கையில் செய்யக் கூடிய அளவில் இருக்க வேண்டும் சிந்திக்கிறார் யோசுவா. அப்படியென்றால்தான் எல்லோருக்கும் இதில் நம்பிக்கையும் ஈடுபாடும் வரும் என்பது அவருடைய நம்பிக்கை. பிரமாண் டங்களை எல்லோராலும் உருவாக்கிவிட முடியாதல்லவா.

முக்கியமானது என்னவென்றால் இந்த உணவுகளை எல்லாம் நாம் ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன்பு மிகச் சாதாரணமா கவே கொண்டிருந்தோம். இப்பொழுது இதைக் கைவிட்டு விட்டோம். அல்லது இந்த மாதிரியான கீரை வகையைப் பிள் ளைகள் இப்பொழுது விரும்புகிறார்க ளில்லை. அரிசிமாவோ பப்பாசியோ அவர்களுக்குப் பிடிக்காது. அதை விட மரவள்ளி, ஒடியல் போன்றவற்றை அவர் களுக்குக் கொடுக்கவே முடியாது என்று பெரும்பாலான பெற்றோர் கவலைப்படு கிறார்கள். இன்னொரு தலைமுறைப் பெற் றோருக்கு இவற்றைப் பற்றி அதிகமாகத் தெரியவும் மாட்டாது.

ஆனால் உலகமோ இயற்கை உணவுக் குத் திரும்பு திரும்பு என்று கூவிக் கொண் டிருக்கிறது. இயற்கை உணவு (Organic Foods) என்பது இன்று வசதியுள்ளவர்க ளுக்கு மட்டுமே சாத்தியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. விலையும் அதிகம்தான்.

ஆனால், யோசுவாவின் உணவு அப்படி யானதல்ல. அது கலப்பற்ற இயற்கை உணவே. ஆனால் மலிவானது, இலகுவா னது, புதுமையானது, எங்கும் கிடைக்கக் கூடியது. இதில் உள்ள விசேசம் என்னவென் றால் வழமையாக நாம் செய்கின்ற உணவு களுக்கு ஒரு பட்டியல் உண்டல்லவா. அந்தப் பட்டியல் நூறு இருநூறு வருசப் பாரம்பரியத்தைக் கொண்டது. பிட்டு, இடியப்பம், தோசை, இட்லி, புக்கை அல்லது வெண்பொங்கல் இந்த மாதிரி ஒரு உணவு முறைமைக்குள்ளேயே நாம் தலைமுறை தலைமுறையாகச் சுற்றிக் கொண்டிருந்தால் புதுமையை நாடும் இளைய தலைமுறைக்கு இது வெறுத்து விடும். அப்படி முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகமாகியதே கொத்து ரொட் டியாகும். ஆனால் அதுவும் பழைமை யாகி விட்டது.

இந்த இடத்தில்தான் மக்டொனால்ட்சும் பீட்ஸா கட்சும் வந்து அந்த இடத்தைப் பிடிக்கின்றன. இவை ஆக்குகின்ற உணவுகள் வணிகக் கவர்ச்சியையே அதிகமாகக் கொண்டவை. பெருமெடுப்பில் ஆக்கப்படும் இந்த உணவுகளில் மக்களை அடிமையாக்கும் வணிகத் தந்திரோபாயம் உள்ளுறைந்துள்ளது.

ஆனால் யோசுவா போன்றவர்கள் சுதேச உணவுப் பண்பாட்டையும் கிரா மிய உணவுப் பொருட்களையும் மைய மாகக் கொண்டு சிந்திக்கிறார்கள். இது தான் புதியது, புதுமையானது.

புதியனவற்றைச் சிந்திப்பவர்களையும் புதியதைச் செய்கின்றவர்களையும் காணும்போது உண்டாகும் மகிழ்ச்சி பெரிது. இத்தகையவர்களால்தான் மாற் றங்கள் நிகழ்கின்றன. சமூகமும் முன் னோக்கி இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே இவர்களை முன்னோடிகள் எனலாம். யோசுவா அப்படியானவர் களில் ஒருவர். எதையும் வித்தியாசமாக - புதிதாகவே சிந்திப்பவர். வித்தியாசமாகவே செய்கின்றவர். இதி லும் முக்கியமாகக் கவனிக்க வேண்டி யது, சூழலுக்கிசைவான சிந்தனைகளே யோசுவாவினுடையவை என்பதாகும். சூழலுக்கோ யதார்த்தத்துக்கோ பொருந் தாத அல்லது கடினமான எதையும் யோசுவா முன்னிறுத்துவதுமில்லை. அப்படிச் சிந்திப்பதுமில்லை. இதுதான் அவருடைய சிறப்பம்சம். இதனால்தான் யோசுவாவைப் பற்றியும் அவருடைய சிந்தனை மற்றும் செயற்பாடுகளைப் பற்றியும் பேசவேண்டியுள்ளது.

தன்னுடைய உணவு ஆக்கத்துக்குப் பயன்படுத்துகின்ற பொருட்களை அவர் விற்பனைக்கும் வைத்திருக்கிறார். வெளி நாடுகளுக்கு அனுப்பக் கூடியமாதிரியும் அவருடைய உற்பத்திகள் உள்ளன. கீரை மிக்ஸர், கீரைப் பப்படம், கீரை ஊறு காய், கீரைப் பவுடர்கள் (தனித்தனியாக வும் உண்டு) கீரை வைன் என ஒரு பெரிய பட்டியல்.

இதை விட ஒடியல்பாகு போன்றவை யும் உண்டு.

நம்முடைய சூழலில் ஏராளம் சிந்த னையாளர்கள் உள்ளனர். கருத்துருவாக் கிகள் இருக்கிறார்கள். ஆலோசகர்கள், அபிப்பிராயங்களை முன்வைப்போர் எனப் பலரும் உள்ளனர். ஆனால் இவர்க ளால் தாங்கள் முன்வைக்கின்ற சிந்த னைப் போக்கிற்கு விசுவாசமாக இருக்க முடிவதில்லை. தமது சிந்தனையை வலு வாக்கம் செய்வதற்கும் இயலுவதில்லை. என்பதால்தான் எதுவுமே நடைமுறைக்கு வராத வெற்றுக் காகிதங்களாகின.

யோசுவா தான் எதை எண்ணுகி றாரோ அதைச் செய்கிறார். செயல்வ டிவமாகவும் நிரூபிக்கிறார்.

இதெல்லாவற்றுக்கு அப்பால் இன் னொரு சிறப்பும் யோசுவாவிடம் உண்டு. அது இந்த விருந்துகளோடு அவர் சொல் கின்ற கதைகள். ஒவ்வொரு விருந்திலும் அவர் ஒரு கதை விருந்தையும் தானே சொல்லித் தருகிறார். ■

கருணாகரன்

தொடரும் அநீதி நீதி மறுப்பும் நீதி கோரலும்

இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களிலேயே (வடக்கிலேயே) புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வாகம் தொடக்கம் வளப்பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இந்த அநீதி தொடர்கிறது. இந்த மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையிலும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் திறக்க முற்படுகிறது.

"கேள்விகள் எதுவும் வேண்டாம். குற்றச் சாட்டுகளை நிறுத்துங்கள் என்றால் எங்கள் குரல் வளையில் செருகப்படுவது கத்தியன்றி வேறென்ன?"

(07)

வன்னியில் தங்களுடைய கிராமங்கள் தீண்டத்தகாதவை போல ஒதுக்கப்படுவதையிட்ட கவலை இருந்தாலும் அதைப் பற்றிப் பேசுவதற்கு எந்த வழியும் இருக்கவில்லை. ஒரு எளிய உதாரணம், முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன்கட்டுக்கு வடக்கே இந்த மக்களால் உருவாக்கப்பட்ட மன்னாகண்டல் என்ற கிராமம். அங்கே தண்ணீரைக் காணவே முடியாது. நிலத்தைத் தோண்டினாலும் 100, 150 அடிக்கும் கீழேதான் நீரைக் காண முடியும். என்னுடைய வாழ்க்கையில் இப்படியான ஒரு சூழலைக் காணவே இல்லை. 1970 களின் இறுதிப் பகுதியில் - 80 களின் முற்பகுதியில் மன்னாகண்டலுக்குச் சென்றவர்கள் இந்த உண்மையை உணர்ந்திருப்பார்கள். இன்றும் அந்தக் காட்சி பெரும் வேதனை அளிப்பதாகவே மனதில் உள்ளது. குடிநீருக்காக அந்த மக்கள் அன்று பட்ட அவலம் சொல்லி மாளாது. ஒரு ஒதுக்குப் புறத்தில், காட்டோரமாக இருந்த அந்தக் கிராமத்தில் யானையும் கரடியும் நுளம்பும் அவர்களைப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்தது. பஞ்சத்தில் அவர்கள் மெலிந்து உருக்குலைந்து போயிருந்தனர். ஏறக்குறைய எதியோப்பிய மனிதர்களைப் போல. இன்றைக்கு அவர்களில் எத்தனைபேர் தப்பிப் பிழைத்திருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

அந்த இடத்தை விட்டு வெளியேறினால் வேறு எங்கே போவதென்று தெரியாமல் இருந்ததால் அந்தக் கொடுமையான சூழலுக்குள் கிடந்து உழன்றனர். எந்த மீட்பரும் அவர்களுக்கிருக்கவில்லை. இப்போது கூட இந்த மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கேட்கவோ அவமானப்படுத்தப்படுவதைப் பற்றிப் பேசவோ அதைத் தடுக்கவோ யாருமில்லாத போது அன்று யார் இருந்திருக்க முடியும்?

இப்படித்தான் ஒவ்வொரு கிராமத்திலும் இந்த மக்கள் பாடுகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தனர். கிளிநொச்சி நகருக்கு தெற்கே காடாக இருந்த கிறவல் பிட்டிகளிலேயே இவர்களுடைய குடியிருப்புகள் உருவாகின. இந்தக் கிறவல் பிட்டிகளில் நீரைக் காணவே முடியாது. ஆழமாகத் தோண்டினாலும் அபூர்வமாகவே தண்ணீரைக் காண முடியும். இதனால் குடியிருக்கின்ற வீட்டுச் சூழலில் கூட ஒரு பயிர் பச்சையை உண்டாக்க முடியாது.

மட்டுமல்ல, கோடையில் கொழுத்தும் வெயிலில் இந்தப் பிரதேசம் அனலாக எறிக்கும். இதனால் ஆட்களின் தோற்றமே காய்ந்து கருவாடாகியதைப் போலிருக்கும். இந்த நிலையில் இவர்களுடைய தோற்றத்தை வைத்தே இவர்களை அடையாளம் காணக் கூடிய நிலை இருந்தது.

இதெல்லாம் எவ்வளவு கொடுமையான நிலை?

ஆனால் அப்படித்தானிருந்தது.

மனிதர்கள் வாழ்வதற்கு மிக மிக முக்கியமானது நிலமும் நீரும். இரண்டும் சரியாக இருந்தால்தான் ஒரு குடிசையையாவது போட்டுக் கொண்டு குடியிருக்க முடியும். அந்தக் குடியிருப்பில் எதையாவது செய்ய முடியும். இரண்டும் சீராக இல்லை என்றால் லேசில் உருப்படவே முடியாது.

இப்போதும் மலையகத்தில் உள்ள மக்கள் தங்களுக்கு ஒரு துண்டு குடியிருப்பு நிலத்தைச் சொந்தமாகத் தாருங்கள் என்றே கேட்கிறார்கள். சொந்த நிலம் இல்லை என்றால் எதையும் செய்ய முடியாது. லயங்களில் வாழ வேண்டியதுதான். 200 ஆண்டுகள் வரை வாழ்ந்தாலும் தங்களுக்கென்றொரு குடிலோ, மரமோ வைக்க முடியாத நிலை. அது ஒரு அந்தர வாழ்க்கை.

ஏறக்குறைய இதே நிலைதான் வடக்கு நோக்கி வந்த மக்களுக்கும் நடந்தது. இதில் பாதிப்பேர், கஸ்ரமான சூழலிலும் காடுகளை வெட்டி, கடினமான நிலத்தைத் தோண்டி, சின்னஞ்சிறிய குடிசைகளைப் போட்டுக் கொண்டு குடியிருந்தனர். அதிலிருந்தே படிப்படியாக தம்மைக் கட்டியெழுப்பினர். தங்களை நிலைப்படுத்திக் கொள்வதற்கு ஏறக்குறைய இரண்டு தலை முறைக்காலம் வேண்டியிருந்தது. ஊற்றுப்புலம், தொண்டமான் நகர், ஜெயபுரம், பொன்னகர், மலையாளபுரம், பாரதிபுரம், செல்வா நகர், கிருஸ்ணபுரம், காந்தி கிராமம் போன்ற கிராமங்கள் இத்தகையன.

ஏனையோர் வேறு ஆட்களுடைய காணிகளில் குடியிருந்தனர். குறிப்பாக வயல்களிலும் தோட்டங்களிலும் கூலிக் குடும்பங்களாகக் குடியிருந்தனர். அந்தக் காணிகளின் காவலர்களாகவும் அந்தக் காணிகளில் கூலிகளாகவும் ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளைச் செய்ய வேண்டியவர்களாக இருந்தனர். ஆனால் ஒரே கூலிதான் கிடைத்தது. அதுவும் குறைந்த கூலி. குடும்பம் வேலை செய்தாலும் ஒரிருவருக்கே சம்பளம் கிடைத்தது. இப்படி இருந்தாலும் இவர்கள்தான் பின்னாளில் அதிகம் கஸ்ரப்பட வேண்டியிருந்தது.

ஏனென்றால் ஏனையோர் எப்படியோ கஸ்ரப்பட்டும் நிலத்தை எடுத்துக் கொண்டனர். இவர்கள் இரவல் காணிகளில் இருந்ததால் நிலமற்றவர்களாகினர். இது உண்டாக்கிய அவலத்தை 2009 போர் முடிந்த பிறகு நடந்த மீள் குடியேற்றக் காலத்தில் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. மீள்குடியேற்றத்தின்போது நிலமுள்ளோருக்கே வீட்டுத்திட்டம் கிடைக்கும் என்ற விதிமுறை. அப்படியென்றால் நிலம் வேண்டுமே என்ற பிரச்சினை எழுந்தது. இது உண்டாக்கிய நெருக்கடிகள் பெரிதாகின. ஏறக்குறைய முப்பது ஆண்டுக்கு மேலாக குடியிருந்த நிலம் அவர்களுக்குச் சொந்தமில்லை என்றால், ஒரே நாளில் நடுத் தெருவுக்கு வந்ததாக இவர்கள் உணர்ந்தனர். ஆனாலும் வேறு வழியிருக்கவில்லை. புதிய இடத்தை நோக்கி நகரவே வேண்டியிருந்தது. அல்லது இருந்த காணியில் வீடமைப்பதற்கு ஒரு துண்டு நிலத்தையாவது பெற வேண்டும் என்று போராட வேண்டியதாயிற்று. அது லேசான காரியமல்ல. (இதைப்பற்றி பின்னர் விரிவாகப் பார்க்கலாம்).

அரச காணிகளில் காடு வெட்டித் துப்புரவு செய்து குடியிருந்தவர்களுக்கு சொந்தக்காணியாக அவை மாறினாலும் அவற்றிற்குரிய உரிமப் பத்திரங்களைப் பெறுவதில் பெரிய பிரச்சினை ஏற்பட்டது. ஏனென்றால் இதெல்லாம் சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்ட குடியிருப்புகளல்ல. அதாவது அரசாங்கத்தரப்பின் அனுமதியோடோ தீர்மானத்தின் அடிப்படையிலோ உருவாக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களல்ல என்பதால் காணி உரிமப் பத்திரத்தை வழங்க முடியாது என நிர்வாக அதிகாரிகள் கையை விரித்து விட்டனர். இந்த நிலையில் இந்த விவகாரத்தை பாராளுமன்றத்திற்கு எடுத்துச் சென்று அங்கே சட்டமூலத்தில் சேர்த்திருக்க வேண்டியது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடப்பாடாக இருந்தது. ஆனால் அதை அவர்கள் செய்யத் தவறினர். இதற்கு ஒரு முக்கிய காரணம், இந்த மக்களுக்கு அப்பொழுது இந்தப் பிரதேசங்களில் வாக்குரிமை இருக்கவில்லை. வாக்கில்லாத மக்களால் என்ன பயன் என்று இவர்கள் கருதினர். இன்னொரு காரணம், இவர்கள் கூலி நிலையிலிருந்து அடுத்த கட்டத்துக்கு - மத்தியதர நிலைக்கு வளர்ச்சியடையக் கூடாது என்பது.

இதனைப் பற்றி இங்கே விபரிக்கிறார் வவுனியா மாவட்டம், கனகராயன்குளத்தைச் சேர்ந்த முத்தையா நல்லு என்பவர். "1966 ஆம் ஆண்டு அவிசாவளையிலிருந்து கனகராயன் குளத்துக்கு வந்தேன். அண்ணன்மார் கூடத்தான் வந்தேன். அப்ப நான் இளந்தாரி. இங்க வந்து காடு வெட்டி குடியேறினோம். வந்த உடன எல்லாம் காடோ காணியோ கிடைக்கவில்லை. அண்ணன்மார் ஒரு முதலாளியோட காணியில வேலை பார்த்தாங்க. அவங்களோடு நானும் ஒண்ணாக இருந்து வேலை செஞ்சன். அதுக்கப்பறமே இங்க உள்ள பெரிய குளம் பக்கமாக காட்டப் பாத்து வெட்டினோம். ஆனா ரொம்பக் காலமாக இதுக்கு பேர்மிட் கிடையாதுன்னுட்டாங்க. சரி, அது வாற நேரம் வரட்டும். அவங்க தாற நேரம் தந்துக் கட்டும் எண்டு நாம அங்கயே குடியேறினம்.

> **"கஸ்ரமான சூழலிலும் காடுகளை வெட்டி, கடினமான நிலத்தைத் தோண்டி, சின்னஞ் சிறிய குடிசைகளைப் போட்டுக் கொண்டு குடியிருந்தனர். அதிலிருந்தே படிப்படியாக தம்மைக் கட்டியெழுப்பினர். தங்களை நிலைப்படுத்திக் கொள்வதற்கு ஏறக்குறைய இரண்டு தலைமுறைக் காலம் வேண்டியிருந்தது."**

அப்பறமா ரொம்ப நாளைக்கு அப்பறம்தான் துண்டு (அனுமதிப்பத்திரம்) கெடச்சிச்சு. ஆனா இந்தக் காணியோட வெட்டின பல பேத்துக்கு இன்னுமே துண்டு கெடக்காம இருக்கு. இதுக்க பாருங்க, கனகராயன்குளம் மெயின் ரோட்டுப் பக்கத்தில இப்ப 2014 க்குப் பிறகு காடு வெட்டிய ஆக்களுக்கெல்லாம் கையில பேர்மிட் கெடைச்சிருக்கு. இது ஆள் பாத்துச் செய்யிற காரியந்தான?" என்கிறார் நல்லு. இவருக்கு இப்பொழுது வயது 77.

அவர் மேலும் சொல்கிறார். "அப்பெல்லாம் இந்தப் பக்கமா யாரும் லேசுல வந்துக்க முடியாது. அதுவும் பொழுது இறங்கிட்டா ஊருக்கு வெளியில போகவும் ஏலாது. ஊருக்குள்ள யாரும் வரவும் ஏலாது. யானை தெருவில நிக்கும். தெரு எப்பிடியிருக்கும் தெரியுமா? அதொரு காட்டுப் பாதைதான். அந்தக் காட்டுப்பாதையில யானைதானே நிக்கும்? அதின்ட பாதையில நாம எப்பிடிப் போறது? ஆனா அதுக்கதான் நாம வாழக் கிடந்தோம். குழந்த பெத்துக்கிறதா இருந்தாலும் செரி, அந்தரம் அவசரத்துக்கு ஆஸ்பத்திரிக்குப் போறதா இருந்தாலும் செரி எல்லாமே இந்தக் காட்டுக்கத்தான். அப்ப நாம வாழக்கெடக் கோமா சாகக் கெடக்கோமா எண்ணே புரியாது. அப்படியெல்லாம் கெடந்துதான் இந்த மண்ணை வெளிக்க வெச்சோம். மண் வெளிச்சால் நாம வெளிச்சமாதிரித்தான். ஆனா அதெல்லாம் லேசுப்பட்ட காரியமல்லேப்பா. அது நெனச்சால இப்பக் கூட கண்ணுல நீர் பொங்கும். மனசுக்கு கல்லு அழுத்தும். எவ்வளவு கஸ்ரம்? பொம்பளங்கபாடு ரொம்பக் கொடுமை. வெறுங் காட்டுப் பிராணி போலல்லவா இதுக்க கெடந்தாங்க.." என்று கண்களைத் துடைத்தார் நல்லு.

இந்த மாதிரி கடந்த காலத்தை நாம் அவர்களிடம் கேட்பதே பழைய காயத்தைப் புதுப்பிக்கிற ஒன்றுதான். ஆனால் வரலாற்றுக்கு ஆதாரங்கள் தேவை என்பதால் இந்த அத்து மீறலைச் செய்ய வேண்டியிருக்கிறது. இது தப்புத்தான். தெரிந்து கொண்டே மறுபடியும் அவர்கள் சிரமப்பட்டுக் கடந்த வந்த பாதையில் நினைவுகளால் தள்ளி விடுவதைப் போன்றது. இதனால் சிலர் இதைப்பற்றிப் பேச விரும்புவதில்லை. பலர் பேசித்தான் ஆக வேண்டும் என்று நிற்கிறார்கள்.

(தொடரும்)

என்ன உலகமடா பரமானந்தா?

தமிழ்க்கவி

"குஞ்சு வீட்டுக் கோழி வேலிக்கால புட்டுக் கொண்டு வருதெணை" "இவனொருத்தன் புட்டுக் கொண்டு வந்தா முட்டை பொரிக்கவே எப்ப பார் சப்பிற நெப்புத்தான்" மெய்யே பொடியா வேலிய என்ன சிக்காரா அடைச்சாலும் உந்தக் கோழியள் நிலத்தைக் கீறிப்போட்டு பூந்து வந்திருதுகளே. உவன் பெரிய வனட்ட சொல்லியும் பாத்திட்டன் கோழிக் கெண்டு வேலி செய்து விக்கிறாங்களாமடா. அதில ஒண்டை வாங்கி கட்டுவம் எண்டு. அவன் கேட்டாத்தானே விட்டிட்டு மதிலக்கட்டெணையாம்..ம்.. காடு வாவா எண்ணுது வீடு போபோ எண்ணுது. இப்ப மதிலக்கட்டாம்.

மதிலுக்கால ஒண்டும் வராதே? இல்லை வந்தாத்தான் என்ன? எடேய் நீ சொல்லுறாய் உது எப்ப வந்த இஸ்ரைலடா மதில். அந்த நாளையில பக்கத்துப் பக்கத்து வேலியளுக்கால பொட்டு வச்சுப் பிழங்கின நேரம் இருந்த ஒற்றுமை, கலகலப்பு இப்ப இருக்கே. கேக்கிறன் எங்கட குணமணியும் ராசனும் புற வேலிக்கால காதலிச்சு, அதைத் தெரியாம அருணாயலத்தார், பொன்னுக்கோனோட பொழிப்புக்கு சவடால் கதைக்கப்போக, அது ஒரு பெரிய சண்டையாப் போச்சு கண்டியோ. என்ன.. சண்டை தேப் பன்மாருக்கிடையில நடக்கப் பிள்ளையள் வேலிப்பொட்டுக் கால காதல். கடைசியா என்ன நடந்தது.
வேலிப்பொட்டை மட்டுந்தான் அடைச்சவர். காதல் கலியாணமாகி இண்டைக்கு அதுகள் பேரன் பேத்தியும் கண்டாச்சு. ஆனாப் பொடியா அந்த வேலிப் பொட்டை மட்டும் இன்னும் குணமணி அடைக்க விடயில்லை. அது அவயட பங்குக்க வந்திட்டுது.

அப்பு, காடு வெட்டின உடன போடுவார் ஒரு வேலி. வெட்டின மரக்கிளையள வச்சே குளக்கட்டுப்பற்றனில அதரா அடுக்கி போட்டா அது காட்டு வேலி. அது ஒரு வரியத்தில இறந்து போக விறகாக்கி வித்துப்போடுவார். பிறகு பெரிசா அதர் வெட்டி அதில் கட்டையள அடுக்கி போடுற வேலி. எப்பிடியும் கம்பியடிக்க நாலைஞ்சு வருசம் போயிடும். பிறகெல்லாம் பெண்டு பிள்ளையளின்ர கையிலதான். பாலன் பஞ்சம் பத்து வரியமெண்டு பிள்ளை குட்டியளும் வேலைக்க இறங்கிடுங்கள். இப்பவோ எடேய் பாலன் பஞ்சம் இருவத்தெட்டு முப்பது வயசடா..அவள காலம் படிப்பு படிப்பு. பின்ன நான் சொன்னகதைய விட்டிட்டு அவளாரோ 'அரிக்கிற அரிசிய விட்டிட்டு சிரிக்கிற சித்தப்பனோட போனாளாம்' எண்டமாரி கதைய மாத்திட்டான். பின்னயடா பெண்டுகள் பிள்ளையள் உந்த ஆமணக்கு, பாவட்டை, கிளிசூரியா எண்டு வகைதொகையா மாரி மழையோட வேலிக்கரையள்ள ஊண்டி விட்டா வேலி. அதுமட்டுமே பூவரசு, கிளுவை என்ன வளமில்லை வேலியில் ங..நாலு முருங்கைய வைப்பம். ரெண்டு மொசுமொசுக்கை, மொடக்கத்தான், தூதுவளை எண்டு மூலிகைவகை. சூசூசூக் எவ்வளவு வகை. இப்ப எல்லாம் கல்லை வச்சு கட்டட்டமாக் கட்டி மூடியாச்சு. என்னத்துக்கு அதுக்க ஆரும் வந்தா அவயட பவிசு குறைஞ்சு போமாம். நீ சொல்லுறாய் செல்லையற்ற வளவுக்க கள்ளர் பூந்து கொள்ளையடிச்சதுமில்லாம

> **பாரடா 'தனக்குத் தனக்கு வந்தாத்தான் தலைவலியும் காச்சலும் தெரியும்.' இப்ப ஒரு பாசனடா எது, பக்கத்தில குடியிருக்கிறவையோட கதைக்கிறது பேசிறது இல்லை. அவனாரோ நானாரோ எண்டமாரி ஒரு தினாவெட்டு. பின்ன நீ சொல்லுறாய் இப்ப யிப்ப வீட்டில விசேசமெண்டாலும் பங்க பிறத்தியூராலென்ன வெளிநாட்டாலயே சனம் வந்திடும். பக்கத்து வீட்டுக்கு தெரியாது.**

பெட்டிய துறக்கச் சொல்லி அதுகளப் போட்டு அடிச்சிருக்கிறாங்கள். அதுகளும் ஏலுமட்டும் குழறியிருக்குதுகள். பக்கத்துச் சனத்துக்கும் கேட்டிருக்கு. ஆனா ஒரு சனம் போய் எட்டிப் பாக்கேல்லயடா.. ஏன் எண்டு கேக்கயில்ல. முன்ன திடீர் திடீரெண்டு ஆமி பூந்திருவான் வீட்டுக்காறர் குழறுவினம். ஆனா ஆரும் வெளியால வரமாட்டினம். ஒண்டா அடுத்து இயக்கங்களும் படைக்கு ஆள் பிடிக்க வீடுகளுக்க பூந்த நேரம் இருக்கு. அப்பவும் இப்பிடித்தான் பக்கத்து வீடுகளுக்கால ஆரும் வெளியால வர மாட்டினம். இப்ப கள்ளர் பூந்து அட்டகாசம் பண்ணுறாங்களா.. ஆரும் வெளியால வர மாட்டினம்.
என்ன 'நாய் வந்தா என்ன பூனை சிம்மாசனமேறினா நமக்கென்ன' எண்ட மாதிரி.
ஆனாப் பாரடா முன்னம் எங்கட இடி எங்கட தலையில இறங்கிடுமோ எண்டபயம். இப்ப வீட்டில உள்ளவை ஆறுமணிக்கே கேற்றப் பூட்டி ஆக்கள உள்ளுக்க விடாம தடுத்ததால வந்த சலிப்பு.

பாரடா 'தனக்குத் தனக்கு வந்தாத்தான் தலைவலியும் காச்சலும் தெரியும்.' இப்ப ஒரு பாசனடா எது, பக்கத்தில குடியிருக்கிறவையோட கதைக்கிறது பேசிறது இல்லை. அவனாரோ நானாரோ எண்டமாரி ஒரு தினாவெட்டு. பின்ன நீ சொல்லுறாய் இப்பயிப்ப வீட்டில விசேசமெண்டாலும் பங்க பிறத்தியூராலென்ன வெளிநாட்டாலயே சனம் வந்திடும். பக்கத்து வீட்டுக்கு தெரியாது. ஙா..அப்ப சொல்லுறாய் அந்த நாளையில அப்பு சொல்லுவார் அயல்தான் முக்கியம். ஐயோண்ட சத்தத்துக்கு அதுகள்தானே முன்னுக்கு வரோணும் எண்டு.

உத விடு, கதையக் கேள். எங்கட முன்வளவுக்க நல்லா இருந்த மனிசன் மாரடைப்பில செத்திட்டுது. வாடகை வீடு. விடியமுதல் மோன்காரன் சவத்தை தன்ர வீட்ட கொண்டு போட்டான். எட பாவியள் ஒரு குழறல் சத்தம் இல்லையடா பறைமேளமும் எடுக்கக் கிட்டத்தான் வந்து முழங்குறாங்கள். அப்பானெல்லோ தெரியும் முன்வளவுக்க ராமநாதர் செத்திட்டார் எண்டு. எட கொரோனாக்காலம் எண்டா ஒரு குரல் வைக்கிறேல்லயே அவ்வளவுதான்ரா இப்பத்தையில் பாசமழை. வேலிக்கால நாங்கள் வளத்த உறவுக்கு இதுகள நைக்க பத்திக் கொண்டு வருதடா.

மதிலக்கட்டி விடமுதல் அடுத்த வீட்டில செய்யிற பலகாரம் இந்த வீட்டுக்கு வரும். இந்த வீட்டில உள்ள பிரச்சினையள் அந்த வீட்டுக்கு வேலிக்காலயே போகும். எத்தினை காதல். எத்தினை சண்டை. எத்தினை வழக்கு. ஆனானப்பட்ட மனிசரும் வேலிக்கால பாஞ்சு பாவிக்கிற சோட்கட் பாதையளப்பத்தி சொல்லத் தேவையில்லை. உந்தப் போராட்ட காலத்தில எத்தினை போராளியளக் காப்பாத்தின வேலிப் பாச்சலுகள நினைச்சா..

கள்ளவேலி பாயுற மாடுகளப்பத்தி ஊருக்கூர் கதை இருக்கு. சொத்தையால படலையத் திறக்கிற மாடுகளத் தெரியாம ஆர் இருக்கினம். கண்டாயம் பாயுற மாடுகளும் இருக்கு. நாலு பட்டுக் கம்

பிக்கு மேலால பாயுற மாடுகளும் சரித்திரத்தில இருக்கு. உந்தக்கதையத்தான் என்னவோ சொல்லுவினமே 'கிளிபோல ஒரு பெண்டாட்டி இருந்தாலும் குரங்குபோல ஒரு வப்பாட்டி' வைக்கிற வைக்கும் உந்த மாடுகளத்தான் உதாரணமா சொல்லுறதடா.

உனக்குத் தெரியுமோ தெரியாது யாழ்ப்பாணத்தில உந்த வேலி, வேலிக்கரை, மரங்கள், மரங்கள்ள உள்ள காய், பழங்கள் இதுகள் சார்பான வழக்குகள் எக்கச்சக்கமடா..அந்தப் புத்திதான் சொந்தமா தங்கட வேலி தனக்குத்தான் எண்டு எல்லைப் பிரச்சினை வரக்கூடா தெண்ட நெப்பில மதிலுகளக்கட்டி விடுகினம் எண்டு பாத்தா கனபேருக்கு மண்ணில கால்வைக்கவும் கூசுதா மடா முளைக்கிற புல்லையும் விடாம முத்தம் முழுக்க கல்லடுக்கி சீமெந்து தடவுகினம். மெய்யேடா இப்ப தண்ணியும் காசுக்கு வாங்கிறம். இனி சுத்தமான காத்தும் விலைக்குத்தான் வாங்கப்போறம்போல.

■

'நிகழ்நிலை' தடுமாறும் பேரிடர் காலக் கல்வி

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குக் கல்வி அமைச்சோ மாகாண கல்வித் திணைக்களங்களோ உதவியது என்பது அரிதானதாகும். விதிவிலக்காக வலயக் கல்வித் திணைக்களங்களும் நிகழ்நிலை வகுப்புக்களை நடாத்தியிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்நிலை வகுப்புக்களை நடாத்துவதன் மூலம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எடுக்கப்பட்ட பங்களிப்புக் குறித்து இங்கு குறைத்து மதிப்பிடவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இதனைவிட இடர்காலத்தில் கல்விக்கான சுயகற்றல் கையேடுகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் செயலட்டைகளைத் தயாரித்து வழங்கியுமிருக்கின்றார்கள். சுயமாக ஆசிரியர்கள் வைபர் குழுமங்களை உருவாக்கி இலவச வகுப்புக்களையும் தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றார்கள். சுயமாக யூரிப் தளத்தில் கற்பித்து பதிவேற்றம் செய்து இருக்கின்றார்கள். இவையாவும் பாராட்டப்பட வேண்டிய விடயங்கள். இந்த நிலையில்தான் ஆசிரியர்கள் தமது சம்பள உரிமைக்கான போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆசியர்களின் கோரிக்கை நியாயமானதென அரச தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். அரச அமைச்சர்களும் பாராளுமன்றத்தில் குரல்கொடுத்துமுள்ளனர். இப் போராட்டம் நாடு முழுவதும் செயலூக்கத்துடன் நடைபெற்று வருகின்ற சூழ்நிலையில் வடக்கு மாகாணத்தில் மட்டும் போராட்டம் மந்தநிலையில் உள்ளதாக பலரும் குற்றம் சாட்டுகின்றனர். குறிப்பாக சில பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாடசாலைகளுக்கே அழைத்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். நாட்டில் பாடசாலைகள் மூடப்பட்டதன் நோக்கமே மாணவர்களை கொரோணா தொற்றுலிருந்து காத்தற் பொருட்டுத்தான் என்பதைக் கூட புரிந்து கொள்ளாமல் இருப்பது எவ்வளவுக்கு அபத்தமானது. இதனைவிட பல பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களை வலிந்து பாடசாலைக்கு அழைக்கும் நிலையும் காணப்படுகின்றது. தேவையின் பொருட்டு அழைப்பதில் நியாயம் இருக்கின்றது. ஏற்கெனவே ஆசிரியர்க்கு கற்றல் கற்பித்தலுக்கு அப்பால் பல்வேறு செயற்பாடுகளும் இருக்கின்றன என்பதும் ஏற்புடையதே. ஆனால் இந்த இடர்காலத்தில் தேவையற்ற விதமாக ஆசிரியர்களை அழைப்பது ஏற்புடையதாகுமா? பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் அடிப்படையாகக் கொண்டு சமூகமட்டத்தில் கொரோனா கொத்தணிகளை உருவாக்கவே இது வழி செய்யும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் இந்த நிலையறி பரீட்சை ஆசிரியர்களின் சமபளப் பிரச்சினைக்கான போராட்டத்தை குழப்புவதற்கான முயற்சியாகவே கருதப்பட்டு இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் விமர்சிக்கப்படுகின்றது. இக் கருத்து அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டத்திலும் இருக்கின்றது. ஒரு வகையில் கல்வித் திணைக்களத்தின் இச் செயற்பாடு மறைமுகமாக ஆசிரியர்களை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட வைப்பதற்கான அழுத்தம் என்பதை புரிந்து கொள்வதில் எந்த சிரமமும் இருக்கப்போவதில்லை. ஆசிரியர்கள் நியாயமற்ற போராட்டத்தை முன்னெடுக்கவில்லை என்பது அனைத்துத்தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளபட்ட விடயம். மாகாண கல்வித் திணைக்களம் என்பது ஆசிரியர்களோடு நேரடியாகவே தொடர்புபட்டிருக்கின்ற ஒன்று என்ற அடிப்படையில் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அறிந்திருக்க வேண்டும். ஆசிரியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் அவர்களுக்கும் பொறுப்பு இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதனை விடுத்து ஆசிரியர்கள் மேற்கொள்ளுகின்ற போராட்டங்களை தந்திரமான முறையில் அடக்குவதற்கு எடுக்கின்ற முயற்சி என்பது தாம் அரசிற்கு விசுவாசமாக இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்துவதாக இருக்குமே அன்றி ஆசிரியர்களின் நலனையோ மாணவர்களின் நலனையோ கருத்திற்கொள்வதாக அமையாது. இங்கு மாணவர்களின் நலன் சார்ந்தே நாம் சிந்திக்கின்றோம் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்த முயற்சிகள் திணைக்களத்தால் எடுக்கப்பட்டாலும் அது நியாயமானதாக இருக்காது ஏனெனில் ஆசியரியர்களை உளநெருக்கடிக்கு ஏற்படுத்திக்கொண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்று கருதுவது அடிப்படைப் புரிதலற்ற சிந்தனையாகவே அமையும்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் இந்த நிலையறி பரீட்சையின் சாதக பாதக அம்சங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் இடர்கால கற்றல் கற்பித்தல் தொடர்பான நகர்வை நோக்கி நகர்ந்து கொள்ள முடியும். தேவையானது நிலையறி பரீட்சையல்ல மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்பதும், இடர்காலத்திற்கான கற்றல் வழிமுறைகளை வினைத்திறனாக முன்னெடுக்க வேண்டிய வழிமுறைகள் குறித்தான களச்செயற்பாடுகளை முன்னெடுப்பதுந்தான். இது குறித்து நிபுணத்துவ மட்டத்திலான முன்னெடுப் புக்கள் மேற்கொள்ள வேண்டும்.

■

பதஞ்சலி யோக சூத்திரம்



இந்தியத் தத்துவ நெறியானது ஞானிகள், யோகிகளின் நேரடி மற்றும் உள்ளுணர்வுகளின் வழியாக உருவாகி வந்தவை. இவை கடவுள், மனிதன், இயற்கை, இருத்தல் மற்றும் இறத்தல் பற்றிய தேடுதலின் விளைவானவை. இவற்றை ஆறு தரிசனங்கள் என்றும் கூறுவர். இவை முறையே பூர்வ மீமாம்சை (மீமாம்சை), உத்தர மீமாம்சை (வேதாந்தம்), சாங்கியம், யோகா, வைசேஷிகம் மற்றும் நியாயம்.

சாங்கிய தத்துவத்தின் தொடர்ச்சியாகவே யோக தத்துவம் பார்க்கப்படுகிறது. சாங்கியம் ஞான யோகம் என்றால், யோகம் அதன் செயல் வடிவம். புருஷன் (ஜீவாத்மா, லபிரகிருதி (இயற்கை) என்ற சாங்கியத்தின் இரு தத்துவங்களோடு விசேட புருஷன் / ஈஸ்வரன் ஒருவன் உள்ளான் என்ற தத்துவத்தை ஏற்றுக் கொள்கிறது யோக தத்துவம். இயற்கையோடு அறியாமையால் பிணைந்துள்ள புருஷன், யோகப் பயிற்சிகளின் மூலம் தன்னுணர்வு பெற்று பரமாத்மாவுடன் இணைதல் யோகம் எனப்படுகிறது. குட்டையாகக் குழம்பியுள்ள சித்தக்குளத்தைத் தூர்வாரி, அடிவரை காணும் படியாக கண்ணாடி போல் குளத்து நீரை மாற்றும் வேலையைச் செய்கிறது யோகம்.

பதஞ்சலி முனிவர் பற்றிய பல புராணக் கதைகள் உள்ளன. இவர் ஆதிசேடனின் அவதாரம் என்று கூறுவர். குண்டலினி சக்தி எழுச்சி பெற்ற நிலையைக் காட்டவே பாம்பின் தலை போன்ற தோற்றம் காட்டப்படுவதாகக் கூறுவோரும் உளர்.

யோகம் என்பது பதஞ்சலி முனிவரில் இருந்து ஆரம்பிக்கப்பட்டதல்ல. சிந்துவெளி அகழ்வுகளில் கூட சித்தாசனத்தில் அமர்ந்திருக்கும் சுடுமண் முத்திரை கண்டு பிடிக்கப்பட்டது.

பதஞ்சலி முனிவர்

பல்வேறு காலகட்டங்களில் வளர்ந்து வந்த யோக தத்துவத்தை சூத்திரங்களாகத் தொகுத்து இன்று நாமறியும் 'பதஞ்சலி யோக சூத்திரம்' என்ற வகையில் நமக்கு தந்துள்ளார் பதஞ்சலி முனிவர். இதனை முதலாவது சூத்திரமே உறுதி செய்கிறது.

'அத யோக அனுசாசனம்' யோக சூத்திரம்-1.1
இதன் பொருள் 'இனி யோகத்தை விளக்கியுரைப்போம்' என்பதாகும்.

பதஞ்சலி முனிவரின் காலம் கி.மு 200 க்கும் கி.பி 200 க்கும் இடைப்பட்டதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. யோக சூத்திரத்திற்கும் திருமூலரின் திருமந்திரத்திற்கும் பல ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளும் உள்ளன. யோக சூத்திரம் சமஸ்கிருத மொழியிலும், திருமந்திரம் தமிழிலும் எழுதப்பட்டன. பதஞ்சலி யோக சூத்திரம் 195 சூத்திரங்களாகவும், திருமூலர் 3047 பாடல்களாகவும் எழுதியுள்ளார். புருஷன் (ஆத்மா), பிரகிருதி (இயற்கை) மற்றும் இவற்றின் உண்மை, ஈஸ்வரன் என்ற மேலான விசேட புருஷன் இருப்பது, கர்மா, மறுபிறப்பு, சமூக நெறிமுறைகள், சமத்துவம், சித்திகள் போன்ற பலவற்றில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. யோக சூத்திரத்தில் அட்டாங்க யோகம் ஆரம்பப் பயிற்சியாகக் கூறப்பட, திருமந்திரத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

யோக சூத்திரமானது 4 பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பாதமான சமாதி பாதம் 51 சூத்திரங்கள், சாதனை பாதம் 55 சூத்திரங்கள், விபூதி பாதம் 55 சூத்திரங்கள், கைவல்ய பாதம் 34 சூத்திரங்களென மொத்தம் 195 ஆகும்.

சமாதி பாதத்தின் 2 ஆவது சூத்திரம் யோகமென்றால் என்னவென்று வரையறுக்கிறது.

'யோகஸ் சித்த விருத்தி நிரோத' - யோக சூத்திரம் 1.2

சித்தத்தின் விருத்திகளை நிறுத்துதல் யோகம் எனப்படுகிறது. ஆரம்பத்திலேயே யோகத்தை வரையறுத்துவிட்டு பின்னர் அந்நிலையை அடையும் வழிகளைப் படிப்படியாக விளக்கிச் செல்கிறார். துன்பந்தருவதும் இன்பந்தருவதுமான இந்த விருத்திகள் ஐந்து. அவையாவன சரியான அறிதல் (பிரமாணம்), பிழையான அறிதல் (விபரியாயம்), கற்பனை, மாயை மற்றும் பிழையான கருத்துருவாக்கம் (விகல்பம்), உறக்கம் (நித்ரா), மற்றும் ஸ்மிருதி (பழைய நினைவுகள்). தொடர் பயிற்சிகளின் மூலமே நாம் இந்த விருத்திகளில் இருந்து விடுபட்டு எமது உண்மையான உணர்வுநிலைக்குத் திரும்பலாம் என்கிறார் பதஞ்சலி முனிவர். தன்னை உணர உள்ள தடைகள், அதனை எப்படி பயிற்சி மற்றும் வைராக்கியத்தால் அடையலாம் எனப் பல சூத்திரங்களின் வழியே எடுத்துக் கூறுகிறார். படிநிலைகளாக அடையப்பெறும் பல்வேறு சமாதி நிலைகளை இப்பாதத்தில் விளக்குகிறார்.

இரண்டாவதான சாதனை பாதத்தின் முதல் சூத்திரம் கிரியா யோகத்தை வரையறுக்கிறது. தவம், தன்னறிவு மற்றும் பக்தி அல்லது சரணடைதல் கிரியா யோகம் அல்லது விழிப்புடன் கூடிய செயல் ஆகும். தவத்தைப் பற்றி வள்ளுவர் கூறுவது,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

தனக்கு வந்த துன்பங்களைப் பொறுத்தலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையும் என வரையறுக்கிறார். முன் செய்த கர்ம வினைகளைச் சுட்டெரிக்கும் கடுமையான யோகப் பயிற்சிகளின் போது வரும் துன்பங்களைப் பொறுத்தலும், அதே நேரம் மேலும் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலின் மூலம் மேலும் கர்மவினைகளை ஏற்றுக் கொள்ளாதிருத்தலும் என்று யோகப் பார்வையில் இதற்கு விளக்கம் கூறலாம். மேலும் இப்பாதத்தில் அட்டாங்க யோகத்தில் பகீரங்க யோகா என்றழைக்கப்படும் முதல் 5 அங்கங்களான இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம் பற்றிய சூத்திரங்கள் சுருக்கமான ஆரம்ப பயிற்சிகளாக கூறப்படுகின்றன.

மூன்றாவதான விபூதி பாதத்தில் அட்டாங்க யோகத்தின் அந்தரங்க யோகா என்றழைக்கப்படும் தாரணை, தியானம் மற்றும் சமாதி பற்றியும் இம்மூன்றையும் ஒரு பொருளின் மீது செய்வது ஸம்யமம் என்றும், இதனால் கிடைக்கும் யோக சித்திகள் குறித்தும் விளக்கமாகக் கூறுகிறது. ஆனால் சில யோகிகள் இந்த சித்திகளில் தரித்து விடுகிறார்கள். உண்மையில் இவை யோகியின் ஆன்ம ஈடேற்றத்திற்குத் தடைகளாகும். இதனையும் தாண்டிய யோகப் பயணத்தினால் மட்டுமே முழுமை எய்த முடியும்.

நான்காவது கைவல்ய பாதம் ஆகும். கைவல்யம் என்பது நிறைநிலை. இது எல்லா மனிதரிலும் உள்ளது தான். அறியாமையினால் நாமே ஏற்படுத்திக் கொண்ட தடைகள். இதனை உணரவிடாது தடுக்கின்றன. ஆன்மீக வளர்ச்சிப் பாதையில் ஒரு நாள் அடையப்படக் கூடிய விடுதலை அல்லது முக்தி இது. இப்பாதத்தின் முதல் சூத்திரத்தில்

' பிறவி, இரசாயன மருந்துகள், மந்திர ஆற்றல், தவம், சமாதி இவற்றின் மூலம் சித்திகள் கிடைக்கின்றன' என்கிறார்

வேறோர் சூத்திரத்தில் 'சமாதி அடைந்தவனுடைய சித்தம் மட்டுமே ஆசைகள் அற்றது' என்கிறார்.

' பிரகிருதி (இயற்கை) உட்புகுந்து நிறைவதால் ஓர் இனம் மற்றோர் இனமாக மாறுகிறது'

என்று உயிர்களின் பரிணாம தத்துவத்தைத் தருகிறார். இங்கு மனிதன் அறியாமையால்தான் விலங்கு நிலைக்கு செல்லப் போகிறானா? அல்லது ஆன்மீக பரிணாமத்தால் நிறை நிலை எனும் இறைநிலையுடன் ஒன்றப் போகிறானா? உணரும் வரை இயற்கை எமக்கு உதவிக் கொண்டே இருக்கும். இங்கு இயற்கை என்பது புருஷன் (ஆத்மா) தவிர்ந்த அனைத்துத் தத்துவங்களும் (மனம் உட்பட) ஆகும். யோகப்பயிற்சியால் பிரித்தறியும் அறிவு கிடைக்கிறது. இயற்கை நமது ஆத்ம ஈடேற்றத்திற்காகவே நம்மோடு பயணிக்கிறது. முக்குணங்களான தாமசம், இராஜசம், சாத்வீகம் ஆகியவற்றின் சேர்க்கையினாலானது இப்பிரபஞ்சம். கைவல்ய நிலையில் குணங்களற்று (நிர்குணம்) தன் சுய ஒளியில் பிரகாசிக்கிறான். இயற்கையின் தேவை முடிந்து விடுகிறது.

'யோகிகளின் செயல்கள் வெள்ளையுமில்லை (நற்செயல்), கறுப்புமில்லை (தீயசெயல்). மற்றையோருக்கு வெள்ளை, கறுப்பு, கலந்தது என மூவகை'.

யோகியானவன் பலனை எதிர்பாராததால், செயல்களின் மூலம் கர்ம பதிவுகளை விட்டுச் செல்வதில்லை.

சிறிய யோக சூத்திரங்களாயினும், இறைநிலை நோக்கிய பயணத்துக்கான வழிகாட்டும் பெரும் பயணத்துக்கு உறுதுணையாக உள்ளது. கி.பி 203 ஆம் ஆண்டு பிறந்த மகா அவதார் பாபாஜி நாகராஜ் அவர்களின் கிரியா யோகத்தில், யோக சூத்திரத்தின் பல யோக நுட்பங்கள் காணப்படுகின்றன. இருவரும் சமகாலத்தவராக இருந்திருப்பதற்கு இது சான்றாகும். கிரியா பாபாஜி பத்திரி நாத்தில் சொரூப சமாதியடைந்த பின்னர் இளைஞராக இன்றும் பலருக்குக் காட்சி கொடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பலரின் உரைகளுடன், பல மொழிகளில் தற்காலத்தில் பிரபலமாக இருக்கும் பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரம், நவீனயுக யோகிகளின் கையேடாக இருந்து வருகிறது. ■

முரளீதரன் நவரத்தினம்
MSC in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

அழகல்ல முருகா!

நோயின் கொடுமையை விட
கொடியது இந்தக் காவல்
கடவுளை–கோயிலையே
மறை பொருளாக்கிய அவலம்
யாருடைய அதிகாரமோ
அழகல்ல முருகா!

மூடிய சுவருக்குள்
மெய் நிகர் படக்காட்சியாய்
உன்னையும் ஒடுக்கும்
வலி தாங்க முடியவில்லை

மக்கள் இல்லாத திருவிழாவுக்கு
அர்த்தம் என்ன முருகா!
மக்கள் சமய நல்லூர்
மகத்துவத்துக்கு பொருளேது தலைவா..!

நகுலேசன்

● ந.மயூரரூபன்



எழுத்தின் இயங்கியல்

இலக்கியத் தன்மை என்பது

இலக்கியத் தன்மை என்றால் என்ன? என்பது பற்றி பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. ஒரு படைப்பு / பிரதி பெறுகின்ற இலக்கியத் தன்மை மிக முக்கியமானது. எனினும் ஒரு பிரதியின் முக்கியத்துவத் திற்கும் அதன் இலக்கியத் தன்மைக்கும் எவ்வாறான தொடர்பு இருக்க முடியும்? இந்த இலக்கியத் தன்மை யாரால் கிடைக்கிறது.

ஒரு எழுத்தாளன் அவனது மொழி, கருத்து, அனுப வம், வாழ்க்கை விவாதம் என அனைத்தையும் கலந்து எழுதுகின்ற போது இலக்கியத் தன்மையை அடையா ளப்படுத்துகின்ற நிலை என்பது வாசகனிடம் இருக்கிறது. குறிப்பாக விமர்சகர்களிடம் அந்தப் பாத்திரம் அவர்க ளுக்கானதாய் ஒதுக்கப்பட்டு விடுகிறது.

இலக்கியத் தன்மைக்கு பொதுவான அளவுகோல் எதுவும் இருக்கிறதா? என்றால் குறித்த பிரதி, பிரதியின் மொழி, பிரதி கொண்டுள்ள காலம் மற்றும் தளம் என் பன குறித்த அளவுகோலில் நியாயம் செய்கின்றன. இங்கு இலக்கியத் தன்மை என்பது எழுத்தாளனின் அகம், எழுத் தாளனின் புறம், குறித்த காலத்தில் எழுச்சி பெற்றுள்ள கருத்தியல் தளம் என்பவற்றால் அளவீடு செய்யப்படு வதற்கும் அந்த அளவீட்டின் வகைமையினூடாக குறித்த பிரதியின் அடையாளம் எதைப் பெற்றிருக்கிறது என்பதாக அமையும்.

தீபச்செல்வனின் நடுகல் நாவல், ஷோபாசக்தியின் இச்சா, Box கதைப்புத்தகம், சயந்தனின் ஆறாவடு, ஆதிரை இவ்வாறு குறித்த பிரதி, பிரதியில் பொதிந்துள்ள எழுத்தாளனின் அகம், அவனைத் தூண்டுகின்ற புற நிகழ்வு, மேலோங்கியிருக்கின்ற குறித்த காலக் கருத்தியல் என்பன குறித்த பிரதியின் இலக்கியத் தன்மையை உருவாக்கி விடவல்லன.

அ.இரவியின் வீடு நெடுந் தூரம் நாவலை ஒரு எடுத்துக்காட் டாக நாம் இங்கு கூறிக் கொள்ள முடியும். தமிழ் மக்களின் அரசி யல்ப் பிரச்சினை, போராட்டம், இயக்கச் செயற்பாடு, அரசியல் சித்தாந்தம், இயங்குதல், நம்பிக் கையீனம், தொலைதூரம் விலகிச் செல்லல், அந்த நினைவுகளின் அருட் டலை பதிவு செய்தல் என, பல கூறுகளை இந்த நாவல் தன்னிடம் கொண்டுள்ளது.

இங்கு 'வீடு நெடுந்தூரம்' என்கிற பிரதி கொண்டி ருக்கின்ற ஒட்டு மொத்த வெளிப்பாட்டு அடையா ளம் அது பேசுகின்ற பொருள் அந்தப் பிரதியின் இலக்கியத் தன்மையை அல்லது அதற்கான கவ னிப்பை கோரவல்லது. அதே நேரத்தில் இப்பிர தியில் ஊடாடியிக்கும் அ.இரவியின் வாழ்க்கை சார்ந்த அகமனதின் வெளிப்பாடு அந்த மனதின் அரசியல் - லௌகீகப் போராட்டம் என்பதுவும் சமகாலம் கொண்டுள்ள கருத்தியல் ஜன ரஞ்சக ஈடுபாட்டினை அல்லது ஒரு தற்சார்பு மக்கள் திரளை வசப்படுத்தும் வடிவில் காணப்படுவதும் கவனத்திற்கு ரியது. குறிப்பாக பிரதி கொண்டுள்ள மொழி, அதன் பண்பாட்டு - மண் வாசனையில் தோய்ந்திருப்பதுவும் மொழியின் கவித்துவ ஆழமும் இந்த அளவீட்டுக்கு இன்னமும் வலுச் சேர்ப்பன.

இங்கு வெற்றிச் செல்வியினுடைய நாவலின் ஒரு சிறிய பந்தியை தருகிறேன். அது கொண்டிருக்கின்ற பேச்சு மொழியும் அதில் பொதிந்துள்ள குறித்த காலத்து அரசியல் வெளிப்பாடும் குறித்து நோக்கத்தக்கது.

"... அப்பரைப் பற்றிக் கதைச்சாலே நெருப்பு மாதிரி நிப்பான். சீலனின்ர பேரே அவன்ர சித்தப்பாட பேர் தானாம். அவர் பழைய போராளி. இந்திய இராணுவத் தோட நடந்த கடைசிச் சண்டையில அவர் வீரச்சாவு அடைஞ்சிட்டாராம். அவர்லதான் இவனுக்கு சரியான பாசம். அதோட அவன்ர சினேகிதப் பெடியனையும் ஆமி சுட்டவனாம். அவன் செத்தத இவன் நேர கண் டவனாம். ஆனால் தாங்கள் சுடேல எண்டு ஆமி சொல் லிப் போட்டாங்களாம். குறிப்பிட்ட நேரத்துக்குள்ள பொடிய அடக்கம் செய்யச் சொல்லிக் கட்டாயப்ப டுத்தினவங்களாம். அதெல்லாம் இவனுக்கு ஆமியில ஆத்திரமாய் வளந்திட்டுது"

(வெற்றிச் செல்வி, போராளியின் காதலி / 86)

இந்தப் பகுதியில் நாம் பேச்சு மொழியின் இழைவை யும் சம காலத்திற்கான அரசியல் அடையாளத்தையும், கருத்தியலையும் அடையாளங் கண்டுகொள்ள முடிகிறது.

இங்கு ஒரு விடயத்தினை எடுத்துக்காட்டுதல் பொருத்தமானது. இலக்கியத் தன்மையின் அளவு கோல் கள் வெவ்வேறு அலகுகளால் ஆனவை என்பதை நாம் இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். ஒரு வாசகரின் கேள்விக்கு ஜெயமோகன் பதிலளிக்கையில்,

இலக்கியத் தன்மை என்பது இரண்டு விடயங்களில் மட்டும் தங்கியிருக்கிறது என்கிறார். அவை, வாழ்க்கை மீதும் பண்பாடு மீதும் பிரதி கொண்டிருக்கும் தொடர்பு.

குறித்த பிரதியின் பன்முக வாசிப்புத் தன்மை.

மேலும் ஒரு படைப்பின் வடிவம், பேசுபொருள் என் பவை மாறக் கூடியவை. அதனால் மேற்குறித்த இரண்டு விடயங்களுமே இலக்கியத் தன்மையை அடையாளப்படுத்தக் கூடியனவாக அமைகின்றன என தனது இணையப்பக்கத்தில் எழுதியிருந்தார்.

அந்த இரண்டு விடயங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியவைதான். ஆயினும் மாறக் கூடிய பொருண்மை கள் (வடிவம், பேசு பொருள்) இலக்கியத் தன்மையை தீர்மானிப்பவையாக அமையாது என்கிற கூற்று சற்று

> **ஒரு எழுத்தாளன் அவனது மொழி, கருத்து, அனுபவம், வாழ்க்கை விவாதம் என அனைத்தையும் கலந்து எழுதுகின்ற போது இலக்கியத் தன்மையை அடையா ளப்படுத்துகின்ற நிலை என்பது வாசகனிடம் இருக்கிறது. குறிப்பாக விமர்சகர்களிடம் அந்தப் பாத்திரம் அவர்களுக்கானதாய் ஒதுக்கப்பட்டு விடுகிறது.**

நின்று யோசிக்கத் தூண்டுபவை. அவ்வாறாயின் மாறாத பண்புக் கூறு மட்டுமே இலக்கியத் தன்மையை தீர்மா னிப்பவையாக அமைந்துவிடுகின்றனவா? என்கிற கேள்வி தவிர்க்க முடியாமல் மேற்கிளம்புகிறது. இலக்கியத் தன்மை என்பது வெறுமனே மாறாத சமூக நிலையியல் தன்மைகளான சமூகப்பழக்கவழக்கங்கள், நியமங்கள், வழக்காறுகள், பண்பாட்டுக் கூறுகள் போன் றவற்றுக்குள் அடைபட்டு விடுகின்றனவா? ஒரு வகை யில் இவ்வாறு இருந்த - தற்போதும் இருக்கின்ற பெருங்கதையாடல் பண்புகள் தான் இலக்கியத் தன் மையை தீர்மானிக்கின்றன என பொருள் கொள்ள நேரிடுகின்ற அபாயம் ஏற்பட்டு விடுகிறது.

இலக்கியத்தன்மை என்பது அவ்வளவில், தேங்கிப் போன ஒன்றா? என்கிற கேள்விகளுக்கு பதில் தேட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. மரியன் காலிக் (Marian Galik) என்கிற சுலோவாக்கிய நாட்டு ஒப்பிலக்கிய அறிஞர் குறிப்பிடுகின்ற விடயம் மிக முக்கியமானது.

"இலக்கியத் தன்மை என்பது மொழியை அசாதாரணப்படுத்துவதன் (Lnordinariness) ஊடாகவும் வழக்கத்திற்கு மாறான தன்மையை உருவாக்குவதன் (De - Femilarisation) ஊடாகவும் உருவாகின்றது" என்கிறார். இது ஜெயமோகன் சொல்லிய கூற்றிலிருந்து விலகிய தடத்தைக் கொண்டது. தனித்துவத்தையும் புதுமையை யும் ஒரு பிரதி கோருகிறது என்பதைச் சொல்கிறது. இன்னொரு வகையில் நாம் இலக்கியத் தன்மையை விளங்கிக் கொள்ளலாம். ஒரு பிரதி இன்னொரு பிரதியிலிருந்து வேறுபடுகின்ற அடிப்படையும் அங்கு மொழி நிகழ்த்துகின்ற, ஒரு செய்யப்பட்ட தன்மையும் (Fabric) ஒரு பிரதிக்கும் இலக்கியத் தன்மையை வழங்க முடியும்.

இதற்கு சித்தாந்தனின் கவிதையினுடைய பின்வரும் ஒரு பகுதியை எடுத்துக்காட்டாக சொல்ல முடியும்.

".....
இருளென உலவும்
கடவுள்களிடம்
நானோ அயோக்கியத் தனங்களின் விளை நிலத்தில்
என்னைப் பயிரிடுகிறேன்
எனது வனாந்தரத்தில்
நான் வேடுவன்
நாகரீகங்கள் தீண்டாத ஆதி மனிதச் சாயல் படிந்த
எனது முகத்தில் பறவைகள் தீண்டாத
கனிக் கொடிகள் படிந்திருக்கின்றன
பாம்புகள் புணர்ந்துழலும்
ஒரு இராட்சத கணத்தில்
நீயே உணர்வாய்
உன் பிரார்த்தனைப் பாடல்களை விடவும்
என் வார்த்தைகளில் கருணை சுடர்ந்து பெருகியதை"

(சித்தாந்தன், பிரார்த்தனைக் காலம்)

இன்னொரு வகையில் ஓர் பிரதி ஏன் இலக்கியத் தன்மை அற்றுப் போகிறது என்பதுவும் இலக்கியத் தன்மையைப் புரிந்து கொள்ள வகை செய்கிறது.

குறிப்பாக ஒரு பிரதி பின்வரும் ஒற்றைப் பரிமாணத் தளங்களுக்குள் அகப்படுகின்ற போது இது நிகழ்ந்து விடுகிறது.

1. தனிநபரின் விருப்பு வெறுப்பு
2. நிறுவன விசுவாசம்
3. கலாசார பண்பாட்டு மோகம்

இங்கு, தனிநபரின் விருப்பு வெறுப்பு என்பது பொது வெளியில்தான் பேசுகின்ற கருத்தியலும் மொழியும் தன் ஒருவனுக்கேயான சுய விருப்பாலும் இன்னொருவர் மீதுள்ள வெறுப்பாலும் கட்டுண்டு வெளிப்படும் தன்மை கொண்டது. சமகாலத்தில் சில சிறுகதைகள், நாவல்கள் சில நபர்களை இலக்கு வைத்து அவர்களை பழிவாங்குவ தற்கான நோக்கில் எழுதப்படுவதையும் அவதானிக்கலாம். இவ்வகையான பிரதிகள் இலக்கியத் தன்மைக்கும் அதன் நியாயத்திற்கு நேரெதிரத் திசையிலேயே பயணிப்பன.

அதே போல்தான் சார்ந்த, தான் நம்புகின்ற அமைப் புக்கு விசுவாசமாக அந்த நிறுவமைப்பின் கருத்தியலை யும் வெறுப்பையும் பேசுகின்ற பிரதிகள். குறிப்பாகத் தமிழ் நாட்டில் இந்துத்துவ முலாமுடன் உருவாகின்ற பிரதி கள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன. இங்கு சமயம், சாதி, தேசியம், கொள்கை என்பன அந்த நிறுவமைப்புக்களை உருவாக்குகின்றன.

இவற்றுடன் தாம் கடைப்பிடிக்கின்ற தமது சமூக வாழ்வியல் நடைமுறைகள், பண்பாட்டு விழுமியங்கள், சடங்குகள், நம்பிக்கைகள் என்பவற்றின் அதீத விருப்பால் அவற்றுக்குள் மூழ்கி நின்று மனிதத்துவத்தை மறந்து உருவாக்கப்படும் பிரதிகள் இங்கு சொல்லத்தக்கன.

இவ்வாறான பிரதிகள் ஓர் பிரதி; இலக்கியத் தன்மை அற்றுப் போனவைக்கு சாட்சியாகின்றது.

பிரதியின் இலக்கியத் தன்மையை எப்போதும் சமூகம் தனக்குரியதாய் உருவாக்க முனைகிறது. சமூகத் திரட்சி யும், ஜனரஞ்சகப் பண்பும் சொல்லுகின்ற இலக்கியத் தன்மையும் ஓர் கலைப்பிரதி கொண்டிருக்கக் கூடிய இலக்கியப் பண்பும் எந்நேரமும் ஒத்திருக்க வேண்டிய தில்லை.

■

புலோலியூர் வேல்நந்தன்

புதுப்புனல் - 05

“நமது வரலாற்றை நாங்கள் தான் ஆவணப்படுத்த வேண்டும்”

- தில்லை நாதன் கோபிநாத்-

இவ்வாரப் புதுப்புனல் பகுதியில் அறிமுகம் காண்பது நூலகம் நிறுவனத்தைச் சேர்ந்த தில்லைநாதன் கோபிநாத் அவர்கள் எழுதிய “நமது வரலாற்றை நாங்கள் தான் ஆவணப்படுத்த வேண்டும்” என்ற நூலாகும். ஈழத்துத் தமிழ் நூல்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள், படைப்பிலக்கியங்கள் நவீன தொழி நுட்பம் வழி எண்ணிம ஆவணப்படுத்தும் பணியில் கடந்த பல ஆண்டுகளாக ஈழத்தைத் தளமாகக் கொண்டி யங்கும் நூலகம் நிறுவனம் ஆற்றி வரும் பணி அளப்பரி யதாகும். பல மூத்தவர்களும் இளையவர்களும் இணைந்து ஒரு தன்னார்வக்குழு முயற்சியாக இவ் அரிய பணியை முன்னெடுத்துவருகின்றனர். இதில் அண்மையில் அமுத அகவை கண்ட ஈழத்து நூற்காவலர் பத்மநாத ஐயர், மறைந்த நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி, தெளிவத்தை யோசப் உட்பட இளையவர்களான மயூரன், சஜீவன், கோபிநாத், பிரபா, பரணீதரன், ஆகியோரது பங்களிப் புகளும் அளப்பரியனவாக விளங்குகின்றன. இவர்களால் நூலக நிறுவனம் வழி நூல் ஆவணப்படுத்தல் முயற்சி கள் மட்டுமன்றி குரல்வழி ஆவணப்படுத்தல், காணொளி வழி ஆவணப்படுத்தல் முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. இவ் வகையில் நான் மேலே பெயர் குறிப்பிடாத பலரின் பங்களிப்புக்கள் கூட காத்திர மானவை என்பது மறுப்பதற்கில்லை. இவ் வகையில் இத்தகைய நூலக ஆவணமாக்கல் அனுபவத்தை அடிப் படையாகக் கொண்டு அதன் முதன்மைச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான தில்லைநாதன் கோபிநாத் அவர்களால் எழுதப்பட்டு ஜீவநதி வெளியீடாக 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள நூலே “நமது வரலாற்றை நாங்கள்தான் ஆவணப்படுத்த வேண்டும்” என்ற நூ லாகும். இதனை எழுதியுள்ள கோபிநாத் அவர்கள் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். ஈழத்து ஆவணமாக்கச் செயற்பாடுகளில் 2004 முதல் ஈடுபட்டு வருபவர். நூலக நிறுவ னத்தின் தொடக்க காலமாகிய 2005 முதல் அதன் ஆவணச் செயற்பாடுகளுக்காக பங்களித்து வருப வர். இவர் வாழ்க்கை வரலாற்றுக் கலைக் களஞ்சியம், யாழ்ப்பாணப் பத்திரிகைகள் ஆவணப்படுத்தல், ஓலைச்சுவடிகள் ஆவணப்ப டுத்தல், வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் போன்ற செயற்பாடுகளில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. அவ்வப் போது பல நூலாக்க முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார். அவ் வகையில் துடுப்பாட்டம் அன்றும் இன்றும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தொடக்கமும் வரலாறும், யாழ்ப்பாணப் பத்திரி கைகள் (1841-1900) தேன்மொழி இதழ்த்தொகுப்பு (பரணீதரனுடன் இணைந்து) போன்றன. இவரது காத்திரமான நூல் முயற்சிகளாக அமைந்துள்ளன. அவ் வகையில் இவரால் அண்மையில் வெளியிடப்பட்ட நூலாகவே இந்நூல் அமைகிறது. இந்நூலினுள் நேர்காணல், கட்டுரைகள், முன்மொழிவுகள், கையேடுகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

நேர்காணல்கள் என்ற வகையில் 2012 ஆம் ஆண்டு தினகுரலுக்காக இவர் வழங்கிய நேர்காணல் 2016 இல் ஜீவநதி பரணியால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல், 2020 இல் உதயன் சஞ்சீவியில் வெளிவந்த நேர்காணல் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந் நேர் காணல் வழி ஆவணப்படுத்தலின் முக்கியத்துவம், அதில் உள்ள சவால்கள், அவற்றையும் தாண்டி நூலக நிறுவனம் மேற்கொண்டு வரும் ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் அதில் பங்களிப்போரின் செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் எனப் பல்வேறுபட்ட விடயங்களை கோபிநாத்தின் வாக்குமூலங்கள் எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்நூல் ஆவணப்படுத்தல் சார்ந்து கோபிநாத் எழுதிய காத்திரமான கட்டுரையும் கொண்டுள்ளது. அவ் வகையில் தகவல் அறிதிறன், எண்ணிம இடைவெளி, எண்ணிம நூலகங்கள், எண்ணிம ஆவணப்படுத்தல், வாய் மொழி வரலாறு மிகச் சுருக்கமான வரலாறு போன்ற கட்டுரைகள் இத்துறையில் இயங்குவோருக்கு வழிகாட்டக் கூடிய காத்திரமான கட்டுரைகளாக அமைந்து சிறப்புப் பெறுகின்றன. முன்மொழிவுகள் என்ற தலைப் பினுள் அமையும், நூலகத்தின் தகவல் அறிவியல் சார் தேவைகள், எண்ணிம நூலகத்துக்கான பொருட்தலைப் புக்கள், வாழ்க்கை வரலாற்று ஆய்வு நிலையம், வாய் மொழி வரலாற்று ஆய்வு நிலையம் ஆகிய விடயங்கள் வழியாகவும் நூலக நிறுவனத்தில் பல செயற்பாடுகளை அறிய முடிகிறது. அதில் ஓரிடத்தில் குறித்துரைக்கப்பட் டுள்ள விடயம் மிக முக்கியமானது. நூலக நிறுவனமா னது 2005 தையில் தொடக்கப்பட்டு கடந்த 11 ஆண்டுக ளாக இலங்கைத் தமிழ் ஆவணச் செயற்பாடுகளில் ஈடு பட்டு வருகின்றது. இந்தப் பதினொரு ஆண்டுகளில் 16000 எழுத்தாவணங்களையும் 4000 க்கும் அதிக ஓலைச் சுவடிகளையும் ஆவணப்படுத்தியுள்ளது. 2000 ஆளுமைகள் தொடர்பான தகவல்களையும் 1700 நிறுவ னங்கள் பற்றிய தகவல்களையும் திரட்டியுள்ளது.

தமிழின் முதலாவது ஆவணமாநாட்டை நடத்தியுள் ளது. இந்த ஆவணப்படுத்தலின் பெறுபேறுகள் அனைத் தையும் www.noolaham.org எனும் முகவரியில் இயங்கும். எண்ணிம நூலகத்தின் மூலம் உலகில் எந்த மூலையில் இருந்தும் எந்த நேரத்திலும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளன என்பதே அதுவாகும். ஆயினும் சொல்லப்பட் டுள்ள தரவுகள் 2016 ஆம் ஆண்டுக்குரியன இன்று இதை விட அதிகளவான ஆவணங்கள் (கிட்டத்தட்ட ஒரு லட்சத்தை நெருங்கும்) ஆவணப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும். இதே போல இந்நூலாசிரியரால் செயற்படுத்தப்பட்ட வாய் மொழி வரலாற்று ஆய்வு நிலையச் செயற்பாடுகளும் இங்கு விரிவான முறையில் தரப்பட்டுள்ளன. நூலின் நிறைவு பகுதியாக அமையும் கையேடுகள் என்ற பகுதி யில் ஆவணமாநாட்டுத் திட்டமிடல், எழுத்தாவணங் களை எண்ணிம வடிவங்களில் ஆவணப்படுத்தலும் பாதுகாத்தலும் எண்ணிமப் பதிவுச் சோதனைப் பட்டி யல் போன்ற விடயங்கள் தரப்பட்டள்ளன. இவையும் பயன்மிக்க பல தரவுகளைத் தருகின்றன. மொத்தத்தில் ஒரு இளைய ஆவணப் பயணியின் ஆவண அனுபவங் களையும், அறிகைகள் சார் விடயங்களையும் தாங்கி அச்சில் வெளிவந்துள்ள இந் நூல் கூட ஒரு ஆவணப் பெட்டகம் என்றே எண்ணம் தோன்றுகிறது. நூலகம் நிறுவனம் மூலம் ஈழத்து எண்ணிம ஆவணத்துக்கு பங் களிக்கும் இளையவர்களில் ஒருவராகிய தில்லை நாதன் கோபிநாத்தின் இந் நூலை அறிமுகம் செய்வதில் புதுப்புனல் அக மகிழ்கிறது. ஊர் கூடி ஆவணம் செய் வோம் எம்மால் இயன்ற உதவிகளை இவர்களுக்கு செய் வோம். எங்கள் இலக்கிய சொத்துக்களை அழியாது காப்போம். ■

நடுவு நின்ற நல்நெஞ்சர்

நகுகபரன்

“பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை” என்பது சாதாரண மொழியன்று. வாழ்க்கை நெடுகிலும் நிறைவும் மகிழ்வும் நிலைபெறு வதற்கு பொருள் முக்கியமானது. பொருளானது செம்மை யான வகையில் ஈட்டப்படவேண்டும். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையில் இருந்து மனிதன் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தத்தொடங்கிய ஒவ்வொரு கட்டத்திலும் தொழிற்றுறை வளர்ந்து வந்துள்ளது. இந்த வளர்ச்சியில் வணிக செயற்பாடுகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்கும் தமக்குத்தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் வணிகச்செயற்பாடுகள் ஆதாரமாக அமைந்தன.

தமிழர்கள் வரலாற்று ரீதியாக பல்வேறு தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். சங்ககாலத்தில் உள்நாட்டிலும் கடல்கடந்த நாடுகளுக்கிடையிலும் வர்த்தக நடவடிக்கைகள் நிகழ்ந்துள்ளமைக்கு சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. தமிழ்நாட்டின் துறை முக நகரங்களில் புலம்பெயர்மக்கள் தங்கிச்சென்றுள்ள னர். பிறதேசத்து உற்பத்திப்பொருள்களை கப்பல்கள் சுமந்துவந்ததோடு உள்நாட்டு உற்பத்திப்பொருள்களை சந்தைப்படுத்தும் செயற்பாடுகளும் நிகழ்ந்துள்ளன. “நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும் /காலின் வந்த கருங்கறி மூடை யும்.” பற்றி பட்டினப்பாலை செய்யுள் விபரிக்கிறது. இலங்கையில் இருந்தும் தமிழ்நாட்டிற்கு பொருள்கள் சென்றமையை “ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்” என்ற செய்யுளடி எடுத்துக்காட்டுகிறது.

ஆரம்ப காலத்தில் சுங்கச்செயற்பாடுகள் ஒழுங்குற நிகழ்ந்துள்ளன. “புலி பொறித்துப் புறம்போக்கி/மதி நிறைந்த மலி மண்டம்” பற்றிய விபரிப்பானது சோழர்க ளது புலி இலட்சினை பொறிக்கப்பட்டு பண்டங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பாங்கினை எடுத்துக்காட்டுகின்றது.

இருப்பவற்றுள் மிகையானவற்றை விற்று, வேண்டி யவற்றைக் கொள்வனவு செய்து சமனிலையாக வாழும் வாழ்க்கை முறைமை அன்று நிலவியுள்ளது. பண்டமாற்று முறையின் செல்வாக்கு முக்கியமாக இருந்துள்ளது. விவ சாயம் மட்டுமன்றி கைத்தொழில் செயற்பாடுகளும் திட் டமிட்ட முறைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மக் களின் தேவையை ஈடுசெய்வதாகவும் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பை உருவாக்குவதாகவும் சுயமுயற்சியை ஊக்கப்படுத்தும் வகையிலும் வணிக முயற்சிகள் முதன்மைபெற்றுத் திகழ்ந்துள்ளன.

மக்கள் சமூகத்தின் இருப்பை நிலைப்படுத்தும் வணிகர்கள் பல்வேறு சவால்களை முகங்கொண்டே தமது தொழிலை முன்னெடுத்துள்ளனர். யாவற்றுக்கும் மேலாக அறத்தைப் பின்பற்றிய செயற்பாடானது முதன்மைபெற்றுள்ளது. வணிகத்தின் உயர்ச்சிக்கும் அறம் முதன்மையானது. வியாபாரத்தைப் பெருக்கு வதற்கும் நீண்டகாலம் தமது இருப்பைத் தக்கவைப் பதற்கும் அறத்தோடு இணைந்த வணிகச்செயற்பாடே துணைநிற்கும் என்பதை வணிகர்கள் உணர்ந்திருந்தனர். பிறருக்கு இனிமையைத் தரும் “தண்ணிழல் வாழ்க்கை” தொழில் ஊடாக நிலைபெறவேண்டும் என்ற எண்ணம் அவர்களிடத்து இருந்துள்ளது.

“கொடுமேழி நசையுழவர் / நெடுநுகத்துப் பகல் போல /நடுவுநின்ற நல்நெஞ்சினோர் /வடுவஞ்சி வாய்மொழிந்து /தமவும் பிறவும் ஒப்பநாடிக் /கொள்வ தூஉ மிகைகொளாது /கொடுப்பதூஉங் குறைகொடாது /பல்பண்டம் பகர்ந்துவீசும்”

தன்மை பற்றி பட்டினப்பாலை செய்யுள் விபரிக் கிறது. வணிகத்தில் பின்பற்றப்பட்டு வந்த அறத்தை முதன்மைப்படுத்தியது இச்செய்யுள்.

பகலாணி என்பது உழவில் ஈடுபடும் இரண்டு மாடு கள் பூட்டிய நுகத்தின் நடுவே இருப்பது. எவ்வாறு பக லாணி நடுவுநிலை நின்று இயங்குகிறதோ அதுபோல வணிகர்கள் நடுவுநிலை கொண்ட நெஞ்சராக இருந்துள் ளனர். பழிக்கு அஞ்சும் உள்ளம் உடையவராக தமது தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

நல்லுள்ளத்தோடு செயற்பட்ட வணிகர்கள் சொன்ன சொல் தவறாது செயற்படும் பண்புடையராகத் திகழ்ந்த னர். தாம் பிறருக்கு கொடுக்கும் பொருளையும் பிறரிடத் திருந்து விலையாக வாங்கும் பொருளையும் ஒத்த நிறையு டையதாகக் கருதினர். இதனால் பொருளின் மதிப்புக்கு

அதிகமாக வாங்குவதோ குறைவாகக் கொடுப்பதோ அவர்களின் செயற்பாட்டில் காணமுடியாது என்பதை இச்செய்யுள் எடுத்துக்காட்டுகிறது.

தொழிலில் ஏற்றத்தை அவாவிநிற்போர்க்கு ஏற்ற நெறி இது எனின் அது மிகையாகாது. பேரிடர்க் காலங் களில் மக்களின் வறுமையையும் இல்லாமையையும் பயன்படுத்தி பதுக்கி, கலப்படம் செய்து பொருள்களை அதிக விலைக்கு விற்று உடனடியாக அதிக பணத்தை இலாபமாகப் பெற்றாலும் அறமற்ற அச்செயல் அவர்களை என்றும் உயர்ந்த நிலைக்கு இட்டுச்செல்லாது. நிலையான உயர்விற்கான வணிகமென்பது நேர்மையான செயற்பாடுக ளிலேயே தங்கியுள்ளது. இதனை முன்னவர் உணர்ந்து நடந்துள்ளனர்.

“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிக் பிறவும் தம்போல் செயின்” என்றார் வள்ளுவர். பிறர் பொருளையும் தம் பொருள் போல் கருதி வாணிகம் செய்தால் வணிகர்க்கு அதுவே மேலும் வாணிகப் பெருக் கம் உண்டாகச் செய்யும் என்பது இக்குறட்பாவில் வள் ளுவர் முன்வைக்கும் கருத்தாகும். இத்தகு நேர்மையான வாணிகத்தைப் பற்றியே மேற்குறித்த பட்டினப்பாலையும் விபரித்துள்ளது. அதனையே வள்ளுவரும் எடுத்துரைத் துள்ளார். தனிமனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற் கும் துணைசெய்யும் தொழில் சார்ந்த அறத்தைப் பின் பற்றுவது அனைவரையும் மேம்பாடடையச்செய்யும். ■

விலக்கப்படும் நந்திகள்

பேராசிரியர் அ.ராமசாமி

சில மாதங்களுக்கு முன் நடந்த தேர்தல் வழியாகத் திரும்பவும் ஆட்சியைக் கைப்பற்றி யிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். இந்தக் குறுகிய காலத்தில் அதன் செயல்பாடுகள் சில, தமிழகத் தின் பெரும்பான்மை மக்களால் ஏற் புடையனவாக மாறிக்கொண்டிருக் கின்றன. தனது தேர்தல் வாக்குறுதிக ளாகத் தந்த இலவசங்கள், கொரோ னாப் பெருந்தொற்றைச் சமாளித்தல் போன்றனவற்றிற்காகக் கிடைக்கும் பாராட்டுகளும் ஏற்புகளும் பொதுப் புத்தி சார்ந்தவை. அவற்றைத் தாண் டித் திராவிட இயக்கங்களின் கருத்தி யல் சார்ந்த முன்னெடுப்புகளும் கவ னிக்கப்படுகின்றன, பாராட்டப்படு கின்றன என்பதே இப்போதைய விவாத மையம்.

திராவிட முன்னேற்றக்கழகம் கட வுள் மறுப்பைப் பேசும் நாத்திகக் கட்சி என்ற கருத்துருவாக்கத்தை மாற்ற நினைத்துப் பண்பாட்டு நடவடிக்கை களில் சீர்திருத்தங்களை முன்னெடுக் கிறது. அச்சீர்திருத்தங்களைக் காலத்திற்கேற்ற மாற்றங்கள் கொண் டதாகவும் நடைமுறையில் இருக்கும் மக்களாட்சியின் பொதுப்போக்கோடு இயைபுகொண்டதாகவும் மாற்ற நினைக் கிறது. இதன் வெளிப்பாடுகளாக இரண்டு நிலைப்பாடுகளை முன்வைத் துள்ளது. இதுவரை கோயில்களின் வழிபாட்டு மொழியாக இருக்கும் சம்ஸ்ருதத்தின் இடத்தில் தமிழ் இருக்கும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என அறிவித்துள்ளது. இரண்டும் வேறுவேறா னதாகத் தோன்றினாலும், ஒன்றோ டொன்று தொடர்புடையன. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அவசரப்படாமல், நிதா னமான ஏற்பாடுகளுடன் அரசு செயல்பட்டது. இதனை எதிர்ப்பவர்கள் எவ்வகையான சட்டப்போராட்டங் களை மேற்கொள்வார்கள் எப்படி அதனை எதிர்கொள்ளலாம் எனத் திட்டமிட்டுக் கொண்டு முன்னெடுத்தது. எதிர்ப்பவர்களைக் கருத்தில் கொண்டதைப்போலவே அதனை ஏற்புடையதாகக் கருதும் சமயத்தலைவர்களை உள்வாங்கிக் கொண்டது என்பதுவே கவனிக்கத்தக்க ஒன்றாகியுள்ளது. அதன் மூலம் இந்தக் கட்சி, நாத்திக இயக்கமல்ல. சமயப் பண்பாட்டுச் சீர்திருத்த இயக்கம் என்பதை நிலைநாட்ட நினைத்து, மேடை அமைப்பு தொடங்கி, அனைவரை யும் மேடையில் அமர்த்தியதுவரை கவனமாக மேற் கொள்ளப்பட்டன. அந்தப் புரிதலோடு பயிற்சி பெற்ற ஓதுவார்களுக்கும் அர்ச்சகர்களுக்கும் அரசின் பணி ஆணையைக் கையளித்தார் தமிழ்நாட்டரசின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். இந்தச் செயல்பாடும் நடைமுறைகளும் பொதுக்கருத்தை உள்வாங்கிச் செயல்படும் அரசு என்ற கருத்தாக்கத்தை இயல்பாகவே ஏற்படுத்தும் தன்மை கொண்டவை.

☆☆☆

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல் லாம் ல்ட்சியங்களை நினைத்துப் பார்த்து சில முன் மொழிதல்களைச் செய்வதுண்டு. 2011 இல் செம்மொழி யாகத் தமிழ்மொழியை அறிவிக்கச் செய்தது அப்படிப் பட்ட ஒன்று. இன்னொன்று 2008 இல் சென்னை சங்க மம் என்னும் பெருந்திருவிழா நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தபோது செய்த அறிவிப்பு இன்னொன்று. மனிதர்கள் கூட்டமாகப் புத்தாண்டின் பிறப்பை வர வேற்றுக் கொண்டாடும் நிகழ்வுகள் உலகெங்கும் உள்ள பல்வேறு சமூகங்களில் பல்வேறு விதமாக நிகழ்கின்றன. அந்நிகழ்வுகளில் எல்லாம் ஒருவித ஒற்றுமை காணப்படுவதாக சமூக மானிட வியல் ஆய்வுகள் சொல்கின்றன. வாழிடம் உருவாக்கும் வாழ்க்கை முறையின் மகிழ்ச்சியான கால கட்டத்தைக் கொண்டாட்ட காலமாகக் கொள்வது பழஞ் சமூகங்களின் பொது இயல்பு. கொண்டாட்டக் காலத்தின் தொடக்கத்தை ஆண்டுத் தொடக்கமாகக் கொள்வதும் அப்போது இயல்பினுள் அடங்கும். வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் எனத் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனர் தமிழர்களின் வாழிட எல்லைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். வாழிட எல்லையான தமிழ் நிலப்பரப் பிற்குள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையான நிலப்பகுதிகள் இருந்தன எனச் சொல்லும் தொல்காப்பியம், அப்பிரதேசத்தின் தட்பவெப்ப நிலையை முன்பனி, பின்பனி, கார், கூதிர், இளவேனில், முதுவேனில் எனப்பிரித்தும் காட்டியுள்ளது. இந்நிலப் பகுதிக ளில் நிலவிய தட்பவெப்ப நிலைக்கேற்ப முக்கிய பயிர்களாக இருந்தவை நெல்லும் தினையும். குறிஞ்சியிலும் முல்லையிலும் தினை பயிரிட, மருதநில வேளாண் மக்கள் நெல்லைப் பயிரிட்டு வளமாக வாழ்ந்த காட்சிகளைச் செவ்வியல் இலக்கியங்களான அகப்பாடல்களிலும், புறப்பாடல் களிலும் காண்கிறோம். மருதநில அரிசிக்காக நெய்தல் நில உமணர்கள் உப்பையும் மீனையும் பண்ட மாற்றுச் செய்த காட்சிகளை அவ்விலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.





தினை அரிசியையும் வரகரிசி யையும் நெல்லரிசியையும் அடிப் படை உணவாகக் கொண்ட தமிழ்ச் சமூகம் அதனை உற்பத்தி செய்ய உதவிய வான்மழையை வணங்கிப் போற்றிய சமூகம். நீரின்றி அமையாது உலகு என உணர்ந்த தமிழர்களின் குரல் மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!! எனக் கொண்டாட்ட காலத்தில் வெளிப்பட்டதைச் சிலப்பதிகார வரிகளால் உணர்கி றோம். மழைநீரின் உதவியால் உற்பத்தி செய்த அரிசி வகைகளை உற்பத்தி செய்த தமிழர்கள் அதற்குக் காரண மான நிலத்தையும் நீரையும், ஆட்டையும் மாட்டையும், கன்றுகாலிகளையும் வணங்குவதற்கான கொண்டாட்ட நாளாகக் கொண்டிருப்பது பொங்கல் பண்டிகை. ஒட்டு மொத்தத் தமிழ் பரப்பிலும் கொண்டாடப்படும் பொங்கலில் படைக்கப்படும் படையல் பொருட்கள் அவர்களின் வேளாண்மை உற்பத்திப் பொருட்களே.

தற்போது நடைமுறையில் இருக்கும் தமிழ்ப் புத் தாண்டின் தொடக்கமான சித்திரை மாதம் தமிழ் வாழ்வோடு இத்தகைய நெருக்கம் கொண்டதல்ல என்பதை உறுதியாகச் சொல்லமுடியும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழி சார்ந்து வாழும் தமிழர்கள், அந்த மாதத்தில் மணவிழாக்களை நடத்துவதை அதிகம் விரும்புகிறார்கள். அதிக பட்ச வெப்பத்தை உமிழும் கோடை காலமான சித்திரை மாதத்தில் திருமணம் போன்ற நிகழ்வுகளைத் தமிழர்கள் நடத்துவதில்லை. இந்தப்புரிதலோடுதான் தை முதல் திகதியைப் புத்தாண்டுத் தொடக்கமாக அறிவித்தார் கலைஞர் மு.கருணாநிதி.

அரசு ஆணை என்ற போதிலும், கலை ஞர் அரசு பிறப்பித்த ஆணையைத் தமிழ்த்திரள் அப்படியே ஏற்றுக்கொள்ள வில்லை. ஏறத்தாழ 500 ஆண்டுகளாகப் புழக்கத்தில் இருந்த 60 ஆண்டுச் சுழற்சி என்னும் காலக்கணக்கைக் கைவிடும் மனம் தமிழர்களுக்கு வரவில்லை. அப்படி வரா மல் இருந்ததின் பின்னணியில் தமிழர்கள் மொழிசார்ந்த இனமாக அடையாளப்படுவ தைவிட, 'இந்துசமயம்' என்ற சமய அடையாளத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இருந்தார்கள் என்பதே கவனிக்கவேண்டியது. இந்துசமயம், தனக்குள் இருக்கும் வேறுபாடுகளை மறைத்துக்கொண்டு, திருவிழாக்களோடு கூடிய நாட்காட்டிகளையும் காலக்கணக்கையும் முன்வைத் திருப்பதை மாற்றும் தேவைக்கான பருண்மையான காரணங்களை அரசால் முன்வைக்க முடியவில்லை.

கலைஞர் மு.கருணா நிதியால் முன்வைக்கப் பட்ட கருத்தியல் செயல்பாடுகள் தோல்வியைத் தழுவியதைப்போல இப்போதைய முன்னெடுப்புகள் தோல்வியைச் சந்திக்கப்போவதில்லை. ஏனென்றால் இச்செயல்பாடுகள் அரசியலை ஆணையில் வைத்து எடுக்கப்படும் முடிவுக ளாக உள்ளன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இந்த இடத்தில் அரசி யலை ஆணையில் வைத்தல் அதிகாரத்தை ஆணையில் வைத்தல், என்ற இரண்டு நிலைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடுக ளைக் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது.

அரசியல் மையம், அதிகாரமையம் என்ற சொல்லாடல்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் என்பன போர்களுக்கும் போராட்டங்களுக்கும் இடையே யுள்ள வேறுபாடுகளோடு தொடர் புடையன. போர்களுக்குப் பாதி வெற்றி பாதித் தோல்வி என்ப தில்லை. அடைந்தால் வெற்றி. இல்லையென்றால் அழிவு. இதற்கு மாறானவை போராட்டங்கள். அதிலும் மக்கள் திரளின் ஆதரவோடு முன்னெடுக்கப்படும் போராட்டங் களில் வெற்றியும் உண்டு தோல் வியுமுண்டு. இரண்டின் கலவையும் உண்டு.

மக்களாட்சியில் நம்பிக்கை கொண்டு அரசியலை ஆணையில் வைத்துச் செயல்படும் கட்சிகள் தேர்தல் அரசியலில் வெற்றியில்லை என்பதற்காகத் துவண்டுவிடுவ தில்லை. தோல்வியிலிருந்து பாடங்கற்றுக்கொண்டு எழுந்து நிற்கும். அடுத்ததொரு போராட்டக்களத்தை உருவாக்கிக் கொண்டு வரப்போகும் தேர்தலில் வெற்றிக் காகக் காத்திருக்கும். தேர்தல் வெற்றி என்பது மக்கள் திரளின் நம்பிக்கையால் கிடைப்பது.

போர்களை வழிமுறையாகக் கொள்ளும் இயக்கங் ளுக்கும் போராட்டங்களை நடைமுறைத் தந்திரங்களாக முன்னெடுக்கும் அரசியல் இயக்கங்களுக்கும் போராட்டங்களுக்குப் பிந்திய வெற்றியிலும் விடுதலை யிலும் ஆணையிடும் இடத்தில் எதனை வைப்பது என் பதிலும் அவை வேறுபடுகின்றன. போரை நம்பும் இயக் கங்கள் 'அதிகாரத்தை' ஆணையில் வைக்க நினைக்கின்றன. போராட்ட வழிமுறைக் கட்சிகளோ 'அரசியலை' ஆணை யில் வைக்கின்றன. தேர்தல் அரசியலில் இருந்தாலும் தனிநபர் தலைமை, ஒற்றையாட்சி போன்றவற்றை நம் பும் இயக்கங்களும் கூடப் போர்களை நம்பும் இயக்கங் களைப் போன்றவைகளே. ஏனென்றால் அவையும் வெற் றிக்குப் பின் அரசியலை ஆணையில் வைப்பதில்லை. அதிகாரத்தை மட்டுமே ஆணையில் வைக்கின்றன.

வாக்களிப்பின் வழியாக ஆட்சி மாற்றங்களை உருவாக்கிப் பொதுத்தள விவாதங்கள் வழியாக நீண்ட கால இலக்குகளை அடைய நினைக்கும் ஒரு அரசியல் கட்சி, அதிகாரத்தை ஆணையில் வைக்காமல், அரசி யலை ஆணையில் வைக்கிறது. அதற்குத் தமிழ்நாட்டுக் கட்சிகளில் எடுத்துக்காட்டாக இருப்பது திராவிட முன் னேற்றக்கழகம். வாக்கரசியலின் வழியாக அதிகாரத் தைக் கைப்பற்றி அதன் வழியாகவே லட்சியங்களை -நீண்ட காலக் கருத்தியல்களை மக்களிடம் கொண்டு செல்வதைத் திராவிட முன்னேற்றக்கழகம் குறிப்பிட்ட கால இடைவெளியில் முன்னெடுக்கிறது. அம்முன் னெடுப்பில் அக்கட்சிக்கு வெற்றியும் கிடைத்திருக்கிறது, தோல்வியையும் சந்தித்திருக்கிறது.

பொங்கலை ஒட்டிய தமிழ்ப்புத்தாண்டு என்ற ஆணையைப் போலல்லாமல், கோயிலின் கருவறைக்குள் தமிழ் என்பதும், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகிறார்கள் என்பதும் புதிய திறப்புகளாகத் தோன்று கின்றன. மக்களின் நம்பிக்கையைப்பெற்ற அரசின் முன் னால் தடையை ஏற்படுத்த முடியாமல் மறைத்து நிற்கும் எதிர்க்கருத்தியல் என்னும் நந்திகள் விலகத் தொடங்கி யுள்ளன. இந்தச் சீர்திருத்தம் தமிழ்ச் சமயவாழ்வியலில் எடுக்கப்பட்டுள்ள புதிய வெளிச்சமாக இருக்கப்போ கிறது. இந்தியத் தமிழ்ப்பரப்பில் தெரியும் இந்த வெளிச் சம், இலங்கையிலும் பரவும். தமிழர்கள் வாழும் எல் லாப்புலங்களுக்கும் விரியும். விரியவேண்டும் என்பது காலத்தின் தேவை.

■

கண்ணீர் அஞ்சலி

அமரர்
விஜயசங்கர் சாந்தினி

(ஆசிரியை, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்)

மலர்வு
13.02.1978

உதிர்வு
18.08.2021

ஆலம் விழுதுகள் போல்
ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகள்
வீழ்ந்து விடாதிருக்க
வேரென இருந்தீரே தாயே
மாயப் புயல் வடிவில்
காலனவன்
இன்னுயிர் பறிக்க
சோகத்தை தந்து விட்டு
சொல்லாமல்
சென்றதென்ன?
நல்வழிகள் காட்டி எம்
சமூகத்துக்கு
ஒளிகொடுத்த தீபமே.

உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

தீம்புனல் குழுமம்

சித்த மருத்துவமும் முறிவு நெறிவு சிறப்பு சிகிச்சையும்

டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc

சித்த மருத்துவர்கள் உடலில் காணப்படும் வன்மப் புள்ளிகளை சிறு ஊசிகளால் குற்றி மயக்கமடையச் செய்து அல்லது விறைக்கச் செய்து சித்தர் அறுவை மருத்துவம் நடைபெற்றதை அறியும் போது வியப்பூட்டும் வகையில் காணப்படுகின்றது. முறிவு நெறிவு பிரிவு சித்தமருத்துவத்தில் நிபுணத்துவ சிறப்பு மருத்துவ சிகிச்சை பிரிவாகக் காணப்படு கின்றது.

எலும்பொட்டி எனும் மூலிகையைப் பசுப்பாலில் கொதிக்க வைத்து ஆறிய பின் னர் குடிக்கலாம். இது எலும்புப் பலத்தை அதிகரிப்பதோடு உடைந்த எலும்பு சேரு வதற்கு உதவும். பிரண்டை எனும் தாவ ரம் எலும்பு போன்ற தோற்றத்தைக் கொண்டது. பிரண்டை எனும் மூலிகை எலும்புப் பலத்தை அதிகரிப்பதால் 'வச்சிர வல்லி' என்ற பெயரும் அதற்கு வழங்கப்பட்டுள்ளது. "சதை பிரண்டாலும், சரி செய்திடும் பிரண்டை" என்பது பழ மொழி. எலும்பு அடர்த்தி (Bone Density) குறைந்த நிலை, என்பு முறிவு (Fracture) போன்ற நிலைகளில் பிரண்டைத் துவை யல் எடுத்தல் நன்று.

அடிபட்ட கண்டலுக்கு விராலித் தைலத்தைப் பூசும் போது குணமாகும். அடிபட்ட கண்டலில் காயம் இல்லாத நிலையில் கருங்கல்லை தூளாக்கி நன் றாக அரைத்த உள்ளிச் சாறுடன் பூசிக் கட்டலாம். உள்ளி திஷ்ணத் தன்மை கொண்டதனால் கண்டலை அகற்ற உதவும்.

புக்கை கட்டும் முறை I

மஞ்சள் மா, நச்சீரகம் , பெருஞ்சீரகம், வெந்தயம், வேர்க்கொம்பு, இலுப்பை அரப்பு. மிளகு வகைக்கு 250 கிராம் உழுந்து, பச்சை அரிசி வகைக்கு 500 கிராம். இவற்றைத் தூளாக இடித்து, தூத்துமக்கொத்தான், பிள்ளைக் கற்றா ழைச் சாறுவிட்டு காய்ச்சி சிறிதளவு நல்லெண்ணை சேர்த்து புக்கையாக எடுத்தல் வேண்டும். இதில் சேர்க்கப்படும் நல்லெண்ணை, புக்கை பழுதடையாமல் இருக்க உதவும். நோவு எண்ணெய்போட்டு சுடச் சுட புக்கையால் பொட்டணி கட்டி ஒத்தடமிட்டுப்பின் அந்தப் புக்கையைப் பரவிக் கட்டுதல் வேண்டும். இவ்வாறு ஒன்றுவிட்ட ஒரு நாள் கட்டுதல் வேண்டும். இவ்வாறு 3-4 நாட்களுக்கு கட்ட எந்த நோவும் மாறிவிடும்.

புக்கை தயாரிக்கும் முறை II

தூத்துமக் கொத்தான் கொடிச்சாறு, அரிசிமா, உழுத்தம்மா, குரக்கன்மா காய்ச்சி மஞ்சள்மா, கறிமுருங்கைப் பட்டை சேர்த்து கோழிமுட்டை, சாரா யம் விட்டு கட்டுதல். இதில் குரக்கன்மா நீரை எடுக்கும், கறி முருங்கைப்பட்டை வாதத்திற்கு நன்று. சுக்குத்தூளைஅதிக மாகச் சேர்க்கும் போது தோலில் புண்க ளை ஏற்படுத்தலாம் என்பதால் சுக்குத் தூளை குறைவாகச் சேர்க்க வேண்டும்.

புக்கை தயாரிக்கும் முறை III

பிள்ளைக்கற்றாழை இடித்து முழுமை யாகப் போடுதல், கருகு கற்றாழைச் சாறு சேர்த்து தூத்துமக்கொத்தான், முடக் கற்றான், ஊமத்தை ஆகி யவற்றைச் சேர்த்துப் போட்டு இடிக்க களியாக வரும் நீர்விட்டு எரிந்து வருவது 3 கிலோக்கிராம் எனில் வெள்ளைப்பச்சை அரிசி 750 கிராம், உழுந்து 2 கிலோக்கிராம் சேர்த்து காயவிட்டு இடித்துத் தூளாக்கி எடுத்துத் தகரத்தில் அடைத்து வைத்து தேவையான போது புக்கையாகக் கிண்டிக் கட்டலாம்.

புக்கைக்கட்டும் முறை iv

நாவல்பட்டை , லுதியம்பட்டையைத் தூளாக்கி தூத்துமக் கொத்தான் சாறு விட்டு சிவப்புப் பச்சையரிசிமா, குரக் கன்மா, உளுத்தம்மா சேர்த்து நீர் விட்டு கிண்டி அடுப்பில் சுட வைத்து புக்கை யாகக் கட்டலாம்.

நொச்சி, பருத்தி, ஆம ணக்கு, மாவிலங்கம் பட்டை, வாதமடக்கி ஆகியவற்றை இரவு நீர்விட்டு ஊற வைத்து அவிழ்த்த பின்னர் காலையில் திரும்பவும்சூடாக்கி புக்கையை அவிழ்த்து பின்னர் கழுவுவதற்கு பயன்படுத்தலாம்.

வைரப் பத்து

நாவல், லுதியம், கண்டல், பாலை ஆகிய வற்றின் பட்டைகளை இடித்து நீர்விட்டு அவித்து பிழிந்து பின்னர் பனங்கட்டி, கரிய பவளம், தேன் சேர்த்து வைரப்பத்தாக முறிவுக்கும் பயன்படுத்தலாம்.

முறிவு ஏற்பட்ட நிலையில் அத னைப் பொருத்திய பின்பு மஞ்சள்மா, தயிர், முட்டை வெள்ளைக்கரு, தூளாக் கிய சவர்க்காரம், சுண்ணாம்பு சேர்த்து வைத்துக் கட்டும் முறையானது ஆடு மாடு முறிவுகளிலும், மனிதனுக்கு ஏற்படும் என்பு முறிவுகளிலும் பயன்படுத்தலாம் என்புகள் அசையா மல் இருப்பதற்கு (Immobilization) மட்டைகள் வைத்துக்கட்டுவர். கொ சுத்தேன் பூவரசம் மரப்பொந்தில் இருக்கும். மெடுகு முறிவு நெறிவுக்குக் கட்டும் மட்டையில் பூசி கட்டலாம்.

கரிய பவளம், விடத்தல் பிசின், கருஞ் சீரகம், மிளகு, வேர்க்கொம்பு, வசம்பு, பெருங்காயம், செந் சந்தனக்கட்டை சிறிதளவு சாராயத்தில் ஊற விட்டு அரைத்து பின்னர் இரண்டு முட்டை, தேன் இரண்டு அவுன்ஸ், சாராயம் இரண்டு அவுன்ஸ், சேர்த்து முறிவுக் குக் கட்டலாம். சுண்ணாம்பு சிறிதளவு சேர்க்கலாம். அதிகளவில் சேர்த்தால் தோல் புண்களை ஏற்படுத்தும். நோவு எண்ணெய், கரிய போளம், வெளுத்தல் பிசின், சாளியா, பெருங்காயம், வேம் பாடல், மஞ்சள், கொறுக்காய்ப் புளி வகைக்கு எட்டு களஞ்சு எடுத்துத் தூள் செய்ய வேண்டியதை தூள் செய்து நல்லெண்ணை, இலுப்பெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய ஒவ்வொரு எண்ணெயிலும் இரண்டு போத்தல்கள் வீதம் எடுத்துக் காய்ச்சி பயன்படுத்தலாம்.

புராதன மருத்துவ முறைகளின் அறி வையும் (Knowedge of age practices), புரா தன விஞ்ஞானத்தின் முறையியலையும் அறிவையும் (Methods and knowledge of ancient science), புராதன மருத்துவமுறை களையும் (Ancient Medical systems), பாரம் பரிய அறிவையும் (Traditional knowledge) பேணிப் பாதுகாப்பதும், (Conservation), ஆவணப்படுத்துவதும் (Documentation), அவை தொடர்பான ஆய்வுகளை (Res erch) செய்வதும், சித்த மருத்துவ அறிவு மக்களிடம் சென்றடைவதும் (Disseminat on of knowledge) அவசரமான, அவசியமான செயற்பாடாக முன்னெடுத்து தமிழர் அறிவுப் புதையல்களை அடுத்த தலைமு றைக்கு கையளிப்பது காலத்தின் கட்டாயமாகும்.

(வளரும்.....)

மூலிகை சுக வாழ்வு நிறுவகம்
கிளவ் வீதி, தெல்லிப்பளை.

மாமிசம்

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனோ எனக்குத் தாகமாக இருந்தது. அது பயத்தினால் கூட இருக்கலாம். பள்ளிக் கூடத்தில் வீட்டு வேலை செய்யவில்லை என்றால் கணிதபாட ஆசிரியர் இப்படித்தான் முழங்காலில் இருத்துவார் அந்த நினைவுதான் வந்தது.

சுற்றிவளைப்பு மதியத்தையும் தாண்டி இரண்டு மணிவரை நீண்டது என் முழங்கால் சிரட்டைகள் வெய்யிலில் தகித்துக் கண்டிப்போயின. இராணுவத்தினர் சிலர் எங்கள் அருகில் வந்தனர். நான் நினைத்தேன் ஒன்றுகூடித் தாக்கப்போகின்றார்கள் என்று. வந்தவர்கள் எங்களை தூக்கி, புறப்படத் தயா ராக நின்ற றக்குக்குள் போட்டார்கள். றக் விரைந்து புறப் பட்டது. நான் மெல்ல வெளியே எட்டிப் பார்த்தேன். அம்மாவும் அப்பாவும் அலறிக்கொண்டு றக்கைத் தொடர்ந்து ஓடிக்கொண்டுவந்தார்கள்.

என்னை, தலைகீழாகத் தொங்க விட்டிருந்தார்கள். எனது கைகள் உயிரடங்கிய கோழியின் இறக்கைகளைப் போலத் தொங்கிக் கொண்டிருந்தன. தேகம் வியர்த்து நீராக வழிந்துகொண்டிருந்தது. என்னைச் சூழ குண்டாந் தடிகள் சகிதம் நான்கு இராணுவத்தினர் நின்றார்கள். கிறிக்கட் பயிற்சி வீரர்கள் பந்தைக் கட்டித் தொங்கவிட்டு துடுப்பால் அடிப்பதைப் போல நான்கு திசைகளிலுமி ருந்து அடித்துக்கொண்டிருந்தார்கள். நான் பந்து போல் அலைக்களிந்துகொண்டிருந்தேன். அவர்களின் எந்தக் கேள்விக்கும் என்னிடம் பதில்கள் இல்லை. அவர்கள் பதிலில்லாத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார் கள். திரும்பத் திரும்ப "இல்லை சேர், இல்லை சேர்" என்றே சொல்லிக் கொண்டிருந்தேன்.

அது மாபெரும் மரண விளையாட்டு. என் கன்னங் கள் வீங்கிக் கன்றியிருந்தன. என் குதிக்கால்கள் பிளந்து குருதி வழிந்துகொண்டிருந்தது. முதுகும் நெஞ்சும் தீயில் கருகுவது போல எரிந்துகொண்டிருந்தன. கேளிக்கையா லும் ஏளனத்தினாலும் நிறைந்திருந்த அந்த வதைகூடத் தில் என் வெம்மை நிரம்பிய மூச்சு நிறைந்திருந்தது. சுவர் களில் என் இரத்தம் தெறித்துப் படிந்திருந்தது. என் அல றல் காதுகளில் மீள மீள ஒலித்துக் கொண்டிருந்தது.

இப்போது செட்டைகள் உரிக்கப்பட்ட கோழி தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. என்னை அவர்கள் நிர்வாணமாக்கித் தொங்கவிட்டிருப்பதைப் போலவே கடைக்காரன் கோழியையும் தொங்கவிட்டி ருந்தான். அதன் தசைகளில் ஊறிக்கிடந்த இரத்தம், என் தேகத்தில் ஊறி வழிந்த இரத்தத்தை ஞாபகமூட்டியது. என்னைத் தொங்கவிட்ட கயிற்றை அறுத்தபோது நான் தலையடிபடத் தரையில் விழுந்திருந்தேன். என் மண்டை பிளந்து பெருகிய இரத்தம் அறை முழுவதிலும் விரவிக் கிடந்தது. நான் முனகிக் கொண்டு கிடந்தேன் நா வறண்டு தண்ணீர்த் தாகம் எடுத்தது. நான் என் கைகளினால் சைகை செய்து தண்ணீர் கேட்டேன். அங்கிருந்த சிப்பாய்களில் ஒருவன் குவளை ஒன்றில் தண்ணீரை மொண்டு வந்து என் வாயில் ஊற்றினான். நான் தண்ணீரில் இருந்து கரையில் வீசியெறியப்பட்ட ஒரு மீனைப்போல வாயை அகல விரிக்க எத்தணித்தேன். முடியவில்லை. அவன் ஊற்றிய நீரில் பாதியிலும் அதிகமான நீர் என் இரத் தத்தோடு கலந்து தரை முழுவதிலும் பரவியிருந்தது.

கடைக்காரன் கோழியை சிறுசிறு துண்டுகளாக வெட்டி சொப்பிங் பாக்கில் இட்டுக் கொண்டு என்னி டம் வந்தான். நான் அதற்குரிய பணத்தைக் கொடுத்து விட்டு இறைச்சிப் பார்ஸலைப் பெற்றுக்கொண்டேன். மாமிசத்தின் வீச்சம் என் மூக்கை அடைத்தது. என் தேகத்தை நான் பார்ஸலிட்டு கொண்டு செல்வதைப் போலிருந்தது.

கடவுளின் படைப்பில் மனிதன்தான் உயர்ந்த படைப்பா? கடவுள் மனிதனுக்காகத்தான் எல்லாவற்றையும் படைத் தாரா? என் தேகமே மாமிசம்தான். நானே மாமிசத்தை உண்டு மாமிசமாக வளர்ந்து நிற்கின்றேன். தன் தசைத் துண்டில் ஒரு கீறல் விழுந்தால்கூடத் தாங்கிக் கொள்ளாத மனிதன், பிற உயிரிகளைக் கொன்று புசிப்பது எவ்வளவு கொடூரமானது. ஒவ்வொரு உயிரும் கடவுள் தன் உயிரென்றுதான் கூறியிருப்பதாக மதங்கள் சொல்லுகின்றன. நான் கடவுளின் மாமிசத்தையா காவிச் செல்கின்றேன்? கடவுளின் மாமிசத்தையா புசிக்கப் போகின்றேன்? அருபமான உயிரைக் கடவுள் உடலுக்குள் புகுத்திய போது, ஒரு உடல் இன்னொரு உடலைப் புசித்துப் பசியாறும் என நினைத்திருப்பாரா?

கேள்விகள் தொடரியாக என் மனதில் எழுந்தன. ஒரு கேள்வியின் புதிரை அவிழ்ப்பதற்குள் இன்னொரு புதிராக இன்னொரு கேள்வி வந்துவிடுகின்றது. கடவுள் உலகத்தைக் கேள்விகளால்த்தான் ஆண்டுகொண்டிருக் கிறார். கேள்விகள் நிறைந்திருப்பதால்த்தான் மனித இருப்பில் மகத்துவத்தின் சாயல் படிந்துவிடுகின்றது. மனிதன் என்பவன் உடலோ உயிரோவல்ல பேரண்டத் தின் பெரும் இருப்பு. தத்துவத்தின் வித்திலிருந்து சடைத்து வளர்ந்த படியிருந்தது என் சிந்தனை.

சற்று முன் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்த கோழியின் உடலுக்கும் இராணுவத்தினர் தொங்கவிட் டிருந்த எனது உடலுக்கும் என்ன வேறுபாடு இருக்கக் கூடும். உடல் என்ற பொது விதிதான் வேறுபாடுகள் எல் லாவற்றையும் விடவும் பெரியது. உடலற்ற உயிரின் ஜீவிதமாக மனித வாழ்வு இருந்திருந்தால் எவ்வாறு இருந் திருக்கும்? இந்த பௌதீக உலகில் ஒவ்வொன்றும் பௌதீகந்தான். ஒரு பௌதீகம் இன்னொரு பௌதீ கத்தை ஆளுகின்றது. அதிகாரம் செலுத்துகின்றது. அடி மைப்பட்டிருக்கின்றது. இராணுவத்தின் அதிகாரத்தின் கீழ் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்த நானும் கசாப் புக் கடைக்காரனின் கத்தியின் முன் தலை கீழாகத் தொங் கிக்கொண்டிருந்த கோழியும் ஒன்றுதான். ஒரு அதிகாரத் திலிருந்து விடுபட்டவன் அல்லது ஒரு அதிகாரத்துக்கு உட்பட்டவன் இன்னொன்றை அதிகாரப்படுத்துவதில் இன்பம் காண்கின்றான். கோழி என் நாவுக்கு இன்பமா கின்றது. இந்த நிலையில் கருணை, இரக்கம், அன்பு என் பவையெல்லாம் என்ன? புறத்தே தொங்கிக் கொண்டிருக் கும் சொற்கள்தான். என் கால்களில் கட்டப்பட்டிருந்த கயிறு, தொண்டையில் ஏறி கழுத்தை இறுக்குவது போலவிருந்தது. இன்னும் இராணுவத்தினர் சூழ்ந்து நின்று குண்டாந்த தடியால் என் முதுகைப் பிளப்பதான உணர்வு. நான் என் உள்ளங்காலை மேலுயர்த்திப் பார்த்தேன். தழும்புகள் இன்னுந்தான் இருக்கின்றன. கால்களின் உணர்வு மரத்து உடல் முழுதும் பரவுவது போலிருந்தது. நடை தடுமாறுவதான உணர்வு மேலிட் டது. தெருவுக்கு வந்த போது அனல் காற்று முகத்தில் அறைந்தது.

"ஏனப்பா இவ்வளவு நேரம்" என்ற கேள்வியோடு என்னை எதிர்கொண்ட மனைவி பார்ஸலைப் பெற்றுக் கொண்டாள். நான் எதுவும் சொல்லவில்லை. நேராகக் குளியறைக்குள் சென்றேன். வெயிலின் சூடு கண்களி னால் ஆவியாகி வெளியேறுவது போல இருந்தது. சூடு தணியக் குளித்தேன்.

எல்லோரும் மனைவி வைத்த கோழிக் கறியைப் புகழ்ந்தவாறே உண்டு கொண்டிருந்தனர். குழந்தைகள் காரமாக இருப்பதாகவும் வளர்ந்தவர்கள் காரம் போதாது என்றும் சொல்லிக் கொண்டே சுவைத்தனர். நான் கடைசியாகத்தான் சாப்பிட அமர்ந்தேன். கோழிக் கறியில் மனைவியின் கைப்பக்குவம் தெரிந்தது. நான் சுவைத்துச் சுவைத்து கடவுளின் மாமிசத்தைத் சாப்பிடத் தொடங்கினேன்.

■

கண் கெட்ட பின்னே சூரிய நமஸ்காரம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துநர்கள், சந்தை வியாபாரிகள், தச்சு, மேசன் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் என அன்றைக்கு உழைத்து, வாழ்க்கையைக் கொண்டு செல்பவர்கள் இவர்கள்.

கணிசமானோர் சுயதொழில்களில் ஈடுபடுபவர்கள். சிறு கைத்தொழில்களை மேற்கொண்டு, அந்த உற்பத்திகளை விநியோகிப்பதன் மூலம் வருமானத்தை ஈட்டும் கைத்தொழில் முயற்சியாளர்கள், சிறு பண்ணையாளர்கள் என கிடைக்கும் சொற்ப வருமானத்தில் தமதும், தமக்குக் கீழ் பணி புரியும் தொழிலாளர்களதும் வாழ்க்கையைக் கொண்டு நடத்த வேண்டியுள்ளவர்களாய் இருக்கின்றனர்.

இவ்வாறே, அரச உத்தியோகம் பார்ப்போர், ஒழுங்குபடுத்தப்பட்ட பெரு வணிக நிறுவனங்களில் பணி புரிபவர்கள் தவிர நாட்டில் உள்ள பெரும்பாலானோர் நாடு முடக்கப்பட்டால் பெரிதும் பாதிக்கப்படும் நிலை உள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு

வரப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரப் பாதிப்பு ஒரு புறம் ஏற்படும் அதேவேளை மேற்சுட்டிய பெருமள வானோரின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலையை யும் நன்கு உணர்ந்ததாலேயே அரசாங்கத் தரப்புகள் கேளாச் செவியராக இருக்கின்றனர்.

எந்தளவுக்கு கொரோனாவின் எதிர்விளைவுகள் பாரதூரமானவையோ அந்தளவுக்கு நாட்டை முடக்குவதால் ஏற்படும் விளைவுகளும் பாரதூரமா னவை என்றே அரசாங்கம் கருதுகிறது. இப்பத்தி எழுதப்படும் போது புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வல 'இந்த மக்கள் பற்றி யாராவது சிந்தித்தீர்களா?' என செய்தியாளர்களைப் பார்த்து எதிர்க் கேள்வி கேட்டிருந்தார். செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பிடி கொடுக்காமல் சாமர்த்தியமாகப் பேசக் கூடிய ஒருவரையே சுகாதார அமைச்சராக்கி இருக்கிறார்கள். முன்னைய சுகாதார அமைச்சருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் வகையிலும், ஊடகங்களின் வாயை அடக்கக் கூடிய வகையிலும் இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

'வைத்திய நிபுணர்களின் உத்தியோகபூர்வ அறிவிப்பு எமக்குக் கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைத்தால் நாட்டை முடக்கத் தயாராக உள்ளோம்' என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமண தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலாக மருத்துவ சங்கங்கள் போர்க் கொடி தூக்கி, எதிர்க் கருத்து வெளியிட்டன. தாம் பல முறை ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி விட்டதாகவும், இதோ இப்போது மறுபடியும் கடிதம் அனுப்புவதாகவும் அவை அறிவித்தன.

பாராளுமன்றத்திலும் இது தொடர்பில் பலரும் பேசியுள்ளனர். இம்முறை ஆளுந்தரப்பின் கூட்டணிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவும் குரலெழுப்பி உள்ளார். கூடவே கொரோனாவின் பாதிப்பை நன்குணர்ந்த, அதன் வலியை அனுபவித்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் நாட்டை இரு வாரங்களுக்காவது முடக்குங்கள் என்று கேட்டுள்ளார். அரசாங்கம் எதுவும் செய்யாவிட்டால் மக்களே நீங்களாக முடங்குங்கள் எனக் கோரி உள்ளார்.

முன்னதாக இதே கோரிக்கையை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கமும், வைத்திய சங்கங்களும் முன்வைத்து உள்ளன. அவர்களின் கோரிக்கையை ஏற்று பல நகரங்களில் வர்த்தகர்கள், சிவில் சமூகத்தினர் இணைந்து சுய முடக்கத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் செய்திகள் வெளிவருகின்றன. இப்போது அரசியல்வாதிகளும் இதே கோரிக்கையை முன்வைத்துள்ளனர். மக்கள் விலைவாசி உயர்வுக்கு எதிராக வீதிக்கு இறங்கியது போல, அதே மக்கள் சுயமாகவும் முடங்க முனைந்தால் அரசாங்கம் தொடர்பான நம்பிக்கை கேள்விக்குறியாகும் நிலைமை யும் உள்ளது.

மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் தயாரில்லை. அதனால் மக்கள் தன்னெழுச்சியாகக் கிராமங் கிராம மாக சுய முடக்கத்தை நோக்கிச் செல்கிறார்கள் என்ற செய்தி எதிர்க் கட்சிகளுக்கு மிக வாய்ப்பானது. பௌத்த சிங்களத் தேசியம் என்னும் மூலதனத்தில் கட்டியெழுப்பப்பட்ட அரசாங்கம் கொரோனாப் பேரிடரால் வறிதாகி மக்களின் செல்வாக்கை இழந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆகவே, அரசாங்கம் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தத்தளிக்கிறது. ஒரு புறம் பொருளாதார நெருக்கடிகள் ஏழை மக்களின் வாழ்க்கையை இருண்ட பாதைக்குக் கொண்டு சென்று விட, அதனால் விளையும் சமூகப் பாதிப்புக்களை எதிர்கொள்வது எவ்வாறு என்ற கேள்வி, மறுபுறம் கொரோனா பேரிடர் சுகாதாரக் கட்டமைப்புக்களின் வீழ்ச்சிக்கு வழி கோலி, சுகாதாரத் தரப்புக்கள் கையை விரிக்கலாம். இதனால் ஏற்படும் பேரவலம் நாட்டைப் படுகுழிக்குள் தள்ளுவதோடு எதிர்க் கட்சிகளின் மேலெழுச்சிக்கு வித்திடுமோ என்ற அச்சம். இவற்றுக்கு நடுவில் அல்லாடுகிறது அரசாங்கம்.

எவ்வாறெனினும் உலகளாவிய ரீதியில் கொரோனா மரணங்களின் வீதம் உயர்வான நாடாக இலங்கை மாறிக் கொண்டுள்ள சூழலில் பொது முடக்கத்தை அமுல்படுத்த வேண்டிய நிலையிலேயே அரசாங்கம் உள்ளது. சுமார் ஒரு கோடி 19 இலட்சம் பேருக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகின்ற போதிலும், இரண்டு தடுப்பூசிகளையும் போட்டவர்கள் தொகை குறைவானதாகும். எனவே, அரசாங்கம் எதிர்பார்ப்பதை விட தொற்று வேகமும், மரணவேக மும் அதிகரித்துச் செல்லும் நிலையில் பொது முடக்கம் என்பது கண் கெட்ட பின்னே செய்யும் சூரிய நமஸ்காரம் போன்றதாகவே இருக்கப் போகிறது. ■

அதி அபாய மாவட்டமும் பொது மக்களும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"உங்களுக்கு நோய்த்தொற்று உள்ளதாக அன்ரிஜன் முடிவு வந்தது. அதனை உங்களுக்கு அறிவிக்க மறந்துவிட்டோம். மன்னித்துக்கொள்ளுங்கள்" எனச் சுகாதாரக் களப்பணியாளர்கள் பதிலளித்ததுடன் அவரை பாதுகாப்பாக வைத்தியசாலைக்கு அழைத்து வந்துள்ளனர். அத்தோடு அன்ரிஜன் பரிசோதனையில் தொற்று என உறுதிப்படுத்தப்பட்ட பலர் தற்போது வீடுகளில் உள்ளனர். இவர்களைக் கண்காணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. தொற்றாளர்கள் அதிகரிக்க அதிகரிக்க சுகாதாரத் துறையினரின் நெருக்கடியும் அதிகரித்துச் செல்கிறது. அத்தோடு ஏனைய நோயாளிகளின் மீதான கவனமும், சிகிச்சையும் குறைவடைந்து முழுக் கவனமும் கொரோனா பக்கம் திரும்புகிறது. கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக நீரிழிவு, இதய நோய், தைரொய்ட் போன்ற மாதாந்த கிளினிக் நோயாளிகளை மருத்துவர்கள் பரிசோதிக்காது மருந்துகளை மீள மீள எழுதி அனுப்பி வருகின்றார்கள் என அவர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தின் சனத்தொகையில் மேற்படி நாளாந்த கொரோனா தொற்றாளர்களின் அதிகரிப்பு என்பது உண்மையில் மாவட்டம் ஒரு அனர்த்த நிலைமைக்குள் சென்றுக்கொண்டிருக்கிறது என்பதன் சமிஞ்சையே.

அதனால் அனாவசியமாக வீடுகளிலிருந்து வெளியே வராமல், அனாவசிய கூட்டங்கள், திருவிழாக்கள், களியாட்டங்கள் என்பவற்றில் ஈடுபடாமல் எம்மை நாமே வீடுகளில் சுயதனிமைப்படுத்திக்கொள்வதே தற்போதைய காலத்தின் தேவையாகும். அவசியம் கருதி வெளியே வரும் சந்தர்ப்பங்களில் உரியவகையில் முகக்கவசம் அணிந்து வருவதுடன், மற்றையவர்களுக்கு அருகில்



செல்லாது இரண்டு மீற்றர்களாவது இடைவெளி பேணுவது மற்றும் அடிக்கடி சவர்க்காரம் கொண்டு கைகளை நன்கு கழுவு வது ஆகிய சுயபாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். இதுவே கொரோனா எம்மிடம் தொற்றிக்கொள்வதையும் எம்மிடமிருந்து பிறருக்கு பரவுவதையும் தடுக்கும்.

கொரோனா மனிதரில் இருந்தே மனித ருக்கு பரவுகிறது. எனவே நாம் ஒவ்வொருவ ரும் எமது சொந்தப் பாதுகாப்பினை உறுதிப் படுத்துவதே நோய்த்தொற்றிலிருந்து அவர்களையும் அவர்களது அன்பிற்குரிய வர்களையும் கொரோனா ஆபத்திலிருந்து காப்பாற்றும்.

ஆகவே, நாம் எம்மையும் எமது அன்பிற்குரியவர் களையும் மரணத்திலிருந்து பாதுகாக்க வேண்டுமானால் கொரோனா எமக்குத் தொற்றுவதையும் எம்மிலிருந்து எமது அன்பிற்குரியவர்களுக்கு தொற்றுவதையும் தடுப்பதே தற்போதுள்ள ஒரே வழியாகும்.

■

வர்ணம் தீட்டுங்கள் பரிசை வெல்லுங்கள்

முழுப்பெயர்:- .....

தரம்:- .....

கற்கும் பாடசாலை:-.....

விலாசம்:- .....

.....

தொலைபேசி இலக்கம்:-.....

பிள்ளைகளே!

உங்கள் எண்ணங்களிலிருந்து வண்ணாங்கள் ஆக்கி எமக்கு அனுப்புங்கள். அழகான வண்ணத்துக்குப் பரிசும் கௌரவமும் உண்டு. நீங்கள் படத்துடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புங்கள். அழகான வண்ணப்படத்திற்குரிய பரிசை உங்களுக்காக வாண்டு மாமா தருகிறார்.

அனுப்பவேண்டிய இறுதித் திகதி ***25.08.2021***

அழகான விலங்கு

ஒரு நாட்டில் ஓர் இளவரசி இருந்தாள். அவள் ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றாள். படைகளைப் பிரித்து நடுக்காட்டில் மாட்டிக் கொண்டாள். காட்டு விலங்குகள் அவளைப் பிடித்து விட்டன. அரச னான சிங்கத்திடம் கொண்டு சென்றன. "பேரழகியே.. நான் கேட்கும் கேள்விக்கு நீ சரியான பதில் சொன்னால் உன்னை விட்டு விடுவேன்" என்றது சிங்கம் . "கேள்வியைக் கேளுங்கள்" என்றாள் இளவரசி. இந்தக் காட்டில் வாழும் விலங்குகளில் அழகானது எது? என்பதை காரணத்தோடு சொல்லுங்கள்" என்று சிங்கம் கூறியது. இளவரசி கொஞ்ச நேரம் யோசித்தாள். குரங்கைக் காட்டி "குரங்கு தான் அழகானது" என்றாள். அந்த பதில் அனைத்து விலங்குகளுக்கும் அதிர்ச்சியாக இருந்தது. "காரணத்தைச் சொல்லுங்கள் இளவரசி" என்றது சிங்கம். "நீங்கள் என்னைப் பேரழகி என்றீர்கள் . மனித குலமே குரங்கிலிருந்துதானே உருவானது அதனால் குரங்குதானே அழகானது" என்றாள் இளவரசி. பதிலை கேட்டுச் சிங்கம் மகிழ்ந்தது. இளவரசியை விடுதலை செய்தது.

மு.கோகனன்
தரம் 7
யா/இந்துக் கல்லூரி

நீர் நல்ல நீர்
தாகம் தீர்க்கும் நீர்
நிறமற்ற நீர்
சுவையற்ற நீர்
மணமற்ற நீர்
தினமும் நாம் பருகிடுவோம்
உயிருடன் வாழ்ந்திடுவோம்.

பி.டக்ஷிஜா



கடந்த வர்ணம் தீட்டும் போட்டியில்
பரிசை வெல்பவர்
செல்வி அ.திபிகா மெர்லின்
தரம் - 04
மு/புதுக்குடியிருப்பு றோ.க.த.க.பாடசாலை

பாராட்டு பெறுபவர்கள்

சி.ஜான்சி
தரம் - 07
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

க.கிரிசானா
தரம் - 08
யா/தும்பளை சிவப்பிரகாசா மகா வித்தியாலயம்

ம.ராதை
தரம் - 03
யா/புனிதகோன் பொஸ்கோ ம.வி

க.சபின்
கலைவாணி முன்பள்ளி
ஆழியவளை

இ.அபிவர்ஷா
தரம் - 04
யா/வட இந்து ஆரம்பப் பாடசாலை

ர.அனோஜனன்
தரம் - 08
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்

கடவுள் சொல் நடப்போம்

ஒரு காட்டிற்கு ஒரு புது நோய் வந்தது. அப் போது அந்தக் காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாம் இறந்து கொண்டு இருந்தன. ஒரு நாள் அந்தக் காட்டிற்கு ஒரு மனிதன் வந்தான். அந்தக் காட்டில் உள்ள நோய் அவனுக்கும் வந்தது. அப்போது அவன் அந்த நோய் வந்ததற்கான காரணத்தை அறிய ஒரு புலியைச் சந்தித்துக் கேட் டான். இந்த நோய் ஏன் வந்தது என புலி கூறியது. "இங்கு உயிர் வாழ்கின்ற அனைத்துமே கடவுளின் சொல் கேட்பதில்லை" என. உடனே அந்த மனிதன் அனைத்து உயிர்களையும் பார்த்து "இனி மேல் கடவுளின் சொல் கேட்டு நடப்போம் அப்பொழுதுதான் நாம் உயிர் வாழ முடியும்" என்றான். பின்னர் அனைவரும் கடவுள் சொல் கேட்டு நடந்து ஆரோக் கியமாக வாழ்ந்தார்கள்.

உ. சாய் கார்த்திகன்
தரம்- 2C
யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை

பிளாஸ்டிக் தலைவலி!

நாம் வாழும் உலகின் தலைப்பகுதியில்தான் ஆர்க்டிக் கடல் உள்ளது. அந் தக் கடல் பகுதியில் அதிகமான மக்கள்தொகை இல்லை! ஆனால் ஒரு விசித்திரமான விஷயத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள். அதா வது சிறிதும் பெரிதுமாக சுமார் 300 மில்லியன் பிளாஸ் டிக் குப்பைகள்! உள்ளது என.

இந்தக் குப்பைகள் எப்படி ஆர்க்டிக் கடலுக்கு வருகின் றன என்பது பற்றி ஆராய்ந்த போது ஒரு உண்மை தெரிய வந்தது. உலகின் அனைத் துக் கடல்பகுதிகளிலும் பிளாஸ்டிக் குப்பைகள் விழுகின்றன. கடலுக்குள் மின்காந்த சக்தியினால் ஒரு இழுவைப் பாதை ஏற்படுகி றது. அந்தப் பாதையில் புகும் பிளாஸ்டிக் குப்பைகள் அனைத்தும் ஆர்க்டிக் பகு தியை அடைகின்றனவாம்.

அது சரி, அந்த மின்காந்த இழுவைப் பாதை எதனால் ஏற்படுகிறது என்று ஆராய்ந்த னர். சூரிய வெப்பம், கடலின் மேல் வீசும் காற்று, பூமியின் சுழற்சி ஆகியவற்றால் இந்த மின்காந்த இழுவைப் பாதை அமைகிறதாம்! பிளாஸ்டிக் குப்பைகள் பல ஆண்டுகள் பயணம் செய்து ஆர்க்டிக்கை அடைகின்றன. பூமியின் தலைப்பகுதிக்கு இப்போது மிகவும் தலைவலி!

சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்

தீம்புனல்
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 21.08.2021 அன்று ஜெயசிறி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது,